விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 325 புரட்டாதி 31ஆம் நாள் புதன்கிழமை 17 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# உண்மைகளை ஏற்று அரசு பொறுப்புக்கூற வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 17

வடக்கில்இருப்பவர்களுக்குஆணைக் குழுமீதுநம்பிக்கைஏற்படவில்லை. நம்பிக்கை ஏற்பட வேண்டியிருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தாமாக காணமல் போக வில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட் டிருக்கின்றார்கள். இந்த உண்மையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட் >> 28

எதிர்கால அரசியல் நகர்வுகள்

## முதலமைச்சரின் நிலைப்பாடு எதிர்வரும் 24இல் வெளியாகும்

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் எதிர்வரும் 24ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகின்றது. 24ஆம் திகதி காலையில் தனது எதிர்கால அரசியல் நிலைப்பாடு தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மக்களுக்கு அறிவிக் கவுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி காலை >> 29

## விக்கியின் தலைமையில் மாற்று அணிக்கு முயற்சி

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கூறுகின்றது

வவுனியா, ஒக். 17

வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தலைமையில் மாற்று அணியை விரை வில் உருவாக்குவோம் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள் ளார்.

வவுனியா சிவபுரத்தில் நேற்று நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது 2015ஆம் >> 29

## கூட்டமைப்பின் ஆதரவு பாதீட்டுக்குக் கிடைக்கும்

### அமைச்சர் மனோ நம்பிக்கை



கொழும்பு, ஒக். 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் என்று தேசிய ஒருமைப்பாடு, நல் லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் >> 28

## அரசியல் கைதிகளுக்கு தீர்வு தருவார் மைத்திரி

### இரா.சம்பந்தன் நம்பிக்கை



கொழும்பு, ஒக். 17

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக இன்று நடத்தப்படவுள்ள சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்வை >> 29

விக்கிக்கு எதிரான வழக்கின்

## ஆட்சேபனைகளின் மீதான கட்டளை டிசெ.10ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் உள்ளிட்ட 3 அமைச் சர்களுக்கு எதிராகத் தாக் கல் செய்யப்பட்டுள்ள நீதி மன்ற அவமதிப்பு வழக்கில் முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகள் தொடர் பில் நீதிமன்றின் கட்டளை டிசெம்பர் 10ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேன்முறையீட்டு நீதிமன் றில், நீதியரசர்களான ஜானக டி சில்வா, குமுதினி விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரனின் சட்டத்தரணி தனது ஆட்சேபனை >> 29

## டெனிஸ் தொடர்ந்த வழக்கின் விசாரணை பெப்.11 ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மைக்கு எதிராக பா.டெனீஸ் வரன் தாக்கல் செய்த வழக் கின் மீதான விசாரணை பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகும் என்று மன்று நேற்று அறிவித்தது.

வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பா.டெனீஸ்வரன் மேன்மு றையீட்டு நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்திருந்தார். ஜூன் மாதம் 29ஆம் திகதி இடைக்காலக் >> 29

## பொருளாதாரத்தைக் காக்க இறக்குமதிகளுக்குத் தடா

### களத்தில் இறங்கினார் மைத்திரி

கொழும்பு, ஒக். 17

உலக சந்தையில் ஏற்பட் டுள்ள நிச்சயமற்ற நிலை காரணமாக இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளா தாரச் சவால்களுக்குத் தீர் வாக, இறக்குமதியை கட் டுப்படுத்தக்கூடிய பொருள் களைக் கண்டறிந்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத் திரிபால சிறிசேன நிதிய மைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச தலைவர் தலைமை யில் நேற்று முற்பகல் அரச தலைவரின் >> 29

## காணிகளை விடுவிக்க கடற்படையினர் மறுப்பு

### இராணுவம் சாதக நிலைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புத் தரப்பின ரின் ஆக்கிரமிப்பில் உள்ள காணிகள் தொடர்பில் ஆராயும் நேற்றைய கலந்து ரையாடலில், கடற்படையினர் தமது வச முள்ள தனியார் காணிகள் உள்ளிட்ட எந்தவொரு காணிகளையும் விடுவிப்ப தற்கு இணங்கவில்லை. இராணுவத்தி னர், தமது வசமுள்ள தனியார் காணி களை விடுவிப்பதற்கு சாதகமான நிலைப் பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வாரம் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான சிறப்புச் செயலணி யின் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட் டத்தில் வடக்கு கிழக்கில் உள்ள தனியார் காணிகளை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கவேண்டும் >> 29

## போத்தலெறிந்து பேருந்தின் மீது தாக்குதல்

வடமராட்சி, ஒக். 17

வவுனியாவிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்த இலங்கைப் போக் குவரத்துச் சபையின் பேருந்து மீது இனந்தெரி யாதோர் வெற்றுப் பியர் போத்தலை எறிந்து தாக் குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இரவு 9 மணியள வில் >> 29

## மின்சாரம் பாய்ந்து குடும்பஸ்தர் சாவு

### கடந்த ஒரு மாதத்தில் வவுனியாவில் 4ஆவது சம்பவம்

வவுனியா, ஒக். 17

வவுனியாவில் மின்சாரம் தாக்கியதில் குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார்.

வீரபுரத்தைச் சேர்ந்தவரும் கிளிநொச்சியில் வசித்து வருபவருமான பெ.ஜெகதீஸ்வரன் (வயது - 43) என்ற இரண்டு பிள்ளை >> 29


Mobitel Master unlimited
நாடு முழுவதும் Unlimited Calls
மாதாந்தம் ரூபா.1,500/-
Sri Lanka Telecom Mobitel
1717



# இந்த பிள்ளைகள் எல்லோரும் புலிகள் பெற்றெடுத்த குட்டிகள்

## இயக்குநர் பாரதிராஜா தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 17
இந்த பிள்ளைகள் புலிகள் பெற்றெடுத்த குட்டிகள் மாதிரி என இயக்குநர் பாரதிராஜா கிளிநொச்சியில் தெரிவித்தார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் கணனிக்கூடம் நேற்றைய தினம் மாணவர் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 11 மணியளவில் பாடசாலை முதல்வர் பெருமாள் கணேசன் தலைமையில் இடம்பெற்றது. லண்டனில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்தினரின் 1.5 மில்லியன் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குறித்த கணினிக்கூடம் நேற்றைய தினம் மாணவர் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

குறித்த கட்டடத்தினை தென்னிந்திய திரையுலகினர் திறந்து வைத்தனர். இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இயக்குநர் பாரதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் : அன்றலந்த மல்லிகை போல் இந்த பிள்ளைகள். இது புலிகள் பெற்றெடுத்த குட்டிகள் மாதிரி இருகின்றனர் கொழுத்தும் வெய்யிலில் எங்கே அந்த மலர்கள் எல்லாம் வாடி கிடக்கும் என்று வந்தால் எவ்வளவு சுடெரித்தாலும் நாங்கள் வாடமாட்டோம் என்று நிமிர்ந்து நிற்கின்றன குட்டிகள். புறந்தள்ளி ஓடிவிடுமோ என்று பார்த்தேன் எதையும் எதிர்க்கொண்டு இந்தச் சூழலில் நாங்கள் ஜீவிப்போம் என்று இந்தப் புலிகுட்டிகள் இருகின்றன. கல்லூரிகள் பொது மேடைகள், இல்க்கிய மேடைகளில் பேசலாம் ,ஆனால் நான் இங்கே என்ன பேசுவது? எல்லாம் குட்டிகளாக இருகின்றனர். ஆசிரியர்கள் இங்கு முக்கிய மானவர்கள் ஆசிரியர்கள் தான் உலகத்தின் கதவுகளை எல்லாம் திறந்து விடுகின்றனர். ஆசிரியர்களை மதிக்கவேண்டும் இந்தச் சிறுவயதிலேயே நாங்கள் எதிர்காலத்தில் என்னவாக வேண்டும் என்று தீர்மானித்து, அதற்கேற்றவாறு படிக்க வேண்டும். மீண்டும் ஒருமுறை இந்தத் தேசத்தில் உங்களைச் சந்திப்பேன் எனத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந்திய திரையுலக தயாரிப்பாளர்களான பாரதிராஜா, தயாரிப்பாளரும் நடிகருமான பாக்கியராஜ், இளம்நடிகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6)

## கிளி. மருத்துவமனையில்

# இரண்டாவது மகப்பேற்று நிபுணர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

கிளிநொச்சி, ஒக் .17
கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நேற்றையதினம் இரண்டாவது மகப்பேற்று மருத்துவ நிபுணரும் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் கடந்த சில மாதங்களுக்கு முன் மகப்பேற்று மருத்துவ நிபுணர் இல்லாத நிலையில் கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த மாதம் 17 ஆம் திகதி மத்திய சுகாதார அமைச்சினால் மகப்பேற்று மருத்துவ நிபுணர் டி.எல்.டபிள்யூ.குணவர்த்தன நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக மத்திய சுகாதார அமைச்சினால் மேலும் ஒரு மகப்பேற்றியல் நிபுணர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.




இதன்படி மருத்துவக் கலாநிதி எம். ஆர். விதானதந்திரிகே நேற்று கிளிநொச்சி .மருத்துவ மனையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நியமனத்துடன் கிளிநொச்சி மருத்துவமனையில் இரண்டு மகப்பேற்றியல் நிபுணர்கள் கடமையில் இருப்பார்கள் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (214)

# வரவு செலவுத் திட்டத்தைக் கூட்டமைப்பு ஆதரிக்குமாம்

கொழும்பு, ஒக். 17
தமிழ்த்தேசியக்கூட்டமைப்புவரவுசெலவுத்திட்டத்தை ஆதரிக்கும் என்று தான் நம்புவதாக தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப்பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அரசியல் கைதிகள் சம்பந்தமான விசாரணைகள் சரியாக நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

கைதிகளுக்கு கட்டளை வழங்கியவர்கள் வெளியில் இருப்பதாகவும், அப்பாவிகள் சிறைச்சாலைகளில் இருப்பதாகவும் அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (5)

# பேருந்து மீது தாக்குதல்

வடமராட்சி, ஒக். 17
வவுனியாவிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்த இலங்கைப்போக்குவரத்துச்சபையின் பேருந்து மீது இனந்தெரியாதோர் வெற்று பியர் போத்தல் எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு 9 மணியளவில் துன்னாலை முள்ளிச்சந்திப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாரதி ஆசனத்துக்கு முன்பக்கம் உள்ள கண்ணாடிகள் சேதமடைந்தன. சம்பவத்தில் சாரதிக்கோ ஏனைய பயணிகளுக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை. (5,173)

# மூதாட்டியிடம் சங்கிலி பறிப்பு

தென்மராட்சி, ஒக். 17
வீட்டில் அமர்ந்திருந்த மூதாட்டியிடம் முகவரி கேட்பது போல நடித்து அவர் அணிந்திருந்த 2 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை இரண்டு நாகரிக உடையணிந்த ஆசாமிகள் அபகரித்துச் சென்றுள்ளனர் .

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் நாவற்குழி தச்சன் தோப்பில் இடம்பெற்றுள்ளது.

நாகரிக உடையணிந்த இருவர் உந்துருளியில் வந்து ,தச்சன்தோப்புப் பகுதியில் உள்ள வீடொன்றில் முகவரியை விசாரித்துள்ளனர். வீட்டுக்காரர் முகவரியில் குறிப்பிட்டுள்ளவரைத் தனக்குத் தெரியாது என்றும் அயல் வீடடில் உள்ள மூதாட்டியிடம் கேட்குமாறும் கூறியுள்ளார்.

மூதாட்டியிடம் சென்றவர் குறித்த பெயரைக் குறிப்பிட்டு ( சிவா ) என்பவரைத் தெரியுமா எனக் கேட்டுள்ளார். வீட்டுப் படியில் அமர்ந்திருந்த மூதாட்டி தனக்குத் தெரியாதெனக் கூறியுள்ளார். அவ்வேளையில் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு வெளியே வர அங்கு காத்திருந்தவர் உந்துருளியில் ஏற்றிக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

சம்பவத்தை அறிந்து அந்தப் பகுதி இளைஞர்கள் உந்துருளிகளில் துரத்திய போதிலும் இருவரும் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் மீசாலை வடக்கில் உள்ள கடையொன்றில் நின்ற பெண் வர்த்தகரிடம் உந்துருளியில் வந்த இருவர் முகவரி கேட்பது போல நடித்து அவர் அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது . (9)

# முசலிப் பிரதேச செயலரை மாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

மன்னார்,ஒக் .17
மன்னார் முசலிப் பிரதேச செயலரை உடன் மாற்றக்கோரி முசலிப் பிரதேச மக்கள் சார்பாக சிலர் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதுடன், மன்னார் மாவட்டச் செயலரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

நேற்று செவ்வாய்கிழமை காலை பத்து மணி தொடக்கம் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஒன்று திரண்ட முசலிப் பிரதேசத்தைச் சார்ந்த முஸ்லிம் மக்கள் சுமார் முன்னூறுக்கு உட்பட்ட ஆண் ,பெண் இருபாலரும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தின்போது முசலிப் பிரதேச செயலருக்கு எதிரான வாசகங்கள் கொண்ட பதாதைகளை ஏந்தி,அவருக்கு எதிரான கோசங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஒன்றரை வருடங்களாக இந்த முசலிப் பிரதேச செயலர் இந்தப் பிரதேச செயலகத்தில் கடமைபுரிந்து வருகின்றார். இவர் ஏற்கனவே கிளிநொச்சி, பூநகரிஆகிய



பிரதேசங்களில் பிரதேச செயலராக கடமை புரிந்த வேளையில் நிர்வாக முறைகேடு, ஊழல் என்பவற்றின் காரணமாக மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இடமாற்றம் பெற்றவராவார்.

இந்த முசலிப் பிரதேச செயலகமானது முஸ்லிம், தமிழ், கத்தோலிக்க மக்கள் இரண்டறக் கலந்து வாழும் பிரச்சினையில்லாத பிரதேச செயலகமாகும்.

1990 ஆம் ஆண்டு இந்தப் பகுதி மக்கள் ஒட்டு மொத்தமாக இடம்பெயர்ந்தபின் மீண்டும் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேறியவர்கள்.

ஆனால் பலர் வீட்டுப்பிரச்சினை, கல்வி, பௌதீகவளப் பற்றாக்குறை, காணிப்பிரச்சனைகள் மற்றும் தொழில்ப் பிரச்சனைகளை எதிர்த்து கொண்ட மக்களாக நாங்கள் வாழ்ந்து கொண்டு வருகிறோம். இங்கு முன்பு கடமைபுரிந்த பிரதேச செயலர்கள் மக்களுக்கு உதவும் நோக்குடன் செயற்பட்டு வந்தவர்கள். ஆனால் தற்பொழுது கடமைபுரியும் பிரதேச செயலர் ஒரு அரச அதிகாரி செய்ய முடியாத, செய்யத்துணியாத அரசுக்கும் அரச அதிகாரிகளுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் அவலட்சணமான கேவலமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இவர் மேல் 12 குற்றச்சாட்டுக்களை முன்னிருத்தி இவ்வாறான அதிகாரியை உடன் இந்த இடத்திலிருந்து மாற்றக்கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

மனுவை ஏற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ.மோகன்ராஸ் ஒரு பிரதேச செயலரை மாற்றும் அதிகாரம் எனக்குக் கிடையாது அது உள்நாட்டு அலுவலக அமைச்சுக்கே உரியது. இருந்தும் உங்கள் பிரச்சினை சம்பந்தமாக தான் உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக அவர்களுக்குத் தெரிவித்தார். இந்த ஆர்பாட்டத்தின்போது முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான முத்தலிப்பாவா பாறூக்கும் கலந்து கொண்டார். (60,56,213)

# மரண அறிவித்தல்



# ஏகாம்பரம் பத்மராஜா (இராசன்)

**தோற்றம்** 27.11.1969 **மறைவு** 15.10.2018

நெடுந்தீவைப் பூர்வீகமாகவும், 246, வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் பத்மராஜா (இராசன்) கடந்த (15.10.2018) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் ஏகாம்பரம் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை (மணி) தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயாவின் அன்புக் கணவரும் வினோஜிகா, ஜீவிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் லிங்கம், ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நந்தகுமார் (யாழ். போதனா வைத்தியசாலை, சுகாதார ஊழியர்), றஞ்சி ஆகியோரின் மைத்துனரும் தசாகன், வர்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருசன், சனோசியன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



**லிங்கம் களஞ்சியம்,**
**லிங்கம் தொலைத்தொடர்பகம்,**
**246, வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

தகவல் : குடும்பத்தினர்
**021 222 3312, 077 986 2659**

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு 260 மெற்றிக் தொன் உ. கிழங்கு


## மாவட்ட செயலக விவசாயப் பிரிவு தகவல்

**யாழ்ப்பாணம், ஒக். 17**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த முறை 260 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றுமாவட்ட செயலக விவாசாய பிரிவு தெரிவித்துள்ளது.**



இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
கடந்த வருடத்தில் இருந்து உருளைக் கிழங்கு பயிரிடுவதில் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மானிய அடிப்படையில் விதை உருளைக் கிழங்குகள் கடந்த போகத்துக்கு வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் விவசாயிகள் இம்முறையும் விதை உருளைக்கிழங்குத் தேவை என்று தெரிவித்திருந்தனர். இதையடுத்து இம்முறையும் விதை உருளைக் கிழங்குகளை வழங்குவதற்கு 37 மில்லியன் ரூபாவை விவசாய அமைச்சு வழங்கியுள்ளது. உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் மிக அதிகளவில் உருளைக் கிழங்குகள் பயிரிடப்படவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த முறை260மெற்றிக்தொன்விதை உருளைக் கிழங்கு வழங்கப்படவுள்ளது. நவம்பர் மாதம் கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக இந்த விதை உருளைக்கிழங்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)



## பருத்தித்துறை சபையின் அம்பன் அலுவலகத்தின் வாசிப்புமாத போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 16
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபை அம்பனிலுள்ள குடத்தனை உப அலுவலகத்தால் அலுவலக எல்லைக்கு உட்பட்ட தரம் ஒன்று முதல் ஜி.சி.ஈ. உயர்தரம் வரையான மாணவர்களுக்கான வர்ணம் தீட்டுதல், சொல்வது எழுதுதல், கட்டுரை, சிறுகதை, கவிதைப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டுள்ளன.
வருடாந்தம் நடத்தப்படும் இந்தப் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (4)

## பாரதி விழா

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க் கோட்டத்தில் மாலை 5 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணக் கல்வி வலய முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நிகழ்வு இடம்பெறும். (ம-4)

## சாவகச்சேரி பேருந்து நிலைய கழிப்பறை அடுத்தவாரம் பாவனைக்கு

சாவகச்சேரி, ஒக். 16
சாவகச்சேரி பேருந்து நிலையத்தை அண்டியுள்ளபொதுக்கழிப்பறைஅடுத்த வாரம் திறக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்குவிடப்படுமென்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி நகரசபையின் சந்தைக் குழு மற்றும் சுகாதாரக் குழுவினர் சாவகச்சேரி நகரில் காணப்படும் குறைபாடுகளைக்கண்டறிந்துஉரியநடவடிக்கைகள் எடுப்பது எனவும் நகரப்பகுதியில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டுஅவற்றைஇயன்றவரைநிவர்த்திசெய்வதென்றும்சபையின்கடந்தஅமர்வில் தீர்மானம் எடுக்கப்பட்டது. சபையின் சந்தைக் குழு சுகாதாரக் குழு உட்பட அனைத்து உறுப்பினர்களும் பிரதி வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் பங்கேற்பதெனவும்தீர்மானிக்கப்பட்டது.
இதன் பிரகாரம் கடந்த சனிக்கிழமை காலையில்உறுப்பினர்களானம.நடனதேவன், க.கஜிதன், சு.நிதிகேசன் ஆகியோர் மட்டும் பொதுச் சந்தை திண்மக் கழிவகற்றல்அலகு, திண்மக்கழிவுகள் கொட்டும்பிரிவு, கண்ணாடிப்பிட்டிஇந்து மயானம், உதயசூரியன் கிராமபொதுக் கிணறுகள், சந்தை அருகில் பூட்டப்பட்ட பொது மலசலகூடம் அகியவற்றைப்பார்வையிட்டுக்குறைபாடுகள்இனங்கண்டு சபையின் தவிசாளர், செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளனர்.
இதனையடுத்துநீண்டகாலமாகபூட்டப்பட்டுள்ள பொதுமலசலகூடத்தில் சீரமைப்பு வேலைகள் மேற்கொண்ட பின்னர் அடுத்தவாரம் பொதுமக்கள் பாவனைக்குவிடப்படுமென்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,9,159)



பன்னாலை மக்களுடனான சிவில் பாதுகாப்புக் கூட்டம் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றது. தெல்லிப்பழை பன்னாலை பொதுநோக்கு மண்டபத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமணசேகர தலைமையில் கூட்டம் நடைபெற்றது.
இதன்பொழுது அதிகரித்து வரும், குற்றச் செயல்களைத் தடுப்பது தொடர்பாகவும் மக்களுடைய பிரச்சினைகள் பற்றியும் அங்கு ஆராயப்பட்டது. (ம)

## வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டாம்கட்ட உலருணவுப்பொதி



தென்மராட்சி, ஒக். 16
தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட உலர்உணவுப் பொதிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.
பிரதேசத்தில்60கிராம அலுவலர் பிரிவுகளிலும் வறட்சியில் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 452 குடும்பங்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சு பொதி செய்த தலா 4 ஆயிரம் ரூபா, 5ஆயிரம்ரூபாபெறுமதியானஉலர்உணவுப்பொருள்கள்அடங்கிய பொதிகள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
முதலாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டன.
இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் அமைச்சினால் பொதி செய்யப்பட்டு அமைச்சின் பெயருடன் கூடிய இலச்சினை பொறிக்கப்பட்ட பொதிகளில் வழங்கப்படவுள்ளன.
அமைச்சினால் பொருள்கள் அனுப்பப்பட்டதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4,9)

## அளவெட்டி முன்பள்ளிக்கு மதில் அமைக்க நிதியுதவி

யாழ்ப்பாணம், ஒக். 16
யாழ்ப்பாணம் அளவெட்டி முற்போக்கு வாலிபர் முன்பள்ளிக்கு மதில்அமைப்பதற்காகவடக்குமாகாணசபையின்அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம்ஒருலட்சம்ரூபாவைவழங்கியுள்ளார். வலி.வடக்குபிரதேசசபைஉறுப்பினர்க.மயூரதன்விடுத்தகோரிக்கையின்படியே இந்த நிதி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-4,63)

## ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16
கோண்டாவில்நாராயணாசனசமூகநிலையத்தினர், கிராமத்திலுள்ள ஆசிரியர்களுக்குமதிப்பளிக்கும்நிகழ்வைக்கடந்த12ஆம்திகதி தமது சனசமூக நிலைய முன்றலில் நடத்தினர்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
கிராமத்தில் வசிக்கும் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற சுமார் 30 பேர் மங்கலவாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டுவிருந்தினர்களால்நினைவுப் பொருள்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கலை நிகழ்வுகளும் பட்டிமண்டபமும் இடம்பெற்றன. (ம-4,8)



# சாவகச்சேரி பிரதேசத்தில் மாட்டிறைச்சிக்குத் தடை!

## இவ்வாறு கோரி ஜெகதாஸ் தீர்மான வரைவு பின்னர் பரிசீலிக்கலாம் என்றது சபை


**கொடிகாமம், ஒக். 17**

**சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாட்டிறைச்சிக்கும், மாட்டிறைச்சிக் கடைகளுக்கும் தடைகோரி சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் தீர்மான வரைபை முன்வைத்தார். எனினும் இந்தத் தீர்மான வரைவின் மீது முடிவு எடுக்கப் படாத நிலையில் அது பிற்போடப்பட்டது.**

உறுப்பினர் வை. ஜெகதாஸ் தனது தனிநபர் தீர்மான வரைவை முன்வைத்து உரை யாற்றுகையில் தெரிவித்ததாவது. சபை எல்லைக்குட்பட்ட பல இடங் களில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டு பற்றைக்காடுகள் மற் றும் சனநடமாட்டமில்லாத கடற் கரையோரங்கள் போன்ற இடங்க ளில் வைத்துக் கொல்லப்படுகின் றன. இவ்வாறு அனுமதியின்றி வெட்டப்படும் மாடுகளின் இறைச்சி நாட்டின் பல பகுதிகளுக்கும் எடுத் துச் செல்லப்படுகின்றது. பிரதேச சபை வழங்கிய உரிமத்தினைப் பயன்படுத்தி மாட்டிறைச்சிக் கடை களை குத்தகைக்கு எடுத்தவர்கள் மாடுகள் திருட்டுப் போவதற்கு துணையாக உள்ளனர். மக்கள் உடல்நலத்திற்கு கேடுதரும் சுகா தாரமற்ற மாட்டிறைச்சி நாடு முழு வதும் விற்பதற்கு ஏதுவாக உள் ளது. பிரதேச சபை எல்லைக்குள் நடைபெறும் மாட்டுக் களவுக்கு மாட்டிறைச்சிக் கடைகளை குத்த கைக்கு எடுத்தவர்கள் காரணம். இவற்றைப் பொதுமக்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள் ளனர்.

இலங்கைத் தீவின் 5 ஆயிரம் ஆண்டுகால மரபுகளைப்பேணும் வகையிலும் அந்நியப் பண்பாட்டு ஊடுருவல் பிரதேச சபை எல் லைக்குள் வாழும் மக்களின் பண் பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் முன்னர் அதைத் தடுக்கவும், கன்றுத்தாச்சிப் பசுக்கள், வய துக்கு வராத நாம்பன்கள், நாகு கள், நோயுற்ற காளைகள் என்பன இலங்கை அரசின் கொல்களம் மற்றும் இறைச்சியாக்கும் சட்டங் களுக்கு புறம்பாக வெட்டப்படுவ தைத் தடுக்கவும் இந்தத் தடை களை எமது சபை நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

இதற்கு உறுப்பினர்கள் மாட்டி றைச்சி உண்ணும் மக்கள் பலர் பிரதேச சபை எல்லைக்குள் வசிப் பதால்; மாட்டிறைச்சி கடைகளை தடை செய்வது அவர்களது உரி மைகளை தடுப்பது போலாகுமெ னவும் மாட்டிறைச்சியைத் தடை செய்வதால் மட்டும், மாடுகள் திருட்டு அதிகரித்து சட்டவிரோத மாக மாடுகள் கொலை செய்வதை தடுக்க முடியாதெனவும் அவ்வாறு தடை செய்யாமல் கொல்களங்க ளில் வெட்டப்படும் மாடுகளின் அளவினைக் கட்டுப்படுத்தலாமெ னவும் குறிப்பிட்டனர். இதைய டுத்து தீர்மான வரைவு பிற்போடப் பட்டது. (ம-9,159)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய பன்னாட்டு முதியோர் தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ம)

## யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் 47 வீதிகள்சீரமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ். மாநகரப் பிரதேசத்தில் நாற் பத்தியேழு வீதிகளைச் சீரமைப்ப தற்கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. இந்த வீதி சீர மைப்புப் பணிகள் ஒவ்வொரு வட்டார ரீதியாகவும் மேற்கொள் ளப்படவுள்ளன என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித் தார்.

வீதி சீரமைப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: முருக மூர்த்தி கோவில் வீதி, பல்கலைக் கழக வாசலுக்கு முன்பாகவுள்ள வீதி, மிலேனியம் விடுதி அருகில் உள்ள வீதி, மணற்தரை வீதி, நொதேன் மருத்துவமனைக்கு அரு கில் உள்ள வீதி, நல்லூர் சிவன் முன் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் உப வீதி, ஜமுனா வீதி முன் ஒழுங்கை. வேலப்பர் வீதி, அன் னசத்திர முதலாம் இரண்டாம் ஒழுங்கை, முத்துத் தம்பி முதலி யார் வீதி, இந்துக்கல்லூரி ஒழுங்கை, செழியான் வீதியில் மூன்றுஒழுங்கை, பரலோகமாதா வீதி, கண்ணாபுரம் வீதி, சிவபுலவர் ரிவாசல் பின் ஒழுங்கை, கஸ்தூ ரியார் வீதிக்கும் கே.கே.எஸ் வீதிக் கும் இடைப்பட்ட வீதி, ஸ்ரான்லி வீதி முதலாம் ஒழுங்கை, கலைப் புலவர் வீதி, கோவில் வீதி சந்தி யில் இருந்து ஆலயத்துக்கு செல் கின்ற வீதி, மருத்துவமனை வீதி யின் குறுக்கு வீதி, கோவில் வீதி யில் முதலாம் ஒழுங்கை, புங்கன் குளம் வீதி, சந்தானமாதா கோவில் வீதியை இணைக்கும் வீதி, வேலப்பர் ஒழுங்கை, இலந் தைக்குளம் முதலாம் ஒழுங்கை, அம்மன் வீதி முதலாம் ஒழுங்கை, வளன்புரம் முதலாம் ஒழுங்கை, டெலான்ஸ் ஒழுங்கை, கொழும் புத்துறை மற்றும் பற்றிக்ஸ் வீதி, அச்சுக்கூட வீதி, பாரதி சனசமூக நிலையவீதி, மவுங்கான்மல் வீதி, பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கையில் வெள்ள வாய்க்கால் அமைத்தல், சீனிவா சகம் வீதி, தண்ணீர் தாங்கி குறுக்கு வீதி, புதிய பூங்கா வீதி, கஸ்தூரியார் வீதி, 174,168 ஒழுங்கை சீரமைப்பு ஆகிய பணி கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளன - என்றார். (ம-17)



## நாவற்குழி ம.வித்தியாலயத்தில் கணினி அறை திறந்து வைப்பு

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கணினி அறை நேற்று காலை 9.00 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வருடம் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கிய நிதியில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அறையினை எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், வித்தியாலய அதிபர், உப அதிபர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெருமளவு மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ம-9,159)

கொடிகாமம் ஞானசூரியன் முன்பள்ளிச் சிறார்களின் ஆக் கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு கொடிகாமம் அரசினர் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. முன்பள்ளி ஆசிரியர் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவ கச்சேரி பிரதேச சபை உறுப்பி னர் வை.ஜெகதாஸ், சிறப்பு விருந்தினராக வித்தியாலய அதிபர் க.தர்மபூபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ம159,9)



## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக். 17

கோண்டாவில் சிவபூமி அறக்கட் டளையின் நவராத்திரி விழா இன்று இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் சிவ பூமிபாடசாலைமண்டபத்திலஇன்று மாலை 3 மணியளவில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதர கத்தின் கொன்சியுலர் சங்கர் பாலசந்திரன் கலந்துகொள்கி றார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தம்பதிகள் கலந்து கொள்கின்றனர். (ம)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## கோப்பாய் கோட்டம் வீழ்ச்சி கண்டுள்ளது

"கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் குறைந்துள்ளது" என்று தெரிவித்தார் கோப்பாய் கல்விக் கோட்ட கல்வி அதிகாரி நா.சிவநேசன். கோப்பாய் கல்விக் கோட்டத்தின் புலமைப்பரிசில் பெறுபேறுகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் 81 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிட்சையில் சித்தியடைந்து புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றுள்ளனர். கடந்த வருடம் 96 மாணவர்கள் புலமைப்பரிசில் பெறத் தகைமை பெற்றனர். சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் குறைவடைந்துள்ளமை கவலை அளிக்கிறது. அடுத்த வருடத்துக்கான பெறுபேற்றினைக் கருத்திற் கொண்டு சிறப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (மா1)

## மதிப்புறுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 17

வடமராட்சி கல்வி வலயம் மதிப்புறுத்தல் மற்றும் பரிசில் தின நிகழ்வுகளை யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரியில் இன்று நடத்தவுள்ளது.

வடமராட்சி கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், ச.சுகிர்தன், மற்றும் சி.அகிலதாஸ் ஆகியோரும், மதிப்புறு விருந்தினராக மருதம் பெயின்ற டீலர் உரிமையாளர் தயாபரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-72)

## புலமைப்பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 17

**இணுவில் மத்தி.**

திருமகள் குகநாதன் - 177, வானழகி சுகந்தன் - 169, கேசாயினி கலாநாதன் - 169, இறைவன் யோகனன் - 167, விதுசிகா டமேஸ்கரன் - 166, லக்சனா காந்தரூபன் - 164.

**மானிப்பாய் சென். ஆன்ஸ்**

செ.பிருதுவி - 176, கே.சப்திகா - 175, தே.தனிஸ்ரன்-170, சு.அக்சயா -166, பா.பவித்திரன் - 165. (ம)

செய்திகள் see more news in NEWUTHAYAN.COM

# புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினர் கடைகள் மீது பாகுபாடான நடவடிக்கை

**புதுக்குடியிருப்பு,ஒக் .17**
**புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் பரந்தன் வீதியில் அமைந்துள்ள தனியார் இலத்திரனியல் வியாபார நிலையம் ஒன்று கடை வாசலில் விளம்பரப் பதாதைகளை நட்டு வியாபாரம் மேற்கொண்டு வந்த நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் சபை உறுப்பினர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் சென்று குறித்த கடையின் பதாதைகளை அகற்றியுள்ளார்கள்.**

இதுதொடர்பில்மேலும்தெரியவருகையில்:
புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் குறித்த கடைத்தொகுதி அமைந்துள்ள பகுதியில் உள்ள "பெஸ்ட் மொபைல்" என்ற இலத்திரனியல் கடை வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் விளம்பரப் பதாதைகளைக் கட்டிவைத்துள்ளனர். இதனால் அருகில் உள்ள வியாபார நிலையத்தினர் தங்கள் வணிக நடவடிக்கைக்கு இடையூறாகக் காணப்படுவதாகப் பிரதேச சபையிடம் முறையிட்டுள்ளதாகப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் குறித்த இலத்திரனியல் கடையின் உரிமையாளருக்குக் கடிதம் அனுப்பியும் அவர் உரியமுறையில் பிரதேச சபையை அணுகவில்லை எனத் தெரிவித்த அவர், அதன் காரணமாக மக்களுக்கு இடையூறாக காணப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டிற்கமைய குறித்த கடையின் முன்னால் வீதிக்கு சொந்தமான இடத்தில் அனுமதியற்ற முறையில் கட்டப்பட்ட விளம்பரப் பாதாதைகளை அகற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதேவேளை அவருக்குப் பலதடவைகள் விளம்பரப்பலகையை அகற்றுமாறு அறிவுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.
இதேவேளை குறித்த இலத்திரனியல் கடையின் உரிமையாளர் தன்மீதான காள்ப்புணர்சி காரணமாகவே தவிசாளர் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் இவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளார்கள் எனத் தெரிவித்த அவர் சபையிடம் இருந்து விளம்பரப் பதாதையை அகற்றச்சொல்லி எந்தவிதமான எழுத்து ஆவணங்களும் எனக்கு அனுப்பப்படவில்லை .தவிசாளர் பிரேமகாந்த் மற்றும் உபதவிசாளர் ஜனமேஜயந். குகன் உட்பட்ட அரசியல்வாதிகளே என்னைத் தொலைபேசி மூலம் மிரட்டியுள்ளனர். "எங்களைப்பற்றி தெரியுமா ? நாம் என்ன நடவடிக்கை எடுப்போம் என்று தெரியுமா" என கடுமையான தொனியில் எச்சரித்தனர். அதன் பின்னரே ஏனைய கடைகளின் பதாதைகளை விட்டுவிட்டு என் கடையில் விளம்பரப்படுத்தப்பட்ட பதாதைகளை அகற்றி குப்பை ஏற்றும் வாகனத்தில் போட்டுச் சென்றனர்.
ஒரு சட்டத்தை அல்லது நடைமுறையினை நகர் பகுதியில் நடைமுறைப்படுத்தும் போது அது எல்லா வணிக நிலையங்களுக்கும் சமமாகப் பார்க்கப்படவேண்டும் அருகில் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள வணிக நிலையங்கள் இவ்வாறான விளம்பரப் பதாதைகளைக் கட்டி வைத்துள்ளன. இது தனிப்பட்ட குரோத நடவடிக்கை என்றும் தெரிவித்த அவர் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளரின் இந்த நடவடிக்கையினால் தான் மிகவும் மனமுடைந்து காணப்படுவதாகத் தெரிவித்தார்.
இருந்தும் புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் இவ்வாறான சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது அனைத்து வணிக நிலையங்களுக்கும் சமமாக பார்க்கப்படவேண்டும். பொலிஸார் முன்னிலையில் இவ்வறான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் தூண்டுதலுக்கு அமையவே இவ்வாறான நடவடிக்கை எனது வணிக நிலையம் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்அவர் கவலை தெரிவித்துள்ளார்.
எனினும் குறித்த கடைக்காரருக்கு எதிராக அயல்கடை உரிமையாளர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கை எடுக்க விளைந்த சபையின் தவிசாளர், அந்த நடவடிக்கையினை ஒட்டுமொத்தமாக அனைத்து கடைகளுக்கும் அறிவித்தபின்னர் ஒருசேர நடவடிக்கையில் இறங்கி ,அனைத்து பதாதைகளையும் அகற்றி இருக்க வேண்டும். தனியே ஒருவரின் முறைப்பாட்டை ஏற்று அந்த கடைக்கு மட்டும் நடவடிக்கை எடுத்தபின்னர் ஏனைய கடைகளின் பதாதைகளை அகற்றவும் எனக் கூறிவிட்டு சென்ற விடயம் பக்கச்சார்பானதாகவே பார்க்கப்படுகின்றது என அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ரி 3)



# முன்பள்ளி திறப்பு

புதுக்குடியிருப்பு,ஒக் .17
புதுக்குடியிருப்பு, பிலக்குடியிருப்பு முன்பள்ளிச் சிறார்களுக்கான முன்பள்ளி, தமிழர் மேம்பாட்டு கழகத்தினால் பைரவி நுண்கலைக்கூடத்தின் அனுசரணையுடன் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
முல்லை ரமணன், நிகழ்வுக்குத் தலைமை தாங்க, சமூக மேம்பாட்டு நிறுவன நிறுவனர் கொடி ஏற்றினார். முன்பள்ளி ஆசிரியை நிலா பாடசாலை கொடியை ஏற்றினார்.
முன்பள்ளி விளம்பரப் பலகையைப் பிரதேச சபை உறுப்பினர் ரவீந்திரன் திறந்து வைத்தார். வலயக் கல்வி பணிமனை பிரதிகல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் முன்பள்ளியினை். நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (222)



# அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

மன்னார் ,ஒக் .17
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.
ஆண்டான்குளம் ஆயிசா மஸ்ஜித் , சொர்ணபுரி முகைதீன் ஜும்மா பள்ளி, மினுக்கன் அன்னூர் ஜும்மா மஸ்ஜித் , வட்டக்கண்டல் முகைதீன் ஜும்மா பள்ளி , கட்டைக்காடு முஹைதீன் ஜும்மா பள்ளி மற்றும் பள்ளிவாசல் பிட்டி பாடசாலைக்கான சுற்று மதில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. (56)

## பொது மண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நட்டு வைப்பு

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூர்வீதி கிராமத்துக்கான பொது மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது. அமைச்சர் றிசாத் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள பொது மண்டபத்துக்கான அடிக்கல் நடும் இந்த நிகழ்வு மன்னார் நகர சபை உறுப்பினர் உவைசூல் கர்னி தலைமையில் இடம்பெற்றது. (56)



# தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணிக்கு நிர்வாகிகள் தெரிவு

வவுனியா,ஒக் .17
வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணிக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ் அரசுக் கட்சியின் வவுனியாமாவட்ட அலுவலகமான தாயகத்தில் கட்சியின் கிளைத்தலைவர் மருத்துவர்ப.சத்தியலிங்கம் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திலேயே தெரிவுகள் நடைபெற்றன. இளைஞர் அணியின் மாவட்டத் தலைவராக பாலச்சந்திரன் சிந்துஜனும், செயலராக ஜெயராசா விதுசனும், உப தலைவராக ச.பத்மசீலனும், உப செயலராக சிவகுரு பகீரதனும் தெரிவு செய்யப்பட்டனர்.
அத்துடன் மாவட்டத்தின் சகல உள்ளூர் அதிகாரசபை பிரதேசங்களையும் பிரதிநித்துவப்படுத்தும் வகையில் 21நிர்வாக உறுப்பினர்கள் அடங்கலாக 25 உறுப்பினர்களைக் கொண்ட புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் கட்சியின் மாவட்ட செயலர் வி.முத்துராசா, மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி உட்பட கட்சியின் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (110)



# மதத்தலைவர்கள் மதங்களுக்கும் மொழிகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்

மன்னார் ஆயர் இம்மானுவேல் ஆண்டகை வேண்டுகோள்



மன்னார்,ஒக் .17
பாடசாலைகளில் எந்த மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நாம் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் அவர்களுக்கான மதிப்பையும், அன்பையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு கத்தோலிக்கம், இந்து, இஸ்லாம் ஆகிய மதத்தலைவர்கள் நாம் இங்கு இருக்கின்றோம். ஒவ்வொரு மதத்தலைவர்கள் நாமும் ஒன்றுபட்டு மதங்களுக்கும் மொழிக்கும் கொடுக்க வேண்டிய மதிப்பை தொடர்ந்து வழங்குபவர்களாக இருந்தால் ,அவை எமது மாணவச் செல்வங்களுக்கு நல்லதொரு வழியாக அமையும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவித்தார்.
கடந்த புதன்கிழமை மன்னார் கல்வி வலயத்தில் ஓலைத்தொடுவாய் றோமன் கத்தோலிக்கக் கலவன் பாடசாலையில் வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட திட்ட நிதியினூடாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு நிகழ்வு இடம்பெற்றது.
இந்தத் திறப்பு நிகழ்வில் ஆயர் பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றுகையில்:
கடந்த காலங்களில் இந்தப் பாடசாலையைப்பற்றி நாம் பார்த்தபொழுது இங்கு பயின்ற மாணவர்கள் பலர் மரங்களுக்கு கீழே இருந்துதான் இத்தனை நாள்களும் கல்வி கற்று வந்துள்ளனர் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.
இந்த நிலையில் இந்தப் பாடசாலைக்கு ஒரு புதிய கட்டடம் திறந்து வைப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி . நான் மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்று இன்னும் பத்து மாதங்கள் கடக்கவில்லை. ஆனால் நான் பல பாடசாலைகளின் நிகழ்வுகளில் கலந்து கொண்டு வரும்பொழுதெல்லாம் மன்னார் கல்விப் பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்தியானும் கலந்து வருகின்றார்.
இன்னும் ஓரிரு தினங்களுக்குள் இவர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற இருக்கும் நிலையில் , இவர் தனது பணியை எவ்வளவு சிறப்பாக செயற்படுத்தியிருக்கின்றார் என்பது நன்கு அறியக்கூடியதாக இருக்கின்றது. இந்தக் கல்விப் பணிப்பாளரின் அர்ப்பணிப்பை நான் நோக்கும் போது உண்மையில் பிள்ளைகள் கல்வி கற்று தேர்ச்சி பெற்றுச் செல்ல வேண்டும், இவர்களுக்குக் கட்டடம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல மாணவர்கள் நல்ல உருவாக்கம் பெற வேண்டும் அதுமட்டுமல்ல மாணவ சமூகத்தில் நல்ல மனித நேயம் உருவாக வேண்டும் என்ற நோக்கிலே வலயக் கல்விப் பணிப்பாளர் தனது பணியை முன்னெடுத்துச் சென்றுள்ளதை நான் நோக்கியுள்ளேன்.
திறக்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் பெயர் "செபஸ்தியான் பிளக்" என எழுதப்பட்டிருந்ததை நான் கண்ணுற்றேன். புனித செபஸ்தியார் ஒரு புறமிருக்க கல்விப் பணிப்பாளரின் மறைந்த கணவரின் பெயரை இந்தப் பாடசாலைச் சமூகம் பெயரிட்டிருக்கின்றது என்றால் ஒரு பின்தங்கிய பாடசாலைக்கு ஒரு கட்டடத்தை வழங்கியமைக்காக இந்தச் சமூகம் நன்றியாக இந்தப் பெயரை இட்டிருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.
பாடசாலைகளில் எந்த மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நாம் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் அவர்களுக்கான மதிப்பையும் அன்பையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
இங்கு கத்தோலிக்கம், இந்து ,இஸ்லாம் ஆகிய மதத்தலைவர்கள் நாம் இருக்கின்றோம். ஒவ்வொரு மதத் தலைவர்கள் நாமும் ஒன்றுபட்டு மதங்களுக்கும் மொழிக்கும் கொடுக்க வேண்டிய மதிப்பை தொடர்ந்து வழங்குபவர்களாக இருக்க வேண்டும்.
அப்பொழுது இவைகள் எமது மாணவ செல்வங்கள் மத்தியிலும் வளரும் என்பது திண்ணம். நாம் பலதரப்பட்ட மதங்கள் கொண்டவர்களுடனும் மொழி பேசுகின்றவர்களுடனும் இணைந்து வாழ்வதால் நாம் ஒருவரை ஒருவர் மதிக்கும் தன்மையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.
அதிபர் நோயல் இம்மானுவேல் பெனாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சுகந்தி செபஸ்தியான், பேசாலை முருகன் ஆலயக் குருக்கள் சிவசிறி மகா தர்மகுமாரக் குருக்கள், புதுக்குடியிருப்பு மௌலவி ஏ.ஜே .எம்.பவாஸ் ஆகியோர் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (60)

## கிளி.மாவட்டப் பாடசாலைகள் சனிக்கிழமையும் இயங்கும்

கிளிநொச்சி,ஒக். 17

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் வரும் சனிக்கிழமை 20 ஆம் திகதி இயங்கும் என வலயக்கல்விப் பணிப்பாளர் யோன் குயிரன்ஸ் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் அறநெறி பற்றிய அறிவை ஊக்குவிக்கும் முகமாக சைவ பரிபாலன சபையாலும் மறை கல்வி நிலையத்தினராலும், இந்து கத்தோலிக்க மாணவர்களுக்கு வரும் சனிக்கிழமை பரீட்சை நடத்தப்பட உள்ளது. இந்தப் பரீட்சைகளை சுமுகமாக நடத்தும் பொருட்டு பரீட்சை நடத்தப்படும் நாளை பாடசாலை நாளாக கருதுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது .

எனவே பரீட்சை நடத்தப்பட சிறந்த ஒத்துழைப்பை வழங்குமாறும், புள்ளிகளை மூன்றாம் தவணைத் தேர்சி அறிக்கையில் இணைக்குமாறும், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6)



## ஒளிப்படப்பிடிப்பாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

கிளிநொச்சி,ஒக் .17

கிளிநொச்சி ஒளிப்படபிடிப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநாச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி ஒளிப்படப்பிடிப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், மூத்த படப்பிடிப்பாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சி தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டார். இதன் போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஒளிப்படத் துறையில் ஆர்வமாக செயற்பட்ட மூத்த ஒளிப்படக் கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வின் இறுதிப் பகுதியில் தென்னிந்திய திரையுலக இயக்குநர்களான பாரதிராஜா மற்றும் இயக்குநரும் நடிகருமான பாக்கியராஜ் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர். இதன்போது கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.

## பன்னாட்டு விழிப்புலனற்றோர் தினம்



கிளிநொச்சி,ஒக் .17

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு விழிப்புலனற்றோர் தினம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு விழிப்புலனற்றோர் தினம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது. கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம் கரைச்சி பிரதேச செயலகம் வரை சென்று, விழிப்புலனற்றோருக்கான நூலக வசதியினை ஏற்படுத்தித் தருமாறு கோரிப் பிரதேச சபை தவிசாளரிடம் கோரிக்கை மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து குறித்த நடை பயணம் கரைச்சி பிரதேச செயலகம் வரை சென்று தமக்கான ஓய்வு மண்டபம் ஒன்றை அமைப்பதற்காகக் காணி ஒன்றைப் பெற்றுத் தருமாறு கோரி கரைச்சி உதவி பிரதேச செயலரிடம் கோரிக்கை மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து, விழிப்புணர்வு நடைபயணம் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபம் வரை சென்று அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்து கொண்டிருந்தார். (35)

### குண்டுமணி அளவுகூட

# பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி செய்ய முடியவில்லை

### வவுனியா தெற்குத் தமிழ் பிரதேசசபை உறுப்பினர் பூ.சந்திரபத்மன் தெரிவிப்பு

**வவுனியா ,ஒக் .17**

**சபையில் உள்ள 30 உறுப்பினர்களும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சபை சந்தோசமாக நடைபெறுகின்றது என்பதற்காக அபிவிருத்திகள் சரியாக நடைபெறுகின்றது என்று எண்ணி நாம் விலகிப் போக முடியாது. இந்தச் சபையில் வாதப்பிரதி வாதங்கள் எவையும் இடம்பெறுவதில்லை. எனவே சரியோ, தவறோ சபையில்உள்ள 30 உறுப்பினர்களும் தமதுகருத்துக்களை தெளிவாகப் பேசவேண்டும் - என்கிறார்.**

தெளிவாகப் பேசும்போதுதான் உண்மை புலப்படும்.எமது கட்சிஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளகாரணத்தினாலும் அதற்குட்பட்டே நாம் நடக்க வேண்டியுள்ளதாலும், பலவிடயங்களை இங்கேபேசமுடியாதிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை இன்றுடன் (நேற்று) 7 கூட்டங்கள் நடைபெற்றுள்ளது எனினும் ஒரு குண்டுமணி அளவு கூடப் பிரதேசபைக்குட்பட்டபகுதிகளில் அபிவிருத்தி செய்யமுடியவில்லை.

அத்துடன் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு சபையில் பணம் இல்லை என்று சொன்னால் சுயஉற்பத்தி சார்ந்த விடயங்களை இலகுவாகமுன்னெடுக்கமுடியும். எனவே அது தொடர்பாக தலைவர் கவனம் செலுத்தவேண்டும் என்றுகூறினார்.

குறிப்பாக கட்டாக்காலி மாடுகளின் பிரச்சினைதொடர்பாக சபையின் வட்டார உறுப்பினர்கள், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கமக்காரர் அமைப்புகள்,கால்நடைவளர்ப்பாளர்களை ஒன்றுகூட்டி கலந்துரையாடி ஒரு தீர்விற்குவருமாறு தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்திற்கு அருகாமையில் தென்னாபிரிக்காவின் உதவியில் நூலகம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது .

வுவுனியாதெற்குத்தமிழ்பிரதேசசபைக் குட்பட்ட பம்பைமடுப் பகுதியில் உள்ள பிரதேச சபையின் உபஅலுவலகம் அமைந்துள்ள காணியில் பொதுநூலகம் அமைப்பதற்கான அனுமதியை சபை நேற்று வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கமைய தென் ஆபிரிக்க நாட்டின் நிதி உதவியில் 50 இலட்சம் ரூபா பெறுமதியில் நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டு, நெல்சன் மண்டேலாவின் தூபி ஒன்றும் அமைக்கவுள்ளமையினால், குறித்த பிரதேச சபைக் காணியில் அதனை அமைப்பதற்கான அனுமதியைக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் பிரதேச சபை தலைவரிடம்வேண்டுகோள் ஒன்றை முன்வைத்திருந்தார். குறித்தவிடயம் தொடர்பாக நேற்றைய அமர்வில் கவனம்செலுத்தபட்டதுடன், நூலகம் அமைப்பதற்கு அனுமதிவழங்குவது எனத் தீர்மானிக்கபட்டது. குறித்த நூலகம் பிரதேச சபையின் பராமரிப்பில் இயங்கவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (110)

## கிராமிய முன்னேற்ற மகளிர் ஒன்றியம் அமைப்பு

மாங்குளம்,ஒக் .17

உதவும் இதயங்கள் "கிராமிய முன்னேற்ற மகளிர் ஒன்றியம்" மாங்குளம் நீதிபுரம் கிராமத்தில் மூன்றாவது குழுவாக் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

மயில்வாகனம் கனகம்மாவின் 62 ஆவது திருமண நாள் நினைவாக 50ஆயிரம் ரூபா முதற் கட்டமாக வழங்கப்பட்டது. இந்த நிதியில் இருந்து, இந்தக் குழு சுழற்சி முறைக் கடன் திட்டத்தை ஆரம்பிக்கும்.அத்துடன் திட்டத்துக்கு அமைய கிராமங்களில் நடக்கும் தற்கொலைகளுக்கு எதிராக விழிப்புணர்வு செய்தல், சிறுவர் துர்நடத்தைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை இனம் கண்டு உதவுதல், சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்களை இனம் கண்டு சட்ட நடவடிக்கைமேற்கொள்ளுதல் அல்லது உதவுதல், கிராமத்தில் விழிப்புணர்வு போன்ற பல விடயங்கள் இந்தக் குழுக்கள் ஊடாக முன்னகர்த்தப்படவுள்ளது. (222)





### சிறந்த முகாமையாளராக மதிப்பளிப்பு

அண்மையில்கிளிநொச்சி மாவட்ட "கூட்டுறவுச்சபையால்" நடத்தப்பட்ட கூட்டுறவுத் தின நிகழ்வில் கூட்டுறவுச் சங்கங்களுகிடையே நடத்தப்பட்ட சிறந்த முகாமையாளர் தெரிவில், கரைச்சிதெற்குப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், பொதுமுகாமையாளரும், வடக்கு மாகாண ஊழியர்தொழிற் சங்கத் தலைவரும் ஆகிய செ.பாலேந்திரன் மதிப்பளிக்கப்பட்டார். (63)

# கல்வியில் முன்னேறுவதனூடாகவே தமிழர்கள் விடுதலையடைய முடியும்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக் .16

தமிழர்களாகிய நாம் நீண்ட காலமாக சிங்கள தேசியவாதத்தால் அடக்கப்பட்டும்,அழிக்கப்பட்டும் வந்திருக்கின்றோம் .இந்த நிலைகள் மாறவேண்டுமாக இருந்தால், நாம் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடையவேண்டும். அத்துடன் இஸ்ரேல் என்கின்ற நாடு தமது கல்வியாலும், பொருளாதாரத்திலும், முன்னேறியதாலேயே இன்று ஒரு வல்லரசு நாடக நிமிர்ந்து நிற்கின்றது எனப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் குறிப்பிட்டுள்ளார்.



விண்மீன்கள்தொண்டுநிறுவனத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு இத்தாவில் பகுதியில் அமைக்கப்பட்ட மாலைநேர இலவசகல்விக்கூடத்தை, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணியளவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, திறந்து வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் விண்மீன்கள் என்பது ஒரு உன்னதமான சேவையை செய்து வருகின்ற அமைப்பாகும். அதாவது உண்வுக்காக ஏங்கும் மக்களுக்கு உணவளிக்கும் ஒரு உயரிய பணியை மிகவும் இடர்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொள்கின்றனர். இவர்களது சேவை போரால் பாதிக்கப்பட்ட சமூகமாகிய எங்களுக்கு மிகவும் தேவையான ஒன்றாகும்.அத்துடன் ஒருவருடத்தை நிறைவு செய்துள்ள விண்மீன்களின் அடுத்த பரிணாமமான இலவச கல்விக்கூடம் ஒன்றைத் தொடங்கியுள்ளமை அனைவராலும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும் என்றார்.

இந்த நிகழ்வில் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கஜன் ,உறுப்பினர் நகுலேஸ்வரன் , பிரதேச சபை செயலர் செ.அனுசியா ,அதிபர்கள், ஆசிரியர்கள்,கிராம அலுவலர்கள்,சமுர்த்தி உத்தியோகத்தர்,கிராம மட்ட அமைப்புக்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (6)

## 34 மாணவர் கற்கும் பாடசாலைக்கு 95 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் 34 மாணவர்கள் மட்டுமேகல்விகற்கும்ஒருபாடசாலைக்கு9.5மில்லியன் ரூபாவில்புதியகட்டடம்அமைப்பதற்குஅனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் நூற்றுக்கணக்கான மாணவர்கள்கல்விகற்கும்பாடசாலைகளுக்குநிதிஒதுக்கீடு இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

முல்லைத்தீவுமாவட்டத்தின்வெலிஓயாப்பிரதேசத்தில் ஒரேவளாகத்தில்பாடசாலையும்விகாரையும்அமைந்துள்ளன.

அந்தப்பாடசாலையில்34மாணவர்கள்கல்விகற்கின்றனர். அங்கு கட்டடம் அமைக்கவே தேசிய நல்லிணக்க அமைச்சு இந்தவருடம் 9.5 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

9.5 மில்லியன் ரூபா அதாவது 95 லட்சம் ரூபா அனுமதிக்கப்பட்ட நிலையில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செலவு மதிப்பீட்டைத் தயாரித்து வழங்காதபோதிலும்பாடசாலையின்நிலம்மாவட்டச்செயலரின் பெயரில்உள்ளதால்வடமாகாணக்கல்விஅமைச்சின் அனுமதி இன்றி மாவட்டச் செயலாளர் நேரடியாகவே மேற்கொள்ள முடியும் என்று அமைச்சரிடம் சுட்டிக்காட்டி பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நூற்றுக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்கும் பல பாடசாலைகளுக்கு இன்னும் 50 லட்சம் ரூபா ஒதுக்கீடும்இல்லைஎன்றுமாவட்டத்தின்மூத்தகல்விஅதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இவ்வாறே2011ஆம்ஆண்டுஅமெரிக்கஅரசுகட்டடங்கள் அமைக்க நிதி வழங்கியபோது, மாவட்டத் திட்டமிடல் அதிகாரிகள் பாடசாலைகளைத் தேர்வுசெய்து வழங்கினர்.

தேர்வு செய்தவற்றில் ஒரு பாடசாலையும் இரண்டாவது பாடச்ாலையாக வெலிஓயாவில் சில நூறு மாணவர்கள் கற்கும் பாடசாலை ஒன்றையும் வடக்கு ஆளுநரும்தேர்வுசெய்துவழங்கினர். அதனால்திட்டமிடல் அதிகாரி ஒருவர் அந்தப் பதவியிலிருந்து விலகியிருந்தார். (4,105)

### வடக்கு மாகாணத்தில்

# கல்விமாணி பட்டதாரிகளின் விவரங்கள் திரட்டல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் சேவையில் பதவி வகிக்காத "கல்வி மாணி" பட்டதாரிகளின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது. வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் சேவைக்குப் பட்டதாரிகளை உள்வாங்கும்போது அவர்கள் ஆசிரியர் சேவை 3:1 (அ) வகுதிக்குள் உள்ளடக்கப்படுவார்கள். அதன் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும். 3 வருடங்களின் பின்னர் ஆசிரியர் சேவை தரம் 2:2 வகுதிக்குள் உள்ளடக்கப்படுவார்கள். இது சேவை உயர்வாகக் கருதப்பட்டு அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும். அல்லது சேவை வழங்கப்பட்ட காலத்தில் இருந்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் பட்டப் பின் கல்வியை நிறைவு செய்தவன் மூலமாக அவர்கள் 2:2 வகுதிக்குள் உள்ளடக்கப்படுவார்கள். ஆனால் புதிதாகஆசிரியநியமனங்களைப் பெறுபவர்களை நேரடியாக 2:2 வகுதிக்குள் உள்ளடக்கக்கூடிய சேவைப் பிரமாணக் குறிப்பு கல்வி அமைச்சில் நடைமுறைக்கு வந்துள்ளது. அதன் அடிப்படையில் "கல்வி மாணி "பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்வாங்கும்போது நேரடியாக 2:2 வகுதிக்குள் உள்ளடக்கி நியமனங்களை வழங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. ஆகவே இந்த நடைமுறையை வடக்கு மாகாணத்துக்கும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலம் அல்லது ஆணைக்குழு சபையால் அங்கீகரிக்கப் பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்ட கல்வி மாணிச் சான்றிதழைக் கொண்டுள்ள, ஏற்கனவே ஆசிரியர் சேவையில் பதவி வகிக்காத வடக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்டவர்கள் மாகாணக் கல்வி அமைச்சில் தமது விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மாகாண கல்வி அமைச்சின் இணையத் தளமான www.edumin.np.gov.lk க்குச் சென்று மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, அதில் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களை இணைத்து 25 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது செயலாளர், கல்வி அமைச்சு வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கல்வி மாணி பட்டதாரிகள் விவரம் திரட்டுதல் " என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,7)

# தற்போது வாசிக்கப்படுகின்ற நூலாக முகநூல்ஒன்றுதான்காணப்படுகிறது

### அதை விடுத்து நூலகத்தில் இருந்து வாசியுங்கள்: வலியுறுத்துகிறார் பிரதேச சபைத் தவிசாளர்

முல்லைத்தீவு, ஒக். 17

முகநூல் ஒன்றுதான் தற்போது வாசிக்கப்படுகின்ற நூலாக இருக்கின்றது. இதன் ஊடாக வாசிப்போம் என்று சொன்னால் அது உங்கள் வாசிப்புத் திறனை அதிகரிக்காது. உங்கள்நினைவாற்றலையும்கண்பார்வையையும் குறைக்கும் என்று புதுக்குடியிருப்புப் பிரதேசசபைத் தவிசாளர் செ.பிறேமகாந் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புப்பிரதேசசபைநூலகத்தின்ஏற்பாட்டில் வாசிப்பு மாதத்தையொட்டிய விழிப்புணர்வுப் பேரணியும் கருத்தரங்கும் புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டுஉரையாற்றுகையில்அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதமாக அறிவிக்கப்பட்டு இலங்கைமுழுவதும்கொண்டாடப்படுகிறது. அதுபுதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள மூன்று நூலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னைய காலத்தில் வாசிப்பு மாதம் என்று ஒன்று இல்லை. தற்போது வாசிப்பின் உடையதேவை குறைந்துகொண்டுசெல்வதால்வாசிப்பைத்தூண்டும் விழிப்புணர்வைஏற்படுத்துவதற்காகவாசிப்புமாதமாக ஒக்ரோபர் அறிவிக்கப்பட்டுள்ளது.

**விளங்கியவர்கள் சாதித்தவர்களே!**

வாசிப்பின் மகத்துவத்தை விளங்கியவர்கள் வாழ்க்கையில் சாதித்தவர்களாகஇருப்பார்கள். நல்லபுத்தகம் உங்களின் நண்பர்கள் என்று கூறுவார்கள்.

இன்று மாணவர்கள் தங்கள் வரலாறுகளைப் படிக்க வேண்டும். பூகோளம், அறிவியல், தொழில்நுட்பம், கலை, கலாசாரம் எல்லாவற்றையும் புத்தகத்தில் இருந்து படித்துக்கொள்ளலாம்.

இன்றைய சமூக நிலைமைகளை நாங்கள் பார்க்கின்றபோது வாசிப்புப் பழக்கம் என்பது மிகக் குறைவடைந்து போகின்றதைக் காணமுடிகிறது.

அனைவரும்நூல்களைதான்நாள்தோறும்வாசிக்கின்றார்கள், அது முகநூலாகவே காணப்படுகின்றது.

முகநூல் ஒன்றுதான் தற்போது வாசிக்கப்படுகின்ற



நூலாக இருக்கின்றது. இதன் ஊடாக நாங்கள் வாசிப்போம் என்று சொன்னால் அது உங்கள் வாசிப்புத் திறனை அதிகரிக்காது. உங்கள் நினைவாற்றலையும் கண்பார்வையையும் குறைக்கும். தற்போது நூல்களுக்குப் பதிலாக நவீன அலைபேசிகளின் பாவனை அதிகரித்துள்ளது. நூல் நிலையங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

நூலகத்துக்குள் சென்று நல்ல நூல்களை வாசிக்கின்றபொழுது அந்த இடத்தில் உள்ள அமைதி உங்களின் மனதைஒருநிலைப்படுத்திவாசிக்கின்றவிடயம்நினைவில்வைத்திருக்கும். இவ்வாறானஇடத்தில்ஒருதடவை வாசித்தால் வாழ்க்கையின் இறுதிவரை அது மனதில் பதிந்திருக்கும்.

எனவே வாசிப்பின் மகத்துவத்தைப் புரிந்து மாணவர்கள்உள்ளிட்டஅனைவரும்நல்லபுத்தகங்களைவாசிக்க வேண்டும். நல்லநூல்கள்எங்களின்கலாசாரத்தையும் பண்பாட்டையும்எடுத்துக்கூறுகின்றன. புராணங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள் தனிமனிதனின் வாழ்க்கையை எடுத்துக் கூறுகின்றன. அவற்றைப் படித்து அனைவரும் வாசிக்கின்ற மனிதர்களாக இருக்க வேண்டும்.

எங்கள்இனம்தலைநிமிர்ந்துநடக்கவேண்டும்என்று சொன்னால் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றமடைந்தவர்களாகக் காணப்படவேண்டும்.

எனவே கல்வி ஒன்றே சிறந்த ஆயுதம். மாணவர்கள் அதன் ஊடாக வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்திக் கொண்டுபுத்தகங்களைநேசித்துத்தங்கள்வாழ்க்கையின் இறுதி இலட்சியத்தை அடையவேண்டும் - என்றார். (4,ரி3)

சபரிமலை ஐயப்ப சுவாமி தரிசன விவகாரம்:

## இந்திய உயர் நீதிமன்று விடுத்த தீர்ப்பை மீளப்பெறுமாறு வவுனியாவில் பேரணி!

வவுனியா, ஒக். 17

சபரிமலை ஐயப்ப சுவாமியைத் தரிசனம்செய்வதற்குஇளம்பெண்களும் செல்லலாம் என்ற இந்திய உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இலங்கையின் வடக்கில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

வடக்கில்குறிப்பாகவவுனியாவில் உள்ள ஐயப்ப பக்தர்கள் இந்திய உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். தீர்ப்பை மீளப் பெறுமாறு கோரி வவுனியாவில்கவனவீர்ப்பும்நடத்தப்பட்டுள்ளது.

வன்னிமாவட்டஐயப்பசுவாமிகள் ஒன்றியம் இதைமுன்னெடுத்தது. கவனவீர்ப்பு பேரணியாக நேற்று முன்தினம் முற்பகல் 9 மணிக்கு வவுனியாகந்தசாமிகோவில்முன்றலிலிருந்து பசார்வீதி வழியாக மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது.

அங்கு ஐயப்ப பக்தர்கள் மாவட்டச் செயலர் ஐ.கனீபாவைச் சந்தித்து தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்து அதனை இந்தியத் தூதரகத்திடம் கையளிக்குமாறுகோரினர். அதனைமாவட்டச் செயலர் பெற்றுக்கொண்டார்.

அங்கு கருத்துரைத்த ஒன்றியத்தினர்,

உலகில் இன, மத, மொழி, ஜாதி, பணம், கல்வி என எதனாலும் பேதம் காட்டாது சுவாமியே சரணம் ஐயப்பா! எனும் தாரக மந்திரத்தால் அனைவரையும் ஒற்றுமைப் படுத்துகின்ற ஒப்பற்ற வழிபாடே சபரிமலை ஐயப்ப சுவாமியின்பிரம்மச்சாரியவிரதம். சபரிமலையில் ஐயப்ப சுவாமி நைஸ்டிக பிரம்மச்சாரியாக அமர்ந்த காலந்தொட்டு உலகில் உள்ள ஆண், பெண் என அனைவராலும் பின்பற்றப்பட்ட அனுஸ்டான விதி முறையே 10 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்ட பெண்கள் செல்லக் கூடாது என்பது. இதனை மாற்றி அமைத்து எமது சகோதரத்துவ ஒற்றுமையைச் சீர்குலைத்து சமூகக்கட்டமைப்பில்விரிசல்ஏற்படும் வகையில் கடந்த 28 ஆம் திகதி இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆகவே இந்தத் தீர்ப்பை மீளப்பெறுமாறு வலியுறுத்தி கண்டனப் பேரணி நடத்தினர்.



"கெடுக்காதே கெடுக்காதே இந்துக்களின் பாரம்பரியத்தைக் கெடுக்காதே, சபரிமலை புனிதத்தை கெடுக்காதே, மாற்று மாற்று தீர்ப்பைமாற்று"என்பனஉள்ளிட்ட கோசங்களை எழுப்பியவாறு அவர்கள்பேரணியில்பங்கெடுத்தனர். (4,110)

வடக்கில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்

# 420 பாடசாலைகளிலிருந்து ஒருவரேனும் வெட்டுப்புள்ளியைத் தாண்டவேயில்லை!

மாகாணக் கல்வித் திணைக்களம் கூறுகிறது

யாழ்ப்பாணம், ஒக். 17

*இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்தில் 878 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தோற்றியபோதும் 420 பாடசாலைகளில் இருந்து ஒரு மாணவரேனும் வெட்டுப்புள்ளியைத் தாண்டவில்லை - சித்தியடையும் புள்ளியைப் பெறவில்லை என்று தரவுகள் தெரிவித்துள்ளன.*

இலங்கையில் 99 கல்வி வலயங்கள் உள்ளன. இதில் 12 கல்வி வலயங்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளன. வடக்கில் 983 பாடசாலைகள் இயங்குகின்றன. இதில் ஆரம்பப் பிரிவுகளை உடைய 878 பாடசாலைகளில் கடந்த ஒகஸ்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற்றது. இதன் அடிப்படையில் குறித்த பாடசாலைகளில் 18 ஆயிரத்து 811 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இவ்வாறு தோற்றிய மாணவர்களில் 2 ஆயிரத்து 240 மாணவர்களே வடக்கில் வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளனர். வெட்டுப் புள்ளியைத் தாண்டிய 2 ஆயிரத்து 240 மாணவர்களும் 420 பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள். வடக்கு மாகாணத்தின் 420 பாடசாலைகளில் இருந்து ஒரு மாணவன்கூட வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை.

பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 92 பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 789 மாணவர்கள் தோற்றினர். எனினும் 45 பாடசாலைகளைச் சேர்ந்த 537 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டிய நிலையில் 47 பாடசாலைகளில் இருந்து எந்தவொரு மாணவரும் வெட்டுப்புள்ளியைத் தாண்டவில்லை.

வலிகாமம் கல்வி வலயத்தில் 124 பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 606 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். 59 பாடசாலைகளைச் சேர்ந்த 309 மாணவர்களே வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளனர். தீவக கல்வி வலயத்தில் இருந்து 54 பாடசாலைகளைச் சேர்ந்த 612 மாணவர்கள் பரீட்சை எழுதினர். 21 பாடசாலைகளின் 35 மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து 73 பாடசாலைகளின் ஆயிரத்து 505 மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர். 47 பாடசாலைகளைச் சேர்ந்த 206 மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 54 பாடசாலைகளில் 876 சிறார்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். 29 பாடசாலைகளைச் சேர்ந்த 101 மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர் என்று கல்வித் திணைக்களத்த தரவுகள் தெரிவித்தன. இதன் அடிப்படையில் 25 பாடசாலைகளில் எந்த மாணவனும் வெட்டுப்புள்ளியை தாண்டவில்லை.

கிளிநொச்சி மாவட்டம் ஒரேயொரு வலயத்தைக் கொண்டது. இங்குள்ள 104 பாடசாலைகளில் ஆரம்ப நிலை உள்ள 94 பாடசாலைகளில் இருந்து 2 ஆயிரத்து 752 மாணவர்கள் பரீட்சை எழுதியிருந்தனர். 68 பாடசாலைகளைச் சேர்ந்த 306 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். 26 பாடசாலைகளின் மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு கல்வி வலயங்கள் உள்ளன. முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 55 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 589 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். 33 பாடசாலைகளைச் சேர்ந்த 218 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளில் 54 பாடசாலைகளைச் சேர்ந்த 829 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். 14 பாடசாலைகளின் 34 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் உள்ள 52 பாடசாலைகளில் 39 பாடசாலைகளைச் சேர்ந்த 493 மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர். 14 பாடசாலைகளின் 27 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். மன்னார் கல்வி வலயத்தில் உள்ள 88 பாடசாலைகளில் 83 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 809 மாணவர்களில் 26 பாடசாலைகளின் 103 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள 96 பாடசாலைகளில் 79 பாடசாலைகளின் 2 ஆயிரத்து 296 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 45 பாடசாலைகளின் 327 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 76 பாடசாலைகளில் 63 பாடசாலைகளின் 655 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். 19 பாடசாலைகளின் 47 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

இவற்றின் அடிப்படையிலேயே வடக்கு மாகாணத்தில் 878 பாடசாலைகளைச் சேர்ந்த 18 ஆயிரத்து 811 பேரில் 420 பாடசாலைகளின் 2 ஆயிரத்து 240 மாணவர்கள் வெட்டுப் புள்ளியினைத் தாண்டியுள்ளனர். 458 பாடசாலைகளில் ஒருவரேனும் வெட்டுப் புள்ளியைத் தாண்ட வில்லை. (4.105)

## தொண்டு அடிப்படையில் பணிபுரிகின்ற ஆசிரியர்களை பதிவு செய்ய அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

இந்து அறநெறிப் பாடசாலைகளில் தொண்டு அடிப்படையில் ஆசிரியர்களாகப் பணி புரிபவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்தது.

இது குறித்து திணைக்களம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

இந்து இளம் இந்து சிறார்களின் தெய்வீகத் தன்மையை மலரச் செய்து அவர்களின் ஆளுமைகளும் திறமைகளும் மலர்ந்து விரிவடையச் செய்யும் கல்வியை வழங்கல் எனும் உயரிய குறிக்கோளையும் இலட்சியத்தையும் கொண்டு இயங்குபவை இந்துஅறநெறிப்பாடசாலைகள்.

இந்த நோக்கத்தை விரிவுபடுத்துவதற்காக நாடுமுழுவதிலும் உள்ள அனைத்து இந்து அறநெறிப் பாடசாலைகளிலும் தொண்டு அடிப்படையில் சேவைசெய்ய ஆர்வம் உள்ளவர்களை இந்து அறநெறி ஆசிரியர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான திட்டமொன்றை இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களம்முன்னெடுத்து வருகின்றது.

சாதாரண தரம், உயர் தரம் கற்று நிறைவுசெய்த இந்து ஆண், பெண் இருபாலாரும் பதிவு செய்யலாம். தியாக மனப்பான்மையுடன் சமூக சேவையில் விருப்பம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும் அறநெறி ஆசிரியர்களாக இணைந்து கொள்பவர்களுக்கு இந்து அறநெறிக் கல்வி தொடர்பான அடிப்படைப் பயிற்சிநெறி வழங்கப்படும். தொடர்ந்து சான்றிதழ் பயிற்சிநெறி பட்டயப் பயிற்சிநெறி போன்றவற்றில் பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம். இந்துஆசிரியர்களின் சமயஅறிவை மேம்படுத்தும் அடிப்படைப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து இந்து இறுதி நிலைப் பரீட்சையையும் உயர் கற்கைநெறியைப் பூர்த்திசெய்து இந்து தர்மாசிரியர் பரீட்சையிலும் சித்தி பெற்றுச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

முழுமையாகத் தொண்டு அடிப்படையிலேயே சேவை செய்ய விரும்புபவர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

சுருக்கமான சுயவிவரக் கோவையுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், இந்துகலாசாரஅலுவல்கள் திணைக்களம், 248 1/1 காலி வீதி, கொழும்பு04. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று திணைக்களம் விடுத்த செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

மன்னார் மாவட்டத்தில்

## மதத் தலைவரின் கடுந் தலையீட்டால் கல்வி அதிகாரி தாமதமாக நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 17

வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் நியமனம் தொடர்பில் மதம் சார் தலைவரின் தலையீடு காரணமாக காலதாமதமாகவே நியமனம் இடம்பெற்றதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் இரு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களும் ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் உடனடியாக அந்த இடங்களை நிரப்பும் நோக்கில் பிரதிப் பணிப்பாளர்களை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கடந்த வாரம் நியமித்திருந்தது.

நியமிக்கப்பட்ட ஒருவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்குமாறு மன்னார் மாவட்டத்தின் மூத்த மதம் சார் தலைவர் கல்வி அமைச்சுக்குத் தொலைபேசி மூலமாகக் கடும் அழுத்தம் கொடுத்துள்ளார்.

இதன் காரணமாக மதத் தலைவர் பரிந்துரைத்தவரின் பெயரையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய நிலமை கல்வி அமைச்சுக்கு ஏற்பட்டு மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தியதில் மதத் தலைவரால் பரிந்துரைக்கப்பட்டவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் 3 இல் இருப்பவர். கல்வி நிர்வாக சேவை தரம் 2 இனைச் சேர்ந்தவர்களும் பணியில் இருந்தனர். அதனால் அதில் ஒருவருக்கே இறுதியில் நியமனம் வழங்கப்பட்டது.

கல்வி அதிகாரிகள் நியமனங்களில் அரசியல்வாதிகளின் தலையீடு இருக்கக்கூடாது எனக் குரல் எழுப்புவது போன்று எதிர் காலத்தில் மதத் தலைவர்களின் தலையீடும் இருக்கக் கூடாது என்று அழுத்தம் வழங்க வேண்டிவரும் என்றும் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். (4,105)

யாழ். பொது நூலகத்திலுள்ள

## ஆரம்பகாலத்தில் வந்த பத்திரிகைகளை இலத்திரனியல் மயமாக்குவது ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் ஆரம்பகாலப் பத்திரிகைகளை இலத்திரனியல் மயமாக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நூலக நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாணப் பொது நூலகம் ஆசியாவில் மிகவும் சிறப்பு வாய்ந்ததும், பல வரலாற்றுப் பதிவுகளையும் கொண்டுள்ளது. மிகப் பழைமையான புத்தகங்கள் தொடக்கம் புதிய புத்தங்கள் வரை நூலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. ஆரம்பத்தில் பத்திரிகைகள் மக்களுக்குப் பல செய்திகளை வழங்கியுள்ளன. அந்த விடயங்கள் காலங்கள் சென்றாலும் ஏதோ ஒரு நாள் தேவையாக உள்ளது. சிலர் நூலகத்துக்கு வந்துகுறித்த ஆண்டைத் தெரிவித்து அந்த ஆண்டுக்கு உரிய பத்திரிகைகளைப் பார்வையிட வருவார்கள். மிகப் பழைய காலத்துக்குரிய பத்திரிகைகளும் உள்ளன. அதனைத் தேடிப் பார்ப்பது கடினம்.

ஆகவே இடப் பிரச்சினை மற்றும் வாசகர்களின் நன்மை கருதி 1981 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யாழ்ப்பாணத்தில் வெளியாகிய பத்திரிகைகளை இலத்திரனியல் மயமாக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழைய பத்திரிகைகளை ஸ்கான் செய்து அதனை ஆவணமாக இறுவெட்டில் பதிவேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக அனைத்துப் பத்திரிகைகளையும் ஆண்டு, மாதம், நாள், பக்க எண் என்ற ரீதியில் தேவையானவர்களுக்கு நகல் எடுத்து வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

## தொழுகை செய்வதற்கான இடம் போதாதெனின் விரிவாக்கப்படும்

பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் முஸ்லிம்கள் தொழுகைக்கு ஏற்கனவே இடம் உள்ளது. அந்த இடப் பரப்பு போதாதெனின் இடம் விரிவாக்கப்படும் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மருத்துவமனையில் விசாலமான இடம் ஒதுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் பைசல்காசிம் செய்திக் குறிப்பு ஒன்றை நேற்று விடுத்தார். இது குறித்துக் கேட்டபோதே பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (4)

## சாவகச்சேரி பொதுநூலகத்தின் மாணவர்களுக்கான போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி பொது நூலகத்தினர் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளை நாளைமறுதினம் நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நூலக மண்டபத்தில் பி.ப.3 மணிக்கு தரம் ஒன்று மாணவருக்கான சித்திரப் போட்டியும், எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு தரம் 3 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு தரம் 4 மாணவருக்கான பொது அறிவும் நுண்ணறிவும் போட்டியும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தரம் 2 மாணவருக்கு வாசிப்பு போட்டியும் மு.ப. 11.30 மணிக்கு தரம் 5 மாணவருக்குப் பேச்சுப் போட்டியும் இடம்பெறும். (4,9)

காணி, வீடு விற்பனைக்கு
அச்சுவேலி வடக்கில்
3.5 பரப்புக் காணியுடன் கூடிய வீடும், கடையும் விற்பனைக்கு உண்டு.
(CS/20618)(11,15,17)
076 638 4734, 077 347 7137, 077 501 7655

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
13.09.1945

இறைவனடியில்
17.09.2018



## அமரர் நவரத்தினம் சாமுவேல் மகாரத்தினம்

**"இயேசு அவளை நோக்கி நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றைக்கும் மரியாமல் இருப்பான்" யோவான் 11: 25-26a**

கரம்பகம் மிருசுவிலை பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி இமையாணன் மேற்கு துவாளி வீதியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் நவரத்தினம் சாமுவேல் மகாரத்தினம் கர்த்தருக்குள் நித்திரையடைந்த செய்தியைக் கேட்டு உடனடியாக் நேரில் வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசியூடாகவும் மின்னஞ்சலூடாகவும் எம்முடன் துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி ஆராதனையை நடத்திய தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி D.S.தியாகராஜா உட்பட சகல மதகுருமாருக்கும் பங்குபற்றிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அவர் சுகவீனமுற்றிருந்தபோது வைத்திய உதவிகளை வழங்கிய மந்திகை ஆதாரவைத்தியசாலை வாட் 6, யாழ்.போதனா வைத்தியசாலை வாட் 10, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வாட் 14 பீ வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.**

**துவாளி வீதி,**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.** (IN/8071)(11,17) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
25
10
1945



இறப்பு
15
10
2018

## வள்ளிபுரம் வேலுப்பிள்ளை

(கமக்கார அமைப்பின் பொறுப்பாளர் D5 $LB^2$)

தாவளை இயற்றாலை, வரணியை பிறப்பிடமாகவும் D5 பெரிய பரந்தன் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிபுரம் வேலுப்பிள்ளை (கமக்கார அமைப்பின் பொறுப்பாளர் D5 $LB^2$ ) 15.10.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வள்ளிபுரம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், தவமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சீதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, ரவீந்திரராசா மற்றும் விமலாதேவி, யோகேஸ்வரன், கமலேஸ்வரி, சகுந்தலாதேவி, சந்திர கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**
(AKN/5789)(11,17)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2019 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2019.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 18.10.2018 – 01.11.2018 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி - 02.11.2018 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 02.11.2018 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,552,200.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 2,441,450.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 71,500.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 43,670.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 54,615.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் கடை இல.05 | 750.00 | 7,500.00 | 99,000.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 40,480.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 23,787,500.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 50,000.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 115,500.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 100,100.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 68,750.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 35,200.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 275,660.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 257,422.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 110,000.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 45,000.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின; 1/3 பங்குத் தொகையை 2018.11.19ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2018.11.19 ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருள்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை "**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை "**பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க.தர்ஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

17.10.2018

# தலைமை அமைச்சரின் ஒப்பந்தத்தை குமாரவெல்கம செயற்படுத்த முயல்கிறார்

## கூட்டு எதிரணி எம்.பிக்கள் மகிந்தவிடம் பகிரங்க முறைப்பாடு

**கொழும்பு, ஒக். 17**

**கூட்டு எதிர்க்கட்சியின் மூத்த உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முயன்று வருகின்றார் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹெகலிய ரம்புக்வெல, மகிந்தானந்த அளுத்கமகே, ரொஹான் ரத்வத்த, ஆகியோர் இணைந்து பகிரங்கமாகக் குற்றச்சாட்டை மகிந்த ராஜபக்சவிடத்தில் முன்வைத்துள்ளனர்.**

கூட்டு எதிர்க்கட்சியின் மக்கள் சந்திப்புநேற்றுமுன்தினம் கண்டியில்முன்னாள்அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அவர்கள் முன்வைத்த விடயங்கள் வருமாறு.

ஹெகலியரம்புக்வெலகூறுகையில், சரியாகக் கணக்கு பார்க்கின்றபோது 358 நாள்கள் நாம் தொடர்ந்தும்இதேஉத்வேகத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது.

நான்கு வருடங்கள் நெருக்கடியானசூழலையெல்லாம்கடந்து வந்துள்ள எமக்கு இந்த 358 நாள்களைகடந்துசெல்வதுஒன்றும் பெரும் விடயம் அல்ல. ஆனால் சிலருக்கு அவ்வாறு இருக்க முடியாதுள்ளது. குறிப்பாககண்டியைச்சேர்ந்தஒருவர் கூறும் கருத்துக்களை எமக்கு காதுகுடுத்து கேட்கவே விருப்பமில்லாதுஇருக்கின்றோம். நாம் கூட்டு எதிர்க்கட்சியை மிகவும் சரியாக முன்னகர்த்தி வந்திருந்தோம். ஆனால் கடந்த ஒரு சில மாதங்களாக சில கதைகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இதனைப் பார்க்கின்றபோது எமது கூட்டணியைச் சிதைப்பதற்கு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு வருகின்றார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது- என்றார்.

ரொஹான் ரத்வத்த தெரிவித்ததாவது:

எங்களுக்கு பக்கத்தில் உள்ள சிலர் ஆடைகளை அணிந்து கூட கதைக்க முடியாதவர்கள் இப்போது ஒவ்வொரு கதைகளை கூற ஆரம்பித்துள்ளார்கள். எமக்கு என்று ஒரு தலைவர் தான் உள்ளார். அவர் தான் மகிந்தராஜபக்ச. ஆகவேஏனையவர்கள் கூறும் கதைகளை நாம் சிந்திக்க வேண்டியதில்லை. நான் யாரைப்பற்றிக் கூறுகின்றேன் என்பது உங்களுக்கு தெரியும் என்று நினைக்கின்றேன்.. அவ்வாறானவர்களுக்கு ஒரு செய்தியைக் கூறுகின்றேன். எமது அணியை சிதைக்கும் வகையில் வேறு யாருரின் கயிற்றை விழுங்கிக் கொண்டுபின்செல்ல வேண்டாம் என்று கோருகின்றேன் மகிந்த ராஜபக்ச யாரை அரச தலைவர் வேட்பாளராக முன்மொழிகின்றாரோ அவருக்காக நாம்செயற்படுவோம்-என்றார்.

மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்ததாவது, எமக்கிடையில்வெவ்வேறுநிலைப்பாடுகள் பகிரங்கமாக வெளிவருவது பொருத்தமானதல்ல.

ஆகவே தலைவர் என்ற அடிப்படையில் தாங்கள் இதனைக் கவனத்தில்கொள்ளவேண்டும். நான் ஏற்கனவே இந்த விடயத்தினை தங்களிடத்தில் கூறும் போது தாங்கள் அமைதியாக இருக்குமாறு கூறினீர்கள். அதனை நான்பின்பற்றினேன். அரசதலைவர் வேட்பாளர் என்பதை தாங்கள் பொருத்தமான நேரத்தில் அறிவிப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அவ்வாறான அறிவிப்பைவிடுக்கும் பட்சத்தில் அந்த வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கோத்தபாய தொடர்பில் பயம் வருவதென்பது இயல்பானது.

ஆனால் வெல்கவுக்கு கோத்தாபயதொடர்பில்பயம்வருவதற்கு என்னகாரணம். எமது அணியினர் ஏன் எதிராளிகளின் நிலைப்பாட்டைனைபொறுப்பெடுக்கின்றார்கள்என்றகேள்விஎனக்குள் எழுகின்றது. ரணிலுக்கு ஏற்பட்டிருக்கும்பயம்தொடர்பில்எமது அணியினர் ஏன் பேசவேண்டும். ஆகவேரணிலுக்குதேவையானதைப் பேசிக்கொண்டு அவருக்கு வக்காளத்து வாங்க வேண்டாம்என்றுமிகவும்தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றோம். மக்கள் எதிர்பார்த்துள்ள நேரத்தில் எமது புரட்சியை வலுவிழக்கச் செய்வதற்கு இடமளிக்கமாட்டோம்-என்றார். (61)

### அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் மீண்டும் எதிரணிக்குள் முரண்பாடு

கொழும்பு, ஒக். 17

அடுத்த அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணிக்குள் மீண்டும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்குக் கோத்தாபய ராஜபக்கவே மிகவும் பொருத்தமானவர்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட அவர், நாட்டுக்குத் தலைமை தாங்கப் பொருத்தமானவர். அவருக்குப் பின்னால் கூட்டு எதிரணி இருக்கிறது" என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, "சமல் ராஜபக்சதான் பொருத்தமான அரச தலைவர் வேட்பாளர்" என்று கூறியுள்ளார்.

கூட்டு எதிரணிக் கட்சிகள் மத்தியில் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காக, அடுத்த அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாகதாம் எதுவும்பேசாமல் இருந்ததாகவும், ஆனால், கோத்தாபய ராஜபக்சவை பந்துல குணவர்த்தன முன்மொழிந்துள்ள நிலையில் இனிமேலும் தாம் அமைதியாக இருக்க முடியாது என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இதனால், கூட்டு எதிரணிக்குள், அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் மீண்டும் சர்ச்சைகள் வெடிக்கத் தொடங்கியுள்ளன.

## அணை மற்றும் பாதை திட்டத்தில் கடன் பிரச்சினை

ஒப்புக் கொள்கிறது சீனா



கொழும்பு, ஒக். 17

தமது அணை மற்றும் பாதை திட்டத்தில் சில கடன் பிரச்சினைகள் இருப்பதாக, சீனாவின் துணை நிதி அமைச்சர் சூ ஜியாயி ஒப்புக் கொண்டுள்ளார் என்று ரொய்ட்டர்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. தமது வெளிநாட்டு முதலீடுகளில் கடன் நிலைத் தன்மை தொடர்பாக, சீன அரசு. நுண் - கண்காணிப்பை வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தோனேசியாவில் அனைத்துலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின், கூட்டங்களின் பக்க நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "அணை மற்றும் பாதை திட்டத்தில், கடன் நிலைத்தன்மை ஒரு சிக்கலான பிரச்சினை. ஆனால், நாங்கள் அதனைக் கவனத்தில் கொள்வோம்." என்றும் அவர் கூறியுள்ளார்.

## அரசை வீட்டுக்கு அனுப்பும் காலம் வந்துவிட்டது அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### கூறுகின்றார் முன்னாள் அரச தலைவர் மகிந்த

கொழும்பு, ஒக். 17

அரசை வீட்டுக்கு அனுப்பும் காலம் வந்துவிட்ட நிலையில் அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சதெரிவித்தார். கூட்டுஎதிர்க்கட்சியின்மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர்தேர்தல் உரிய காலத்தில் நடைபெறவேண்டும். இன்னமும் 358 நாள்களே இருக்கின்றன. அதன் பின்னர்உரியதினத்தில்வேட்பாளர் பத்திரத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டி வரும். தற்போது அரசின் இறுதி காலப்பகுதி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே நாம் அடுத்த தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அது எந்தத் தேர்தலாகவும் இருக்கலாம்.

தற்போது பாதீடு வரவுள்ளது. இறுதி வருடம் என்பதால் மக்களை ஏமாற்றுவதற்காகப் பல்வேறு உதவித்திட்டங்களை முன்வைக்க அரசு முயற்சிகளைஎடுக்கும்என்பதைநாம் அறிவோம். அதேநேரம் ஆட்சியில் உள்ளவர்கள் மக்கள் நலத்திட்டங்களை முன்வைக்க விரும்புகின்றவர்கள் அல்லர். ஆகவே அதனை அவர்களிடத்தில் எதிர்பார்க்க முடியாது.

எங்களை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக லம்போகனி, தங்கங்கள் உள்ள பெட்டகம், இப்படிபலவிடயங்களை கூறினார்கள். தற்போது அவை எவற்றையும் கண்டுபிடித்தாகவே இல்லை. தற்போதைய அரசு சம்பந்தமாக நாட்டின் அரசதலைவர்என்ன கூறுகின்றார் என்று ஒரு தடவை கவனத்தில் கொள்ளுங்கள். பாதீடு கடன்படு தொகையைக் குறைப்பதற்கு ஊழல் மோசடிகள் அற்ற அமைச்சர்கள் அவசியம் எனக் கூறுகின்றார். நில்வளகங்கை திட்டத்துக்கான கேள்விப்பத்திரத்தை அரசஅமைச்சர்கள்இருவர்இலஞ்சம்கோருகின்றனர். அதிவேக இலத்திரனியில் தொடருந்தைக் கொண்டுவருவதற்காகஇலஞ்சம் கோரியதாக அரச அதிகாரியாலேயே குற்றச் சாட்டு முன்வைக்கப்படுகின்றது. ஆகவே இவற்றை எல்லாம் கருத்தில் கொள்கின்றபோது அரசினை வீட்டுக்கு அனுப்பும் காலம் வந்துள்ளது என்பது உணரப்பட்டுள்ளது. இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (61)

## குமாரவெல்கம மீது குற்றச்சாட்டு: மௌனம் காத்தார் மகிந்த



கொழும்பு, ஒக் 17

அடுத்த அரசதலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச களமிறக்கப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிட்டமை உட்பட இடைக்கால அரசுக்கு எதிர்ப்பு வெளியிட்டமை உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் மையப்படுத்தி குமார வெல்கம மீது கண்டி மாவட்டத்தினைச் சேர்ந்த கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அமைதியாக இருந்துள்ளார்.

அவருடைய உரையிலும் சரி மக்கள் சந்திப்பின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய போதும் சரி குமாரவெல்க மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்விதமான கருத்துக்களை யும் மகிந்த முன்வைத்திருக்கவில்லை என உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (61)

# சீன வணிக அமைச்சரைச் சந்திக்கிறார் மலிக்

கொழும்பு, ஒக். 17

சீனாவுடன் சுதந்திர வணிக உடன்பாடு செய்து கொள்வது தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் இலங்கை அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக தாம் அடுத்த மாதம், சீனாவின் வணிக அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாக, இலங்கையின் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவின் ஷங்காய் நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அனைத்துலக மாநாடு ஒன்றில் பங்கேற்கச் செல்லும்போது, சீனாவின் வணிக அமைச்சரைச் சந்திக்கவுள்ளேன்.

சுதந்திர வணிக உடன்பாடு தொடர்பாக இலங்கை தற்போது, இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது. பங்களாதேசுடனான சுதந்திர வணிக உடன்பாடு தொடர்பில் கூட்டு சாத்திய ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது -என்றார்



## இமயமலையில் பனிப்புயல் 9 மலையேறிகள்; சாவு!

கட்மண்டு, ஒக்.17
நேபாளத்திலுள்ள இமயமலைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கடுமையான பனிப்புயல் வீசியிருக்கிறது. அதில்சிக்கி உயிரிழந்ததாகக் கருதப்படும் ஒன்பது மலையேறிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. நேபாளத்திலுள்ள இமய மலைப் பகுதியில் தென்கொரியாவைச் சேர்ந்த மலை ஏற்றக் குழுவும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக நேபாளத்தைச்சேர்ந்த 4பேரும் சென்றுள்ளனர். கடந்த சனிக்கிழமை வீசிய பனிப் புயலில் இந்தக் குழுவினர் சிக்கியிருக்கின்றனர். அதில் 9பேர் சாவடைந்துள்ளனர். இதில் சாவடைந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மிகஅதிகமான உயரத்தில் இவர்கள் கூடாரத்தை அமைத்ததே புயலில் சிக்கியதற்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இமய மலையில் சில ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட மோசமான விபத்தாக இது கருதப்படுகின்றது.

### காணாமல்போன பத்திரிகையாளர் ஜமால் விவகாரம்


# சவூதி தூதரகத்துக்குள் துருக்கி சோதனை சவூதி செல்கிறார் அமெ. அயலுறவு அமைச்சர்

இஸ்தான்புல்.ஒக்.17
பத்திரிகையாளர் ஜமால் காணாமல்போன விவகாரம் தொடர்பாக இஸ்தான்புல் நகரில் உள்ள சவூதியின் தூதரகத்துக்குள் துருக்கிப் பொலிஸார் கடும் சோதனை நடத்திவருகின்றனர். இந்தநிலையில் அமெரிக்காவின் அயறவுத்துறை அமைச்சரன மைக் பாம்பியோ சவூதிக்குச் செல்லவிருப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.









சவுதி அரேபிய பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி (வயது -59) சவுதி அரேபிய மன்னராட்சியை கடுமையாக விமர்சித்து வந்தவர். ஏமனில் சவூதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்தி வருகிற வான் தாக்குதல்களையும் கடுமையாகச்சாடிவந்தவர். இவர் கடந்த 2ஆம் திகதி துருக்கியின் இஸ்தான்புல்நகரில் உள்ள சவூதிஅரேபியத்துணைத்தூதரகத்துக்கு சென்றபோது, காணாமல்போயிருந்தார். அவர் அந்தத் துணைத்தூதரக கட்டடத்தின் முதன்மை நுழைவு வாயில் ஊடாகக் கட்டடத்துக்குள் சென்றிருக்கிறார். அதன் பின்னர் அவர் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. அதே நேரத்தில் அவர் அந்தத் தூதரகக் கட்டடத்துக்குள் வைத்து, சவூதி அரேபியப் புலனாய்வுத் துறையினரால், கொலை செய்யப்பட்டு விட்டதாகத் துருக்கி குற்றம்சாட்டுகின்றது. அந்தக் கொலைக்கு சவூதி அரேபியாதான் காரணம் என்ற குற்றச்சாட்டுவலுத்துவருகிறது. இந்தக் குற்றச் சாட்டைச் சவூதி அரேபியா மறுத்து வருகிறது. ஜமால் காணாமல் போன குறித்த தூதரகத்தைத் துருக்கிப் பொலிஸார் சோதனை செய்து வருகின்றனர். நீண்ட இழுபறிக்குப் பின்னரே சவூதிஅரேபிய அரசு இதற்குஅனுமதிஅளித்திருக்கிறது. அவர் அந்தத் தூதரகக் கட்டடத்தின் பின்புறவாயில்வழியாக உயிருடன்வெளியேறிவிட்டதாகச் சவூதி அரேபியா கூறுகிறது. ஆனால், அவர் அப்படிவெளியேறியதற்குரிய ஆதாரங்கள் எவையும் இல்லை. இந்த விவகாரத்தில் சவூதி அரேபியா மீது அமெரிக்கா கடும் கோபம் கொண்டுள்ளது. இந்த நிலையில்தான் பத்திரிகையாளர் ஜமால் காணாமல்போன விவகாரத்தின் நிலவரத்தைத் அறிந்துக் கொள்வதற்காக அமெரிக்காவின் அயலுறவுத் துறை அமைச்சர் மைக்-பாம்பியோ சவூதி செல்ல இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**பின்னணி**

அமெரிக்காவிலுள்ள 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும், அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தவர் ஜமால். துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில், இரண்டு வாரங்களுக்கு முன்னர் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றபோது அவர் காணாமல் போயிருந்தார். இதில் தொடர்புடைய சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத்துருக்கிவெளியிட்டிருந்தது. ஜமாலைச் சவூதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறி அதற்குரிய காணொலி, குரல்பதிவு ஆதாரங்களை வெளியிட்டது. ஜமால் கொலை செய்யப்பட்டது உறுதியானால் கடுமையான தண்டனைகளுக்குச் சவூதி உள்ளாக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், எச்சரித்தார். பிரிட்டன் ஐக்கிய நாடுகள் சபை என்பனவும் சவூதியை விமர்சித்தன. தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வந்த சவுதி, எங்கள் மீது நடவடிக்கைஎடுக்கப்பட்டால் அதைவிடக்கடுமையான எதிர்வினையை உலக நாடுகள் சந்திக்கநேரிடும் என்று தெரிவித்தது. இந்தநிலையில்தான் துருக்கியப் பொலிசாரின் சோதனை நடவடிக்கையும், மைக் பாம்பியோவின் சவூதிக்கான பயணமும் தொடர்கின்றன.



## 'அரச தலைவர் தேர்தலில் சீனாவும் தலையிட்டது'

### டிரம்ப் திடீர்க் குற்றச்சாட்டு

வோசிங்டன்.ஒக்.17
அமெரிக்கஅதிபர்தேர்தலில்சீனாவும்தலையிட்டது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார். 2016ஆம்ஆண்டுஇடம்பெற்றஅமெரிக்கஅதிபர் தேர்தலில்ரஷ்யாவின்தலையீடுஇருந்ததாகஅதிபர் ட்ரம்ப்தொடர்ந்தும்கூறிவருகிறார். இந்தநிலையில் தான்சீனாமீதுஒருகுற்றச்சாட்டைஅவர்முன்வைத்திருக்கிறார். அதாவது, தான் அமெரிக்க அதிபராக இருப்பதைச் சீனா விரும்பவில்லை என்றும், அதனால் இந்த ஆண்டுக்குள்(2018) அமெரிக்காவில் இடைத் தேர்தலை நடத்துவதற்குரிய வேலைகளைத் தூண்டி விடுவதற்குச் சீனா முயற்சித்து வருவதாக அவர்குற்றம்சாட்டியிருக்கிறார். இதைச்சீனா மறுத்துள்ளது. அமெரிக்காவின்சி.பி.எஸ். என்கின்ற செய்திச் சேவைக்கு ட்ரம்ப் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார். சீனா மீது டிரம்ப் இதுபோன்ற குற்றச்சாட்டை முன்வைப்பது இதுவே முதல்முறையாகும். குறித்த தேர்தலில்ரஷ்யாவின் தலையீடு இருந்ததா? என்பது பற்றி முன்னாள் புலனாய்வு இயக்குநர் ரொபேர்ட் முல்லர் தலைமையிலான குழு விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா எதிர்பார்க்கிறது!

தெஹ்ரான்.ஒக்.17
ஈரானில் ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா எதிர்பார்க்கிறது என்று ஈரானின் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார். 'தற்போதுள்ள அமெரிக்க அரசு ஈரானுடன் கடந்த 40ஆண்டுகளில் இல்லாத விரோதத்தைக் கடைப்பிடிக்கிறது. ஒருவர் மட்டும் எதிரியாக இருந்துக் கொண்டு மிதமுள்ளவர்கள் அவரை வழி நடத்திய காலம் ஒன்று இருந்தது. ஆனால், தற்போதுமோசமான அனைவரும் இணைந்து கொண்டுள்ளனர். அமெரிக்காஈரானில்ஆட்சிமாற்றத்தை எதிர்பார்க்கிறது. அமெரிக்காவால் ஈரான் ஏற்றுமதியைக் குறைக்க இயலாது. எண்ணெய்த் தேவையை ஈரானுக்குப் பதில் சவூதி ஈடுசெய்யும் என்று அமெரிக்கா கருதுகிறது. ஆனால் ஈரானின் எண்ணெய் தற்போது 80 டொலைரை எட்டியுள்ளது. ஏற்றுமதியில் ஈரான் முன்னர் எந்த அளவு வருமானம் ஈட்டியதோ அதே அளவு வருமானத்தைத் தற்போதும் பெறுகிறது' என்றிருக்கிறார்.

**பின்னணி**

அமெரிக்கஅதிபராகட்ரம்ப்பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணுஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் கடுமையாகவிமர்சித்துவந்தார். இந்த நிலையில் ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. அதைத் தொடர்ந்து ஈரான் மீது பொருளாதரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. தற்போது ஈரானின் முக்கிய ஏற்றுமதியான கச்சா எண்ணெயை பிற நாடுகள் வாங்கக் கூடாது என்றும் அமெரிக்கா மிரட்டல் விடுத்திருக்கிறது.







## ஏமனின் தலைமை அமைச்சர் பதவி நீக்கம் அதிபர் மன்சூர் ஹாதி அதிரடி நடவடிக்கை!

சனா.ஒக்.17
ஏமன் நாட்டின் தலைமை அமைச்சர் அஹமத் ஒபைட் பின் டக்ர் ஐப் பதவியிலிருந்துநீக்கிப்புதியதலைமை அமைச்சரை நியமித்துள்ளார் அந்த நாட்டின் அதிபர் அதிபர் மன்சூர் ஹாதி. ஏமன் நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த காலித் பஹாவை 2016ஆம் ஆண்டு நீக்கி அஹமத் ஒபைட் பின் டக்ர்ஐ புதிய தலைமை அமைச்சராக்கியிருந்தார் அதிபர் அபட் ரப்போ மன்சூர் ஹாதி. 2016இல் இருந்து அஹமத் ஒபைட் பின் டக்ர் தலைமை அமைச்சராகச் செயலாற்றி வந்தார். ஏமன் நாட்டில் பொருளாதாரச் சூழ்நிலை மிகவும் பாதிப்படைந்து வருவதாகப் பெரும்பாலான மாகாணங்களில் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில் தலைமை அமைச்சர் அஹமத் ஒபைட் பின் டக்ர்ஐ அதிபர் அபட் ரப்போ மன்சூர் ஹாதி நேற்று அதிரடியாகப் பதவி நீக்கியுள்ளார். அவருக்குப் பதிலாக 38 வயதான மயீன் அத்துல் மலேக்ஐ புதிய தலைமை அமைச்சராக நியமித்துள்ளார். சலேம் அஹமது சயீத் என்பவரைத் துணைத் தலைமை அமைச்சராக நியமித்துள்ளார். சமீப காலங்களாக அரசின் பொருளாதாரம் மற்றும் சேவைத் துறைகளில் அலட்சியமாகச் செயல்பட்டதால்இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# மாலைதீவில் மக்கள் போராட்டம்

மாலைதீவில் அண்மையில் இடம்பெற்ற அதிபர் தேர்தலுக்கான வெற்றியை எதிர்த்து அந்த நாட்டின் உயர்நீதி மன்றில் முன்னாள் அதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை அடுத்து அவருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாலைதீவில் சமீபத்தில் அதிபர் தேர்தல் நடந்தது. அதில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் இப்ராகிம் முகமது சாலிக் வெற்றி பெற்றார். தேர்தலில் முறைகேடு நடத்தி வெற்றி பெற்றுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை மாலைதீவுத் தேர்தல் திணைக்களம் ஏற்க மறுத்துள்ளது. அதற்கு மாறாகத் தேர்தல் வெற்றியை எதிர்த்து அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அது விசாரணைக்கு ஏற்கப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மாலே நகரில் நேற்றுமுன்தினம் நடந்த போராட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

# நுழைவிசைவு விவகாராம் டிரம்ப் அரசுக்கு எதிராக வழக்கு!

வோசிங்டன்.ஒக்.17

'எச்1பி' நுழைவிசைவுக்கான கட்டுப்பாட்டுக்கு எதிராக அமெரிக்காவின் ட்ரம்ப் அரசு மீது ஐ.டி. நிறுவனங்கள் 2ஆவது முறையாக வழக்குத் தாக்கல் செய்துள்ளன. அமெரிக்க அரசு 'எச்1பி' நுழைவிசைவு வழங்குகிறது. இந்த நுழைவிசைவு மூலம் அங்கு வெளிநாட்டினர் நிரந்தரமாகக் குடியேற முடியாது. இது அமெரிக்க நிறுவனங்களில் வெளிநாட்டினர் பணிபுரிவதற்கான நுழைவிசைவாகும். அதன்மூலம் வெளிநாட்டு ஊழியர்கள் அமெரிக்காவில் 3ஆண்டுகள் வரை தங்கிநின்று பணிபுரிய முடியும். ட்ரம்ப் அதிபராகப் பதவி ஏற்றவுடன் இந்த நுழைவிசைவுக்கான கட்டுப்பாடுகளை அதிகப்படுத்தினார். அதன்மூலம் எச்பி நுழைவிசைவின் காலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. அமெரிக்காவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஐ.டி. நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அங்கு எச்1பி நுழைவிசைவுவைப் பயன்படுத்தி இலட்சக்கணக்கான ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இதன் காலத்தைக் குறைப்பதன் மூலம் இங்கு பணிபுரியும் வெளிநாட்டு ஊழியர்கள் மட்டுமின்றி ஐ.டி. நிறுவனங்க ளும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியிருப்பு சேவை துறையின் மீது டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள நகர ஐ.டி நிறுவனத்தினர் வழக்குத் தொடர்ந்துள்ளனர். குறித்த நுழைவிசைவு செல்லுபடியாகும் காலத்தைக் குறைக்க கூடாது என்றும், இதை வழங்கும் அதிகாரத்தைத் தொழிலாளர் துறைக்கு வழங்குவதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் பரிந்துரைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# காசாப்பகுதியில் இஸ்ரேல் துப்பாக்கிச்சூடு

## 24 பாலஸ்தீனர்கள் சாவு

காசா.ஒக்.17

காசாப் பகுதியில் இஸ்ரேல் கடற்படை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 24 பாலஸ்தீனர்கள் உயிரிழந்த சம்பவம் அந்தப்ப குதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காசாபகுதியில்அமைதி ஊர்வலத்தில்பங்கேற்றபாலஸ்தீனர்களில்24பேர்இஸ்ரேல்கடற்படையினரால்சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்தச் சம்பவம் அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாலஸ்தீன் உயர் தேசியக் குழுவின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேரணியில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் காசா கடற்பகுதியில் படகுகள் மூலம் பேரணியில் ஈடுபட்டிருக்கின்றர். அப்போது அவர்கள் மீதுஇஸ்ரேல்கடற்படையினர்கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில், 24 பாலஸ்தீனர்கள் சம்பவ இடத்திலேயெ பரிதாபமாக உயிரிழந்தனர். அமைதிப் பேரணியில் பங்கேற்றவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் காசா பகுதியில் பெரும் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

**பின்னணி**

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனுக்கும் இடையே நெடுங்காலமாக மோதல் இருந்து வருகிறது. பாலஸ்தீனைப் பொறுத்தவரையில், அங்கு ஹமாஸ் இயக்கம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இஸ்ரேல் இராணுவத்தினர் மீது தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிற ஹமாஸ் இயக்கம், பாலஸ்தீன மக்களிடையே செல்வாக்குப் பெற்று உள்ளது. பாலஸ்தீனர்களுக்குஇஸ்ரேலைமீட்டுக்கொடுத்து,மேற்குக் கரை, காசா ஆகிய பகுதிகளைக் கொண்ட இஸ்லாமியக் குடியரசாக மாற்றுவதே ஹமாஸ் இயக்கத்தினர் நோக்கம் ஆகும். ஹமாஸ்இயக்கத்தினரை இஸ்ரேல்பயங்கரவாதிகள் எனக் கூறுகிறது. இந்த நிலையில்தான்பாலஸ்தீனர்கள்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

# இடைவிடாது தாக்கிய புற்றுநோயால் 'மைக்ரோ சொவ்ப்ட்' இணை நிறுவனர் சாவு!

நியூயோர்க்.ஒக்.17

'மைக்ரோ சொவ்ப்டின்' இணை நிறுவனரும் சிறந்த கொடை வள்ளலுமான பால் ஆலன் புற்றுநோய்க் காரணமாகச் சாவடைந்திருக்கிறார். இறக்கும்போது அவருக்கு வயது 65. நீண்ட காலமாகப் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த அவர், 'மைக்ரோ சொவ்ட்' நிறுவுனரான பில் கேட்ஸின் இளமைக்கால நண்பர். கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திய இவரும் பில்கேட்சும் இணைந்தே 43 ஆண்டுகளுக்கு முன்னர் மைக்ரோ சொவ்ப்ட் நிறுவனத்தைத் தொடங்கியிருந்தனர். அதில் தொடர்ந்து புதிய விடயங்களைப் புகுத்தி, அதை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற இவர், தனது 30 வயதுக்குள், தமது நிறுவனத்தை வர்த்தக ரீதியில் உச்சம் தொட வைத்தார். இடையில் புற்றுநோய் தாக்கியதால், வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். அதிலிருந்து மீண்டு வந்த அவர் தொடர்ந்தும் பணிகளில் ஈடுபட்டார். ஆனால் மீண்டும் புற்றுநோய் ஏற்பட்டது. இந்த நிலையில் தனது 65ஆவது வயதில் அவர் காலமாகியிருக்கிறார். உலகின் 44ஆவது பணக்காரரான ஆலன், தனது பணத்தில் பெரும்பாலான தொகையை தர்ம காரியங்களுக்காகச் செலவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்கப் படைகள் மீது பன்னாட்டு விசாரணை

## சிரியா வேண்டுகோள்!



டாமஸ்கஸ், ஒக். 17

சிரியா வேண்டுகோள்!

சிரியாவின் டீர்அல்சவுர் மாகாணத்தில்ஐ.எஸ். ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஹாஜின் நகரில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அமெரிக்க கூட்டுப்படைகள் இரசாயனக் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தன. அதில் பலர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது. இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள சிரிய அரசு, இது பேன்ற குற்றங்களில் ஈடுபட்டு வரும் அமெரிக்க கூட்டுப்படைகள் மீது பன்னாட்டு விசாரணைகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி உள்ளது. அந்த நாட்டின் அயலுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள் ளது பன்னாட்டு அளவில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்திச் சிரிய மக்கள் மீது அமெரிக்க கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்துகின்றன. மேலும் சட்டத்துக்குப் புறம்பாகவும், ஆக்கிரமிப்பு முறையிலும் சிரியாவில் அமெரிக்கப் படைகள் முகாமிட்டு இருப்பதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும்அந்தச்செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளது.

**பின்னணி**

சிரியாவில் அரச படைகளுக்கும், போராளிகளுக்கும் இடையேயான உள்நாட்டுப் போர் 7 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. மற்றொரு புறம் அந்த நாடு ஐ.எஸ். ஆயுததாரிகளின் சொர்க்கபுரியாகவும் திகழ்கிறது. அங்கு ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஆனால் அமெரிக்கக் கூட்டுப்படைகள் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும், கூட்டுப்படைகளின் தாக்குதல்களில் அப்பாவி மக்களே அதிக அளவில் கொல்லப்படுவதாகவும் சிரியா தொடர்ந்தும் குற்றம் சாட்டிவருகிறது. எனவே அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் சிரியாவில் இருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டுமெனச் சிரிய அரசு நீண்டகால்மாக வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில்தான் பன்னாட்டு விசாரணைக்கும் சிரியா வலியுறுத்தியுள்ளது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தீர்க்கதரிசனமானமுடிவா?

என்னதான் நடந்தாலும் தற்போதுள்ள ஆட்சியுடன் ஒத்துப்போகும் போக்கிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலகப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். பெரிதும் எதிர்பார்க்கப்படும் புதிய அரசமைப்பைக் கொண்டுவரவேண்டுமானால் இந்த ஆட்சிக்கு ஒத்துழைத்தேயாகவேண்டும் என்பதே அவரது கருத்து.

கொழும்பில் தற்போதுள்ள ஆட்சியைப் பகைத்துக்கொண்டு புதிய அரசமைப்பைக்கொண்டு வரமுடியாது, அதனால்தான் இந்த ஆட்சிக்கு ஒத்துழைக்கவேண்டியிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்சம்பந்தன். கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்ட புதிய பொதுச்சந்தைக்கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசியபோது அவர் இந்தக் கருத்தைக் கூறியிருந்தார்.

நாங்கள் அபிவிருத்தியையும் அதிகாரங்களையும் பெறுவதாக இருந்தால் அரசமைப்பில் மாற்றங்கள் வரவேண்டும். அதற்காகப் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். ஆட்சி அதிகாரங்கள் எமது கைகளுக்கு வரவேண்டும். அதன் மூலமாக எமது இறைமை மதிக்கப்படவேண்டும். எமது இறைமை மதிக்கப்படுவதன் ஊடாகவே எமது உள்ளக சுய நிர்ணய உரிமை மதிக்கப்படும் அப்போதுதான் தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் சுயாதீனமாக வாழக்கூடிய மக்களாகக் கருதப்படுவோம் என்றும் சம்பந்தன் தனது உரையில் தெரிவித்தார்.

ஆகமொத்தத்தில் தமிழர்கள் தமது சுயாட்சி அதிகாரத்தை மீளப்பெறுவதை நோக்காகக்கொண்டு 2020ஆம் ஆண்டு வரைக்கும் இந்த ஆட்சியாளர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பகைத்துக்கொள்ளப்போவதில்லை என்பதைத்தான் அவர் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளில் பலவற்றை நிறைவேற்றவில்லை என்றாலும், நிறைவேற்றிய சில வாக்குறுதிகளையும்கூட முழுமையாக நிறைவேற்றவில்லை என்றாலும், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்கவில்லை என்றாலும், போர்க் குற்ற விசாரணைகளை நடத்தவே போவதில்லை என்றாலும், பன்னாடுகளுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டாலும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அடிப்படையாகக்கூடிய புதிய அரசமைப்பு முயற்சிகளை ஏனோ தானோப் போக்கில் முன்னெடுத்தாலும் தேர்தல்களை உரிய காலப்பகுதியில் நடத்தாது விட்டாலும்கூட, இந்த ஆட்சியின் எஞ்யிருக்கும் காலத்துக்கும் அதனைக் கூட்டமைப்பு ஆதரித்தே நிற்கும் என்பதே எதிர்க் கட்சித் தலைவரின் உரைக்கான பொழிப்பு.

அரசின் இத்தகைய போக்கால் கூட்டமைப்புத் தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தாலும்கூட, 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அகிம்சை வழிப் போராட்டங்களைத் தமிழ்த் தலைமைகள் முன்னெடுக்காமல் விட்டது தவறு, அப்படி நடந்திருந்தால் வன்முறைகளும் அழிவுகளும் நிகழாமல் தவிர்த்திருப்பதுடன் தமிழர்கள் சுயாட்சியையும் அடைந்திருப்பார்கள் என்று தானே தெரிவித்திருந்தாலும்கூட அடுத்து வரக்கூடிய இரண்டு வருட காலத்திற்குள் அத்தகைய கிளர்ச்சிகள் எவற்றிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தப்பித் தவறியும் ஈடுபடாது என்பதை மறைமுகமாக உறுதிப்படுத்தியிருக்கிறார் சம்பந்தன்.

அவர் சொல்வதைப் போலவே புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கான உண்மையான விருப்பம் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இருக்கிறதா என்பதுதான் இப்போது அரசியல் வட்டாரங்களுக்குள்ளேயே பேசு பொருள். புதிய அரசமைப்புக்கான வரைவு தயாரிக்கப்பட்டு அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மீதான விவாதம் அனேகமாக அடுத்த ஆண்டு தை மாதத்திலேயே நடக்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன என்று கூறப்படும் நிலையில் அந்த வரைவை நிறைவேற்றும் துணிவும் விருப்பும் இந்த ஆட்சியாளர்களிடம் இல்லை என்றுதான் அனைத்து அரசியல் தரப்புகளும் நம்புகின்றன, கூறுகின்றன. அப்படிப்பட்டதொரு நிலையில் புதிய அரசமைப்பு ஒன்று வரும் என்கிற நம்பிக்கையில் இந்த ஆட்சியுடன் ஒத்துழைத்தே செல்வது என்கிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரின் முடிவு எந்தளவு தூரம் தீர்க்கதரிசனமானது என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

# குழப்பமான அரசியல் சூழ்நிலையால் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பு


இந்துமதி



புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வரையில் அரசுக்குக் கூட்டமைப்பின் ஆதரவு தொடரும் என்பதை அதன் தலைவரான சம்பந்தன் தெளிவாகக் கூறிவிட்டார். இதன்மூலமாகக்கூட்டமைப்பின் வற்புறுத்தலின் பேரிலேயே புதிய அரசமைப்பின் உருவாக்கம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதனால் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்கவேண்டிய இக்கட்டான நிலைக்குள் கூட்டமைப்புத் தள்ளப்பட்டுள்ளது. அநேகமாக அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய அரசமைப்பு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. ஆனால் அதில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பான தகவல்கள் எவையும் தெரியவரவில்லை.

**எதிர்பார்ப்பும் தற்போதைய சூழ்நிலையும்**

புதிய அரசமைப்பின் ஊடாகவே தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் எனக் கூறப்பட்டுவரும் நிலையில், அதன் மீதான எதிர்பார்ப்பும் அதிகமாகிவிட்டது. ஆனால், நாட்டில் தற்போது காணப்படுகின்ற அரசியல் சூழ்நிலையைப் பார்க்கும்போது புதிய அரசமைப்பின் உருவாக்கம் சாத்தியப்படுமா என்ற சந்தேகம் அனைவரது மனதிலும் எழவே செய்கின்றது. இடைக்கால அரசு ஒன்று அமையப்போவதாக அண்மைக் காலமாகச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மைத்திரியும், மகிந்தவும் இணைந்து இந்த அரசை அமைக்கப் போவதாகக் கூறப்படுவதுதான் இதிலுள்ள சிறப்பு அம்சமாகும். அரச தலைவர் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தித் தலைமை அமைச்சரைப் பதவி நீக்கம் செய்துவிட்டுப் புதிய இடைக்கால அரசை அமைக்கப் போவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்று தெரியவில்லை.



**ஐக்கிய தேசியக் கட்சியின் பலம்**

நாடாளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி விளங்குகின்றது. இதன்வசம் 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இன்னமும் 7 பேரின் ஆதரவு கிடைத்தால் ஐக்கிய தேசியக் கட்சியால் தனித்து ஆட்சியை அமைக்க முடியும். ஆனால், மைத்திரிக்கும், மகிந்தவுக்கும் 95 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இவர்களில் சிலர் தற்போதைய அரசில் அங்கம் வகிப்பதோடு அமைச்சுப் பொறுப்புக்களையும் வகிக்கின்றனர். இவர்களை அரசிலிருந்து பிரித்தெடுப்பது இலகுவான காரியமல்ல. அத்துடன் இவர்கள் ஏற்கனவே மகிந்தவுக்கு எதிரான கொள்கைளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அவருடன் இணைந்து செயற்படுவார்களென எதிர்பார்க்க முடியாது. அதேவேளை மைத்திரியும், மகிந்தவும் இணைந்து கொள்வது எந்த அளவுக்குச்சாத்தியமாகும் என்பதும் புரியவில்லை.


**தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஆர்வம் இல்லை**

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக கூட்டமைப்புத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏனோ ஆர்வம் காட்டுவதில்லை. இதற்கான காரணமும் புரியவில்லை. இது நிறைவேற்றப்பட்டுவிட்டால் கூட்டமைப்பின் செல்வாக்கு உயர்ந்துவிடுமென இந்தக் கட்சிகள் அஞ்சுவது வெளிப்படையாகத் தெரிகின்றது.

அரசு கவிழ்ந்து விடுவதைக் கூட்டமைப்பு விரும்பாததால், ஏதோவொரு வகையில் அதனிடம் தலைமை அமைச்சருக்கு ஆதரவு வழங்குவதற்கான வாய்ப்புக்களும் இருப்பதும் புலனாகின்றது. ஏனென்றால் இடைக்கால அரசில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமென எவருமே எதிர்பார்க்க முடியாது. மகிந்த தரப்பினர் ஏற்கனவே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதை எதிர்த்து வருவதால் அவர்களது ஆட்சியில் இது நிறைவேறுமென எதிர்பார்க்க முடியாது. 2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெற்ற நிலையில் இடைக்கால அரசொன்று இந்த நாட்டுக்குத் தேவைதானா? என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகிறது. அரசியல்வாதிகள் தமது சுயநலத்தை மாத்திரம் கருத்தில் கொள்கிறார்களே தவிர நாட்டைப் பற்றியோ நாட்டு மக்களைப் பற்றியோ கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

**அரச தலைவரின் தெரிவு யார்?**

ரணில் விக்கிரமசிங்கவை அவரது பதவியில் இருந்து அகற்றிவிட்டு வேறொருவரை அந்தப் பதவியில் அமர்த்துவதான அரச தலைவரின் நோக்கமென்றால் அந்தவேறொருவர் யார் என்ற கேள்வி தானாகவே எழுகின்றது. தலைமை அமைச்சர் பதவிக்கு மகிந்தவின் பெயரும் அடிபடுவதால் அவர் மைத்திரிக்குக் கீழ் பணியாற்ற முன்வருவாரா? என்பதும் சந்தேகமாகவே உள்ளது. இதேவேளை மகிந்த அணி மற்றும் மைத்திரி அணியின் சார்பில் அடுத்த அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது இதுவரையில் தெரியவரவில்லை. மகிந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் வேட்பாளராக நியமிக்கப்படுவதற்குக் கூட்டு எதிரணிக்குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இது அரச தலைவர் தேர்தலில் அந்த அணியின் வெற்றியைப் பாதிக்கவே செய்யும். இந்த நிலையில் தற்போதைய அரச தலைவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவாரென அவரைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றார்கள். இத்தகைய குழப்பமான அரசியல் சூழ்நிலை நிலவிவரும் நிலையில் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படுமென்றோ அல்லது தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்றோ எதிர்பார்க்க முடியாது.



# “என் பிணத்தைக் கைப்பற்றி, அதைப் புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்துப் போராடுங்கள்”

தேவநாயகம் தேவானந்த்



ஈழத்தில் இறுதிப் போர்க் காலகட்டத்தில், ஈழத்தமிழருக்கு எதிரான போரை நிறுத்துமாறு கோரித் தமிழகத்தில் முத்துக்குமார் தீக்குளித்தார். இது காட்டுத் தீ போன்று பரவி உலகெங்கும் வாழும் தமிழர் மத்தியில் ஈழ ஆதரவுப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியிருந்தது. தமிழகத்தில் மாணவர்கள் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்த ஆரம்பித்தார்கள்.

முத்துக்குமார் தனது இறுதி அறிக்கையில் ஈழத்தில் நடந்த இறுதிப் போரில் இந்திய இராணுவம் நேரடியாகப் பங்கு கொண்டு தமிழர்களை அழிக்கிறது என்று குற்றம்சாட்டினார். அதனால் தி.மு.காவின் ஆதரவுடன் ஆட்சிசெய்த இந்தியத் தேசிய காங்கிரசுக்கு எதிராகவும் இந்திய மத்திய அரச இயந்திரத்துக்கு எதிராகவும் போராட்டங்கள் தமிழகத்தில் தீவிரமடைந்தன.

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-47

**முத்துக்குமாரின் எழுச்சி தீயாகப் பரவியது**

‘உண்மையில், இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கு எதிரானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியர்களுக்குமே எதிரானது.’ என்று முத்துக்குமார் குறிப்பிட்டிருந்தார். ஏற்கனவே இருக்கும் தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்காக எதுவும் செய்ய மாட்டார்கள். அதனால் புதிய தலைவர்கள் உருவாக வேண்டும். மாணவர்களின் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும் என்று தனது விருப்பத்தையும் குறிப்பிட்டிருந்தார். ‘எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்’ என்ற ஈழக்கவிஞர் காசி ஆனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள். என் உடலைக் காவல் துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதைப் புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள்.’ என்று முத்துக் குமார் உருக்கமான வேண்டுகோளையும் விட்டிருந்தார். முத்துக்குமாரின் உருக்கமான கடிதம் காட்டுத் தீயாகப் பரவியதும் தமிழகத்தில் அனைத்துக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் வீதியில் இறங்கிப்போராடினார்கள்.

**கலைஞரின் அச்சமும் அரசியல்வாதிகள் தவிர்ப்பும்**

முத்துக்குமாரின் சாவை ஒட்டி மாணவர்கள் மத்தியில் எழுச்சியடைந்த போராட்டத்தைக் கண்டு கலைஞர் அரசு அச்சமடைந்தது. போராட்டத்தை மழுங்கடிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியது. அதே வேளை முத்துக்குமாரின் வேண்டுகோளுக்கு அமைவாக அவனது இறுதி ஊர்வலம் மாணவர் எழுச்சியைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. இந்தக் கொந்தளிப்பு நிலைமையைப் பல அரசியல்வாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பார்த்தார்கள். மாணவர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. முத்துக்குமாரின் இறுதி ஊர்வலத்தில் அரசியல்வாதிகளுக்கு மாணவர்கள் இடம்தர மறுத்தார்கள். ‘1965ஆம் ஆண்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்துக்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்’ என்ற முத்துக் குமாரின் கருத்தின் அடிப்படையில் செயற்பட ஆரம்பித்தார்கள்.

**இனப்படுகொலைகளைச் சுட்டிக் காட்டினார் முத்துக்குமார்**

‘வன்னியில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்கிறார்கள். அப்படியானால் அரசு அறிவித்தல் விடுத்த பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்துக்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு’ என்று முத்துக்குமார் தனது இறுதி அறிக்கையில் மேலும் குறிப்பிட்டதோடு இலங்கையில் இறுதிப் போர் நடந்த காலத்தில் நிகழ்ந்த கொலைகளை இனப்படுகொலை என்றும் சுட்டிக்காட்டினார்.

**இந்தியாவின் நாட்டாமையில் உலக நாடுகள் புலிகளுக்கு எதிராகப் போர் புரிகின்றன**

உலகநாடுகள் எல்லாம் சேர்ந்து அநீதியானதொரு போரை ஈழத்தில் நடத்துகின்றன. அதைப் பார்த்து மௌனமாக இருக்காதீர்கள் என்றும் முத்தக்குமார் கொதித்திருந்தார். ‘இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொல்கின்றனர் என்றால், நீங்கள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கிப் போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். ‘அறத்துக்கே அன்பு சார்பென்ப அறியார். மறத்துக்கும் அஃதே துணை’ என்று பாடியுள்ளார் எங்கள் திருவள்ளுவர். புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் எடுத்ததால்தான் வந்தது என்பதைப்போல.

உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர் என்றும் தனது ஆணித்தரமான கருத்தை இந்திய அரசுக்கும் தமிழக அரசியல்வாதிகளுக்கும் தெரிவித்திருந்தார் முத்துக்குமார். இலங்கையில் நடக்கும் போரில் இந்தியா நியாயமின்றி நடந்தது என்பதையும் கூறத்தவறவில்லை.

‘சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல… இப்போது எமது மக்களைக் கொலைசெய்து வருவது பன்னாட்டுச் சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள் நியாயத்தின்பால் பெருவிருப்புக் கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியி லிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா?’ என்று பன்னாடுகளைப் பார்த்துக் கேள்வி எழுப்பித் தீ மூட்டினார் முத்துக்குமார்.

இது அப்போது தமிழகத்தில் ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்குப் பேரிடியாகவும் கலைஞரின் அடி வயிற்றில் பற்றிய தீயாகவும் ஆனது.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் புரிந்து கொள்வார்களா?


அரசியல் கைதிகளின் விடுதலைக்கு உதவுவதற்கு வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் எனக் கூட்டமைப்புக்கு எதிரான தரப்புக்களிடமிருந்து குரல்கள் கிளம்பியிருக்கின்றன.

கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியிருக்கும் சிவசக்தி ஆனந்தனைத் தவிர எஞ்சிய 15நாடாளுமன்ற உறுப்பினர்களும், மகிந்த தரப்பு ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியலிருந்து விலகி நிற்கும் மகிந்த சார்பான 16உறுப்பினர்களும் சேர்ந்து எதிர்த்து வாக்களிப்பதால் மட்டும் பாதீட்டைத் தோற்கடிக்க முடியுமா என்பதை முதலில் சிந்திக்கவேண்டும். அரசியல் கைதிகள் விடயத்துக்கு மட்டும் பாதீட்டு வாக்கெடுப்பை எதிர்த்தும், காணாமல் ஆக்கப்பட்டோர், காணிகள் விடுவிப்பு, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தின் தொகை குறைத்தல் போன்ற ஏனைய முக்கிய விடயங்கள் மட்டில் பாதீட்டை ஆதரித்து வாக்களிக்கலாமா என்பதையிட்டும் கூட்டமைப்பு எதிர்ப்பாளர்கள் என்ன கருத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பாதீட்டு வாக்கெடுப்பில் அரசு தோற்றால் முறைப்படி புதிய அரசு பதவியேற்க வேண்டும். அல்லது நாடாளுமன்று கலைக்கப்பட்டுத் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால் அடுத்து அரசு அமைப்பது யார்? இப்போதைய சிங்கள பௌத்த நிலைப்பாட்டின்படி மகிந்த தரப்புத்தான் அரசை அமைக்கும் என்பதில் சந்தேகமிருக்காது. அப்படியாயின் அவர்கள் அரசியல் கைதிகளை விடுவிப்பார்களா? எல்லாவற்றிலும் பார்க்க இப்போதைய ‘நல்லாட்சி’ அரசோ அல்லது எதிர்த் தரப்போ அரசியல் கைதிகள் என்ற சொல்லை உச்சரித்தார்களா? அவர்கள் தமிழ்க் கைதிகளைப் புலிப்பயங்கரவாதிகள் என்றே இப்போதும் அழைக்கிறார்கள் என்ற உண்மையைக் கூட்டமைப்புக்கு எதிரான தரப்புக்கள் ஏன் மறந்து பேசுகிறார்கள்.

பொது மன்னிப்பு என்பதை அரசோ, எதிர்த்தரப்போ இதுவரை உச்சரிக்காத பட்சத்தில் யதார்த்த ரீதியில் சட்டமுறைப்படி தமிழ்க் கைதிகளின் வழக்கைத் துரிதப்படுத்தி அவர்களை விடுவிப்பதே காலச்சிறந்ததாக இருக்கும். உணவு தவிர்ப்பை மேற்கொண்ட கைதிகளுக்கு ஆதரவளிப்போர் அவர்களது உயிர்களைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். கூட்டமைப்பைப் பொறுத்தவரை கைதிகளின் சாகும் வரையிலான தொடர் போராட்டத்தை இன்றுவரை அவர்கள் ஊக்குவிக்கவில்லை. ஆயினும் அவர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து கருமமாற்றி வருகிறார்கள்.

***ஜே.சாம்போல்***



## இன்றைய நாள்

**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும். பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**இடபம்:** மாறுபட்ட சூழ்நிலையை சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். ஆதாயம் அதிகரிக்கும்.

**கடகம்:** இரக்க எண்ணத்துடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும் பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**சிங்கம்:** சிலரது பேச்சால் மனதில் சங்கடம் ஏற்படலாம். நிதானமுடன் செயல்படுவது நல்லது. கூடுதல் உழைப்பால் தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழிலில் உற்பத்தி விற்பனை இலக்கை அடைய கூடுதல் அவகாசம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** உற்சாக மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். உபரி பணவரவால் சேமிப்பு உயரும். பணியாளர்கள் சகஊழியர்களின் ஆதரவைப் பெறுவர்.

**விருச்சிகம்:** நண்பரின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். சொல், செயலில் புத்துணர்ச்சி வெளிப்படும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். லாபம் உயரும்.

**தனுசு:** சிலர் சுயலாபம் பெற புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** மற்றவர் கருத்துக்களை ஏற்க தயங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிதானத்தை பின்பற்றவும்.

**கும்பம்:** நிம்மதி நிறைந்த வாழ்வு அமையும். தொழில் அபிவிருத்தியால் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மீனம்:** பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் செல்வாக்குடன் திகழ்வர்.

ஆத்திரத்தால் நாம் இழப்பது
**அறிவை..!**
கோபத்தால் நாம் இழப்பது
**குணத்தை ..!**
பொறாமையால் நாம் இழப்பது
**நட்பை...!**
பேராசையால் நாம் இழப்பது
**செல்வத்தை..!**
அத்தனையும் திரும்பப் பெறலாம்
**அன்பால்...!!**

# பாடகராகினார் மொட்டை ராஜேந்திரன்



பாலாவின் இயக்கத்தில் வெளியான 'நான் கடவுள்' படத்தில் வில்லனாக நடித்தவர் ராஜேந்திரன். இந்தப் படத்தில் இவரின் கதாபாத்திரம் அனைவராலும் பேசப்பட்டது. இந்தப் படத்தின் மூலம் சிறந்த வில்ல னாகப் பெயர் பெற்றார். ஆனால், இதன்பின் வெளியான 'ராஜா ராணி', 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா', 'திருடன் பொலிஸ்', 'டார்லிங்' படங்க ளில் நகைச்சுவை வேடங்களில் நடித்து ரசிகர்களைக் கவர்ந்தார். நகைச்சுவை வேடங்கள் ரசிகர்களிடம் வரவேற்புப் பெறவே தொடர்ந்து நகைச்சுவை வேடங்களில் நடித்து வருகிறார். தற்போது பாடகராக அவதா ரம் எடுத்துள்ளார். இசையமைப்பாளர் ஸ்ரீநாத் இசையில் உருவாகும் ஒரு படத்துக்கு மொட்டை ராஜேந்தி ரன் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | 3 | | | 4 |
| 3 | | | | 7 | | 8 | 2 | |
| | | | 9 | | 1 | | 5 | |
| | | | | | | 2 | 7 | |
| | 7 | | | 5 | | | 8 | |
| | 1 | 3 | | | | | | |
| | 8 | | 4 | | 5 | | | |
| | 5 | 7 | | 3 | | | | 8 |
| 6 | | | 1 | | | | 4 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 5 | 2 | 6 | 1 | 7 | 8 | 4 |
| 1 | 7 | 8 | 3 | 5 | 4 | 2 | 6 | 9 |
| 6 | 4 | 2 | 7 | 9 | 8 | 5 | 3 | 1 |
| 7 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 | 2 | 3 |
| 5 | 2 | 4 | 9 | 1 | 3 | 6 | 7 | 8 |
| 3 | 6 | 1 | 8 | 2 | 7 | 9 | 4 | 5 |
| 4 | 9 | 7 | 1 | 3 | 2 | 8 | 5 | 6 |
| 8 | 5 | 3 | 6 | 7 | 9 | 4 | 1 | 2 |
| 2 | 1 | 6 | 4 | 8 | 5 | 3 | 9 | 7 |

நேற்றைய விடை



## கலாம் விருதுகள்

1981- பத்மபூஷன்

1990- பத்மவிபூஷன்

1997- பாரத ரத்னா, தேசிய ஒருங்கிணைப்பு இந்திராகாந்தி விருது

1998- வீர் சவர்கார் விருது

2000- ராமானுஜன் விருது

2007- அறிவியல் கௌரவ டாக்டர் பட்டம், கிங் சார்லஸ் பட்டம்

2008- பொறியியல் டாக்டர் பட்டம்

2009- பன்னாட்டு வோன் கார்மான் விங்ஸ் விருது, ஹூவர் மெடல்

2010- பொறியியல் டாக்டர் பட்டம்

2012- சட்டங்களின் டாக்டர், சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது



நாம் மேல ஏற ஏற கீழ இருப்பவர்கள்
சிறிதாய்த் தெரிய ஆரம்பித்தால்,
'தன்னடக்கம்' என்னும் கண்ணாடி
அணிந்து கொள்வது அவசியம்.
உணர்ந்தவன் உயர்வான்!!







## வெள்ளைக்காரன் அறிவு

வெள்ளைக்காரன் அறிவு
சுட்டுப்போட்டாலும் எமக்கு வராது
அன்புக்குரியவர் செத்துப்போனால்
நெருப்பில் இட்டு உருத்தெரியாமல்
அழித்துவிடுகிறோம்
மிச்சத்தைக்கூட விட்டுவைக்காமல்
கடலில் கரைத்துவிடுகிறோம்
திரும்பி வந்தால் தொலைத்துவிடுவேன்
என்று மிரட்டாதது ஒன்றுதான் மீதம்
திரும்பவும் வந்துவிட கிந்துவிடப்
போகிறான் என்று சரமாரியாகச்
சடங்குகளும் செய்கிறோம்

எலும்புகளைக் குச்சியால் கிளறிப்
பொறுக்கியெடுத்துச் சட்டியில் போட்டு
சீல் வைத்துக் கடாசிய பிறகு
திரும்பி வருவார்களா யாராவது?

வெள்ளைக்காரனோ
அவன் நேசிப்பவர்களுக்கு
அரசர் போல் ஆடை உடுத்தி
ஒரு பெட்டிக்குள் மூடிவைத்துப்
புதையல் ஆக்குகிறான்

பளிங்குக் கல்லில் பெயர் பொறித்து
நேர்த்தியாக அடையாளம் வைத்து
நினைக்கும்போது சென்று பார்க்கிறான்
அழகான பூச்செண்டுகள் வைக்கிறான்
ஆறுதல் தேவைப்பட்டால் வந்து
உட்கார்ந்துவிட்டுச் செல்கிறான்

அள்ளிப் போடும் மண்ணைக்கூட
அவர் முகத்தில் போடாமல்
பெட்டி மேல் போடும் நாகரிகம் உண்டு
வெள்ளைக்காரன்
அன்புக்குரியவர்களின்
மிச்சமீதியைத் தன்னோடு
வைத்துக்கொள்கிறான்
எஞ்சியதையும் ஒழித்துவிட்டுத்
தனியாகக் கிடப்பதில்லை
நேசிப்பவர்களை அவன்
முழுமையாக இழப்பதில்லை.



உதயன்
புதன் பொய்கை
ஒக்ரோபர் 17, 2018
@UthayanPrint

அழகைப்பற்றிக் கனவு காணாதீர்கள், அது உங்கள் உடமையை பாழாக்கி விடும். கடமையைப் பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

அப்துல் கலாம்



# தாயகத்தி(ல்)ன் செழிப்பைத்தேடும் பறவைகள்!

## பசுமையான பண்பாட்டின் சுவடுகளை மீட்டிப்பார்க்கும் புயலின் சிறுகதை தொகுப்பு குறித்த பார்வை



சி. ரஞ்சிதா

புயல் என்னும் புனை பெயரைக் கொண்ட பெ.ஸ்ரீகந்த நேசன், இலங்கையின் வடபகுதியில் உள்ள மாங்குளம் என்னும் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை மாணவனாக கல்விகற்ற இவர் மாணவன் என்பதற்கு அப்பால் ஒரு இலக்கியப் படைப்பாளியாகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்.

இவரின் படைப்புக்கள் அனைத்தும் அடிப்படையில் வட பகுதி மக்களின் வாழ்வியலை வரலாற்று ஆவணமாக எடுத்துக்காட்டுகின்றன. ஒரு காலகட்டத்தில் வடபகுதி மக்கள் போரின் களோபரங்கள் கண்டு தாய் மண்ணில் அனுபவித்த இடர்களையும் சொல்லெணாத்துயரங்களையும் யதார்த்தபூர்வமாக சித்திரிக்கும் இப் படைப்பாளியின் சிறுகதைகளை வாசிக்கும்போது இதயம் ஒரு கணம் நின்றுதான் துடிக்கிறது. 'போரின் அவலங்கள், வறுமை,எதிர்பார்ப்பு,ஏமாற்றம்,இடப்பெயர்வு' என தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு 'சிறுகதை' என்னும் வடிவம் கொடுத்து, தனது தனித்துவமான மொழிநடையால் உயிர் கொடுத்துள்ளார் ஆசிரியர்.



### நோக்கம்

இன்றைய உலகமயமாதல் சூழலில் ஒவ்வொரு சமூகமும் தனது தனித்துவமான வாழ்வியலை (பண்பாட்டை) இழந்து வருகின்றது. குறிப்பாக, 'உணவு,தொழில்,விளையாட்டு,வழிபாடுகள், தனித்துவமான பழக்கவழக்கங்கள்' என பண்பாட்டின் ஒவ்வொரு கூறுகளும் சிதைவடைந்து போயுள்ளன. ஏதோவொரு வகையில் நாமே பண்பாட்டுக் கொலையாளிகளாக மாறி வருகின்றோம். ஆகவே இப்படைப்பாளியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்புக்களினூடாக முடிந்து போன போரின் அவலங்களையும், தொலைந்துபோன வாழ்க்கையையும் எண்ணி வேதனை கொள்ளாது, பசுமையான பண்பாட்டின் சுவடுகளை மீட்டிப்பார்ப்பதாக இக்கட்டுரையின் நோக்கம் அமைகின்றது.

### ஆய்வுக் கண்ணோட்டம்

ஒரு படைப்பை சமூகத்துக்கு ஆக்கியளிக்கும் படைப்பாளி நிச்சயமாக அந்தச் சமூகத்துடன் ஒன்றிவாழ்ந்து இரண்டறக் கலந்தவனாகவே இருப்பான். அவனது படைப்பின் நோக்கம் ஒரு புறம் இருக்க, அவனைச்சார்ந்து இயங்கும் புறச்சூழலின் தாக்கத்துக்கு உட்பட்டு அவற்றையும் படைப்பில் உள்வாங்குகின்றான். அப்புறச்சூழலின் இயங்குநிலையாக குறிப்பிட்ட சமூக மக்களின் பண்பாடு, தங்கத்தில் செப்பு கலந்துவிடுவதைப் போல சேர்ந்துவிடுகின்றன. அவ்வகையில் இங்கு ஆய்வு செய்யப்படவுள்ள சிறுகதைத் தொகுப்புக்களில் குறிப்பிட்ட சில கதைகளில் மட்டுமே பண்பாட்டுப் பதிவுகள் ஆங்காங்கு வெளிப்படுகின்றன. அவற்றிலிருந்து வடபகுதி மக்களின் பாரம்பரியமான தொழில், உணவு,நம்பிக்கை,வழிபாடுகள்,சம்பிரதாயங்கள் குறித்து நோக்குவோம்.

### பண்பாடு என்பதன் பொருள்

பண்பாடு என்னும் சொல் அடிப்படையில் பன்மைத்தன்மை வாய்ந்தது. பண்பாடு தொடர்பாக அறிஞர்கள் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவை அனைத்தும் அடிப்படையில் ஒரு மக்கட் சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிப்பனவாகும். வாழ்வியல் என்னும் பெரு விருட்சத்தின் கிளைகளாக இலக்கியம்,நடனம்,இசை,கோயில்கள்,சடங்குகள், தொழில்கள் முதலியன இணைந்துள்ளன. அதுமட்டுமன்றி மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயற்படுத்தும் மிகப்பெரிய அமைப்பும் உள்ளடங்குகின்றது. இவ் அமைப்பில் ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான தன்மைகளைக் கொண்ட பண்பாடு ஒவ்வொரு சமூகத்துக்கும் வேறுபட்டும் தனித்துவமுடையனவாகவும் விளங்கு கின்றன.

### பண்பாட்டுப் பதிவுகள்

#### 'செழிப்பைத்தேடும் பறவைகள்'

இந்தச் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் முதலாவது கதை 'பழஞ்சோறு' ஆகும். வடபகுதித் தமிழரிடையே காணப்பட்ட உணவுப்பழக்க வழக்கங்கள், அம்மக்கள் வாழும் சூழல் ஆகியவற்றை கிராமிய மண்வாசனையுடன் இந்தச் சிறுகதை ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். பழஞ்சோறு என்னும் பதம் ஒருவகையில் வறுமையின்



அடையாளத்தை வெளிப்படுத்த இங்கு பயன்படுத்தப்பட்டாலும் இன்னுமொரு வகையில் பாரம்பரியமான உணவின் முக்கியத்துவம் இந்த மக்கட் சமூகத்தில் இருந்து வந்தமையை சிந்திக்க வைக்கின்றது.
இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் மேலை நாட்டு உணவுகளில் மோகம் கொண்டு ஆரோக்கியமான உணவின் அவசியத்தை நாம் புறக்க ணிக்கின்றோம். பழைய சோறு என்றவுடன் ஏழைகள் உண்ணும் உணவு என்ற தவறான அபிப்பிராயம் இன்று வரை எல்லா சமூகங்களிலும் நிலவி வரும் கருத்து.
ஆனால் 'பழஞ்சோறு' ஆரோக்கியமான உணவு மட்டுமன்றி பிற நோய்களிலிருந்து எம்மை காக்கும் மருந்தாகவும் விளங்குவதை மறுக்கமுடியாது. இந்தச் சிறுகதையின் வழி ஆசிரியர் பழஞ்சோறு பற்றிய பதிவை ஏற்படுத்தியுள்ளமை பண்பாட்டினூடான ஆரோக்கிய வாழ்வின் மீள் நினைவுகளாகும். கீழ் வரும் உரையாடல் பகுதியில் ஆசிரியர்,
"அக்கா உவன் பொடியன் முத்து பள்ளிக்கூடம் விட்டு வருவான். காலையிலையும் பழஞ்சோத்துடன் போனவன்.இண்டைக்கு சாடையா மழை தூறியிருக்கு கறிக்கு ஏதாவது பிடிச்சுக்கொண்டு வாறன். நீ போய் பக்கத்துவீட்டு அம்மாவிடம் அரிசி மூண்டு சுண்டு வாங்கி அடுப்பில உலையை வை. நாளைக்கு நிவாரணச் சாமான் கொடுத்ததும் பச்சை அரிசியை கடையில



இன்றும் வடபகுதித் தமிழரிடையே சமயம் சார்பான நெறிமுறைகள் அழியாது பேணப்பட்டு வருகின்றன. எனினும் இளைஞர்கள் மத்தியில் ஒரு சிலரிடம் இந்த நடைமுறைகள் செல்வாக்கிழந்து வருகின்றது.

கொடுத்துவிட்டு புழுங்கல் அரிசி வாங்கிக்கொடுக்கலாம்."
என வடபகுதித் தமிழருக்கே உரிய பேச்சு வழக்கு, பிரதேச உணர்வுடன் பாரம்பரியமான உணவைச் சுட்டிக்காட்டு கின்றார். மேலும் இந்த மக்கள் பச்சை அரிசி, புழுங்கல் அரிசி முதலியவற்றையும் உணவில் பயன்படுத்தி வருகின்றமை புலனாகிறது.
இந்த மக்கள் வாழ்ந்த பெரும்பகுதி பெரும்பாலும் அடர்ந்த காடுகளாக காணப்பட்டமையால் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவகையில் வேட்டையாடுதலிலும் ஈடுப்பட்டுள்ளனர். இந்தச் சிறுகதையில் வரும் 'கனகசாமி' என்பவன் வேட்டையாடி 'உடும்பு' பிடித்துவரும் சம்பவத்தினூடு உடும்பு இறைச்சி இவர்களின் உணவில் ஓர் அம்சமாக இருந்து வந்தமையை அறியமுடிகின்றது.

ஆனால் இன்றைய நாகரீக உலகில் வன விலங்குப் பாதுகாப்பு முதலிய சட்டங்களால் வேட்டையாடுதலும், அதனோடு தொடர்புடைய உணவுகளும் வழக்கொழிந்துவிட்டன. மேலும் வேட்டையாடச் செல்லும் போது இவர்கள் கைக்கோடரி, இடியன் துப்பாக்கி முதலிய பயன்பாட்டுக் கருவிகளையும் பயன்படுத்தியதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவை இந்த மக்களின் பொருள்சார் பண்பாட்டில் முக்கிய இடத்தை பெறுகின்றன.

**'வசந்தம் தொலைத்த காதலி'**
அடுத்து இந்தச் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் "வசந்தம் தொலைத்த காதலி" என்னும் சிறுகதை, காதல் தோல்வியையும், அதன் துன்ப விளைவுகளையும் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. கதையின் கருவுக்கு அப்பால் இந்தச் சிறுகதையிலும் தமிழர் பண்பாட்டுக் கூறுகளை தரிசிக்க முடிகின்றது. தமிழர் மத்தியில் நிலவி வரும் ஆகமம் சாரா வழிபாட்டு நெறிமுறைகளும், அதனோடு தொடர்புடைய நேர்த்திகடன்களாகிய கற்பூரச் சட்டி ஏந்துதல், காவடி ஆட்டம் என்பவற்றையும் வீரபத்திரர் ஆலயத் திருவிழாவை முன்னிறுத்தி ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

அதுமட்டுன்றி தமிழரின் பாரம்பரியமான இசைக்கருவிகளான நாதஸ்வரம், மேளம் ஆகியன கோயில் திருவிழாக்களில் பயன்படுத்தப்படுகின்றமையையும் அறியமுடிகின்றது. இன்றும் வடபகுதித் தமிழரிடையே சமயம் சார்பான நெறிமுறைகள் அழியாது பேணப்பட்டு வருகின்றன. எனினும் இளைஞர்கள் மத்தியில் ஒரு சிலரிடம் இந்த நடைமுறைகள் செல்வாக்கிழந்து வருகின்றது. இன்றைய கல்விச் சூழல், அதனோடு இணைந்த சிந்தனைகள் இதற்கு காரணமாக இருந்தாலும் இவற்றை ஒரு பண்பாட்டுக் குறைவாகவே காண வேண்டியுள்ளது. மதம், நம்பிக்கை என்பதைத் தாண்டி ஒரு சமூகத்தின் அடையாளம் அழிவடையாது பேணுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகிறது.
இதைத்தான் இந்தச் சிறுகதை ஆசிரியரும் வலியுறுத்தினார் என எண்ணத் தோன்றுகிறது. மந்தை வளர்ப்பும் வடபகுதி மக்களின் பண்பாட்டின் இன்னுமொரு அம்சமாகும். இன்றும் வீடுகளில் குறிப்பாக கிராம மக்கள் ஆடு, மாடு வளர்ப்பில் ஈடுப்பட்டு வருகின்றனர். இது இந்த மக்களின் பொருளாதரத்தின் அடிப்படை அம்சமாகவும் அடையாளமாகவும் வெளிப்படுகின்றது. இந்தச் சிறுகதையில் பசு வளர்ப்பு, அதற்கு கடகத்தில் புல் வைக்கும் பழக்கம் என்பன வடபகுதிக்குரிய தனித்துவமான பண்பாடாக வெளிப்படுகின்றது.

"செழிப்பைத் தேடும் பறவைகள்" என்னும் தலைப்பில் ஆசிரியர் எழுதியுள்ள சிறுகதை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் என்னும் கிராமத்தை அறிமுகம் செய்து தொடங்குகிறது. இந்தச் சிறுகதையிலும் அங்கு வாழும் மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. வடபகுதி யின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் பனைமரங்கள், அங்கு வாழும் தமிழர்களின் வழிபாடு, மாவடிப்பிள்ளையார் ஆலயம், அதை அண்டிய வயல்வெளிகள் என ஆசிரியர் வெளிப்படுத்தும் பாங்கு குறிப்பிட்ட பகுதியை நேரில் தரிசித்த உணர்வையும் அச்சூழலில் வாழ்ந்த உணர்வையும் ஏற்படுத்துகின்றது.



ஆம் இதை சிறுகதையில் வருகின்ற, "முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் என்னும் கிராமம் மிகவும் அமைதியான இடம். அங்கு வாழ்கின்ற மக்கள் வழிபாடு செய்வதற்கு ஊரின் மத்தியில் மாவடி விநாயகர் ஆலயம் கோயிலுக்கு முன்னும் பின்னும் வயல்வெளி. வயல்வெளியோ பச்சைக்கம்பளத்தை விரித்துப்போட்டதைப் போல்..நெற்கதிர்களில் சிட்டுக்குருவி கூடுகட்டி முட்டையிட்டு அடைகாக்கும். திருவிழாத் தொடங்கிட்டால் வயல்வெளிகளில் சிறுவர்கள் போவதும் வருவதுமாக இருப்பார்கள்..." என்ற பகுதியூடு கண்டுகொள்ள முடிகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட சிறுகதைப்பகுதியில் வயல்வெளிப்பதிவுகள் இந்த மக்களின் விவசாய பொருளாதாரத்தை வெளிப்படுத்துவதுடன் இந்தச் சிறுகதையில் வருகின்ற செல்லதுரை என்னும் பாத்திரத்தினூடாக தச்சுவேலையும் அதனோடு இணைந்த பூவேலைப்பாடுகளும் பாரம்பரியமான தொழில்களை எடுத்துக் காட்டுகின்றன. மேலும் விசேட நாள்களில் வீட்டை மெழுகுதல், வீட்டுப்பொருள்களை கழுவுதல், ஆடு மாடுகளை அலங்கரித்து பூசை செய்தல், இறந்தவர்களைத் தெய்வமாக வழிபடுதல் முதலிய அம்சங்கள் சம்பிரதாயப்பூர்வமாக இராசலட்சுமி என்னும் பாத்திரவார்ப்பின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.



ஆசிரியரின் "கனவு வாழ்வு" என்னும் சிறுகதை இன்றைய நவீன யுகத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை மறந்து போன பாரம்பரியமான விளை யாட்டுக்களை பிரதேச உணர்வுடன் வெளிப்படுத்துகின்றது. பசுமையான வயல்வெளிகளில் விளையாடப்பட்ட கண்ணைக்கட்டி விளையாட்டு, கோழியும் பிராந்தும் விளையாட்டு, கிளித்தட்டு, தடி பிடித்து விளையாடுதல் என ஒரு காலக்கட்டத்தில் விளையாடப்பட்ட இன்று மறைந்துவிட்ட பசுமையான கடந்தகால நினைவுகளாக இவை வெளிப்படுகின்றன.
இவை தவிர "பனிக்கால மேகங்கள்" என்னும் சிறுகதையில் விறகு வெட்டும்தொழில் மக்கள் விறகு பொறுக்க காடுகளை நோக்கிச் செல்லுதல், திரு வெம்பாவை கொண்டாட்டம், அன்னதான நிகழ்வுகள், உறங்குவதற்கு ஓலைப்பாய்களை பயன்படுத்தியமை முதலான அம்சங்கள் இந்தச் சிறுகதைத் தொகுப்பு வடபகுதி தமிழரின் பண்பாட்டுப் பெட்டகம் என்பதை ஆதாரப்படுத்துகின்றது.

**காகமும் மைனாக்களும் சிறுகதைத் தொகுப்பில் பண்பாட்டுக் கூறுகள்**
இந்தச் சிறுகதைத் தொகுப்பில் வரும் "கவிதா பைத்தியமாகிறாள்" என்னும் சிறுகதை கணவனை 'பேய்' என எண்ணி அடித்துக்கொல்வதை நகைச் சுவையாக எடுத்துக்காட்டினாலும் தமிழர் மத்தியில் நிலவிய மூடநம்பிக்கையின் வெளிப்பாடாகவும் அமைகிறது. இந்தச் சிறுகதையில் மாங்குளம் ஒலுமடு ஆகிய இரு இடங்களுக்கும் இடையில் ஓடுகின்ற பேராறில் மீன் பிடியில் ஈடுபடும் கந்தசாமி - கவிதா ஆகியோரை முன்னிறுத்தி, அங்கு வாழும் மக்களின் பாரம்பரியமான பழக்க வழக்கங்களை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இங்கு வாழும் மக்கள் மீன்பிடியில் ஈடுபடும் பழக்கமுடையவர்கள் என்பதைக்கூட மண்வாசனை கலந்த வருணணையாக தந்துள்ளார் இந்தச் சிறுகதை ஆசிரியர்.

இதை "சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிறது பேராறு. அழகான மாம்பழக் குருவிகள் கீ...கீ... என்றவாறு காட்டுக்கொய்யா மரங்களில் தாவிப்பறக்கின்றன. ஆற்று நீர் வேகமாக ஓடுவதினால் ஆற்றங்கரையில் வெண்மணல் கும்பி கும்பியாக கிடக்கின்றன. ஆற்றுக்குக் குறுக்காக கிடந்த முதிரைக்கட்டையில் அமர்ந்தவாறு இந்த இயற்கை காட்சிகளை ரசித்துக் கொண்டு தூண்டில் மூலம் மீன்பிடித்துக்கொண்டிருந்தார் கந்தசாமியார். அந்த வெண்மணலில் அமர்ந்திருந்த கந்தசாமியாரின் மனைவி கவிதா பிடித்த மீன்களை பையில் போட்டுக்கொண்டிருந்தாள்." என்றவாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலும் தைப்பொங்கலை அடுத்து வரும் பட்டிப் பொங்கலின் போது இந்தப் பேராற்றில் மாடுகளை நீராட்ட வரும் இரு கிராமத்தவரின் மாடுகள் மோதுவதையும், பின் மாடுகளுக்குச் சொந்தக்காரர்கள் மோதுவதையும் அந்த மக்களே சண்டையை தீர்த்து வைக்கும் கிராமிய வழக்கங்களையும் இந்தச் சிறுகதை முன்னிறுத்து வதன்மூலம் குறித்த பிரதேச உணர்வும் அங்கு வாழும் மக்களின் தனித்துவமான பழக்க வழக்கங்ளும் வெளிப்படுவதை அவதானிக்கமுடிகின்றது.

**முடிவுரை**
தொகுத்து நோக்கும் போது, புயலின் சிறுகதைகள் அனைத்தும் அடிப்படையில் சமூக நோக்குடனும், வரலாற்று ஆவணமாகவும், எதிர்கால சந்ததியினரின் பண்பாட்டுப் பெட்டகமாகவும் மிளிர்வதை காணமுடிகின்றது. கதையின் நோக்கத்துக்கும் போக்கிற்கும் ஏற்ப பண்பாட்டுப் பதிவுகள் அருகியே காணப்பட்டாலும் அவை அனைத்தும் பெறுமதி வாய்ந்த பொக்கிஷங்களாக, ஒரு காலகட்ட சமூகத்தை வெளிக்காட்டும் காலக்கண்ணாடியாக காணப்படுகின்றது.
போரின் அவலங்களையும், அதனோடு ஒன்றித்த அவலங்களையும், நிறைவேறாத ஆசைகளையும், ஏமாற்றங்களையும் கருப்பொருளாகக் கொண்டிருந்தாலும் ஆசிரியரின் கதைகளிலிருந்து பெறப்பட்ட பண்பாட்டுப் பதிவுகள் சுமைகளைத்தாண்டிய சுகமான நினைவுகளாக மிளிர்கின்றன.

*கட்டுரையாளர்:*
*தமிழ்த்துறை இறுதி வருட மாணவி,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# ‘நிலா நாழிகை’

## இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு

சிந்தனைச் சூரியன்
சிகரங்களில் ஒளி பரப்பும்
நம்பிக்கை விழுதுகள் கூடி
நாளைய விடியலைத் தாங்கிக்
கொள்ளும்!
-பொற்கனவு





இளையவர்களின் வருகை ஈழத்தில் பரவுகை ஏற்றமே. அவை நூலாதலும் படிநிலை உயர்ச்சியே. ஈழத்தின் யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த இளைய படைப்பாளி வேலணையூர் ரஜிந்தன் படைத்த "நிலா நாழிகை", "பொற்கனவு" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலணை தெற்கு தாளையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.இலக்கியக் குவியத்தின் தலைவர் கவிஞர் வேலணையூர் தாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கலந்துகொண்டார்.

விருந்தினர்கள் வரவேற்பைத் தொடர்ந்து சுடரேற்றல் இடம்பெற்றது. தொடர்ந்து



அகவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து என்பன இடம்பெற்றன. வரவேற்பு நடனத்தை வேலணை மத்திய கல்லூரி மாணவிகள் வழங்கினர். வரவேற்புரையை வேலணை துறையூர் கலை இலக்கிய வட்டத்தின் செயலாளர் நிவேதிகா கஜரூபன் நிகழ்த்தினார்.

ஆசியுரையை வேலணை தெற்கு துறையூர் ஐயனார் ஆலய பிரதம குரு சி.மாதவராஜ சர்மா வழங்கினார். தொடர்ந்து கவிஞர் வேலைணையூர் சுரேஷ், யோ.புரட்சி, ஆசிரியர் இராசநாயகம் புவனேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தலைமையுரையைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச்செயலாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் நூலருக்களை வெளியிட்டு வைத்தார். "பொற்கனவு" நூலருவை யாழ்.இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் பெற்றுக்கொண்டார். "நிலா நாழிகை" நூலருவை கிருபா லேணர்ஸ் முதல்வர் அ.கிருபாகரன் சார்பாக இ.ம.அன்பரசன் பெற்றுக்கொண்டார்.

சிறப்பு அதிதிகள் சார்பில் வேலணை பிரதேச செயலர் அம்பலவாணர் சோதிதாசன், சூரியன் பண்பலை அறிவிப்பாளர் மருத்துவர் நவரத்தினம் மணிவண்ணன், மன்னார் சென்.லூட்ஸ் மகா வித்தியாலய அதிபர் அந்தோனி வாஸ் ஜெயசீலன் ஆகியோர் நூலாசிரியருக்கான மதிப்பளிப்பை வழங்கி கருத்துரைத்தனர்.

சிறப்பு நிகழ்ச்சியாக வேலணை மத்திய கல்லூரி மாணவிகளான கயேந்திரன் கீர்த்தனா, ரவீந்திரன் அனித்தா, தனபாலசிங்கம் கேதராணி ஆகியோர் பங்கேற்ற பரத நாட்டிய நிகழ்வு இடம்பெற்றது. முதன்மை விருந்தி னரி ன் உரையைத் தொடர்ந்து நூல் ஆய்வுரை இடம்பெற்றது. ஆய்வுரைகளை கவிஞர் கு.வீரா.துணுக்காய் பிரதேச கலாசார உத்தியோகத்தர் கு.றஜீபன் ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையை நூலாசிரியர் வேலணையூர் ரஜிந்தன் நிகழ்த்தினார்.

# ‘சாட்சியங்கள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு

ஏ.எல்.எம்.சலீம்





மட்டக்களப்பு மாவட்டம் காத்தான் குடியைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர்தீன் எழுதிய ‘சாட்சியங்கள்’ நூலுருவின் வெளியீட்டு நிகழ்வு, காத்தான்குடி ஊடக அமையத்தின் அனுசரணையோடு காத்தான்குடி பீச்வே ஹோட்டல் மண்டபத்தில் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

காத்தான்குடி ஊடக அமையத்தின் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா(பலாஹி) தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடக அமையத்தின் தலைவரும் ‘நவமணி’ பத்திரிகையின் முதன்மை ஆசிரியருமான என்.எம். அமீன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்.




மதிப்புறு விருந்தினர்களாக வசந்தம் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு முகாமையாளர் எம்.எஸ்.முஹம்மட் இர்பான், ‘விடிவெள்ளி’ முதன்மை ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூலுருவின் சிறப்புப் பிரதியை நிகழ்வின் முதன்மை விருந்தினர் என்.எம்.அமீன், நூலாசிரியர் நூர்தீனிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

நூலின் விமர்சன உரையை ‘வசந்தம்’ செய்திப் பிரிவு முகாமையார் இர்பான் நிகழ்த்தினார். விடிவெள்ளி ஆசிரியர் பைறூஸ் வாழ்த்துரை வழங்கினார். கலாபூஷணம் காத்தான்குடி பாத்திமா கவி வாழ்த்துப் பாடி நூலாசிரியருக்கான மதிப்பளிப்பை வழங்கினார்.

அதேபோன்று மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்மா ஒன்றியத் தலைவருமான மூத்த ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் உட்பட ஊடகவியலாளர்களும் நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தனர்.

நிகழ்வில் கருத்துரைத்த முதன்மை விருந்தினர் என்.எம்.அமீன்,

"ஊடகவியலாளர் என்ற வகையில் நூலாசிரியர் நூர்தீன் நடுநிலை பிறழாது சமூகங்களின் ஒற்றுமைக்காக பெரும் பங்காற்றி வருகிறார். அந்தவகையிலே ‘சாட்சியங்கள்’ நூலுரு ஓர் வரலாற்று ஆவணமாக அமைந்துள்ளது." என்றார்.

ஊடகவியலாளன் என்ற வகையில் தான் சந்தித்த பல நிகழ்வுகள், கருமங்கள், துன்பவியல் சம்பவங்கள் அவலங்கள், கொடுமைகள், வரலாற்றுத் தடயங்கள் தொடர்பில் நூலாசிரியர் நூர்தீன் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக ‘சாட்சியங்கள்’ நூலுரு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மூப்பெரும் தேவிகளின் பெருவிழா

திருமதி மலர்விழி கனகசபை

உலக நாடுகளில் உள்ள இந்து ஆலயங்களிலும், அலுவலகங்களிலும், வீடுகளிலும் விளம்பி வருட நவராத்திரி பூஜை வழிபாடுகள் நிறைபூரண கும்பம் வைத்து மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றுவருகின்றன. மக்களைத் துன்புறுத்தி வந்த மகிஷாசுரன் என்ற அரக்கனுடன் ஆதிபராசக்தி 9 நாள்கள் போரிட்டு 10ஆவது நாளில் அவனை வதம் செய்து வெற்றி கொண்டதை வெளிப்படுத்தும் மகத்துவம் வாய்ந்த பெருவிழாவாக நவராத்திரிவிழா சிறப்புறுகிறது. ஆம், முதல் மூன்று நாள்களும் வீரத்துக்கு அதிபதியான கிரியா சக்தி அன்னை துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாள்களும் செல்வத்துக்கு அதிபதியான இச்சாசக்தி திருமகளுக்கும், இறுதி மூன்று நாள்களும் கல்விக்கு அதிபதியான ஞானாசக்தி சரஸ்வதிக்கும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று இறுதி நாளான பத்தாம் நாளன்று ஆயுத பூஜை வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.

விஜயதசமி தினத்தன்று கோவில்களிலும், பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் பாலகர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் இடம்பெறும். சக்தி விரதங்களில் நவராத்திரி விரதம் மிகவும் முக்கியமானது. நவராத்திரி விரத காலத்தில் அடியவர்கள் அதிகாலை எழுந்து கர்மாதுஸ்டானங்களை நிறைவுசெய்து அம்பிகையை வழிபாடு இயற்றி திருமுறைகள், அம்பிகையின் திருப்பதிகங்கள், சகலகலாவல்லி பாமாலை போன்றவற்றைப் பாராயணம் செய்வர். ஒரு பொழுது உணவை உட்கொள்ள இயலாதவர்கள் உணவைச் சுருக்கிக் கொள்வர். விஜயதசமி தினத்தன்று அதிகாலைப் பொழுதில் விரதத்தை நிறைவுசெய்துகொண்டு அம்பிகை ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடுவர்.

சிம்ம வாகனத்தில் அமர்ந்து சக்கரம், சங்கு முதலிய ஆயுதங்கள் தரித்துத் துக்க நிவாரணியாக துர்க்கை காட்சி தரும் கோலம் அற்புதமானது. ஆயிரம் இதழ்களையுடைய தாமரையில் இரு கைகளிலும் தாமரைகள் தாங்கி அபயம், விரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருளும் பொருளும் தருபவள் லக்ஷ்மி. வள்ளுவர் லக்ஷ்மி தேவியின் சிறப்பைக் குறிப்பிடும் போது "அகனமர்ந்து செய்யாள் மடியிலான் தான் உளான்தாமரையாள்" என்கிறார். ஸ்ரீநாராயணனின் திருமார்பில் லக்ஷ்மி அகலாமல் வசிக்கின்றாள். லக்ஷ்மிக்கு எட்டு ஸ்வருபங்கள் உள்ளன.

சரஸ்வதிதேவியானவள் கல்விக்கு அதிபதியானவள். சரஸ்வதிதேவியானவள் ஆயகலைகள் அறுபத்திநான்கிற்கும் தலைமை தாங்குகின்றாள். அந்த அறுபத்தி நான்கு கலைகளுள் சிறந்து விளங்குவது இசைக்கலை என்றால் மிகையாகாது. இசையால் ஈர்க்கப்படாதவை எவையும் இல்லை என்றே கூறலாம். கல்வி அழியாத செல்வமாகும். ஏனைய செல்வங்கள் யாவும் பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைந்து கொண்டே செல்லும். இதனால்தான் கல்விச் செல்வத்தை அழியாச் செல்வம் என்று கூறுவர். இதையே வள்ளுவர் "கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மந்தயவை" என்று குறிப்பிடுகிறார்.

ஒருவனுக்கு அழிவில்லாத உயர்ந்த செல்வம் கல்வியாகும். ஏனைய மணி, பொன், பணம் முதலியவை சிறந்த பொருட் செல்வமாகாது என இருவரிகளில் கூறி உள்ளார். கல்வி வெள்ளத்தால் அழியாது, வெந்தணலால் வேகாது, கள்வராலும் கவரப்பட முடியாது. இளமையிலும் முதுமையிலும் பயன் அளிக்க வல்லது. கல்வி கற்றவனையே உலகம் மதிக்கும். கல்லாதவன் நெடுமரம் போன்றவனாவான். அவனால் குடும்பத்துக்கோ, சமுதாயத்துக்கோ நாட்டுக்கோ எந்தவித பயனும் கிடையாது.

கல்வி ஒன்றே நம்மைக் கடைத்தேற்றும் கலம் என்பதை மாணவச் செல்வங்கள் உணரவேண்டும்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியமாகும். இந்த உண்மையை உணர்ந்து வீட்டிலும், நாட்டிலும் கல்விப்பயிர் வளர்த்திட எம் கடன் பணி செய்து, நவராத்திரி விரத காலத்திலே அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வம் நிறைவாகக் கிடைத்திட முயல்வோமாக.



## தாயே நீயெனக் காதாரம்!

வாணி கலைவாணி வந்தருள வாநீ
காணி நிலம்தந்து கருணைமழை பொழிவாயே
பேணி எமை வளர்த்து பெருஞ்செல்வமெலாம் தந்து
ஏணிபோல் உயர்த்திவைத்து எமைக் காத்தருள் தாயே!

அன்னை சரஸ்வதியே ஆரணங்கு அம்பிகையே
மின்னும் நவரத்தினமாய் மேன்மையுற ஒளிர்பவளே
நின்பதம் போற்றியே நின்னைச் சரணடைந்தேன்
உன்னருளைத் தந்தெம்மை உயர்த்தியே வையம்மா!

தாயே கலைவாணி தயாபரியே சரஸ்வதியே
நாயேனாம் எந்தனக்கு நல்லருளைத் தாருமம்மா
சேயோனாம் எந்தனையே செம்மையுற வைத்திடு
வாய்
நீயே எனக்காதாரம் நின்னடியே சரணமம்மா!

நான்முகனின் நாயகியே நாரணின் மணவாட்டியே
வான்மதி சூடிய வள்ளல்பிரான் பத்தினியே
ஊனாகி உயிராகி உள்ளொளியான தேவியரே எமக்கு
தேனான வாழ்வுதந்து சீர்பெறவே செய்திடுவீர்

வே.இராமர்

# கலைத் தாயை போற்றித் துதிப்போம்!

காரை எம்.பி.அருளானந்தன்

நவராத்திரி நாயகிகள் வழிபாட்டில் கடைசி மூன்று தினங்களும் கலைமகளுக்குரிய பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெறும். இத்தகு நாள்களில் சரஸ்வதிதேவியை வழிபாடு இயற்றுவது சிறப்பான பலாபலனை தரும்.

சரஸ்வதி தேவிக்கு மிகப் பிரியமான இடம் கவிஞர்களின் வாக்குத்தான். அவள் தான் வாழும் பூவையும், சங்கப் புலவர்கள் பாவையும், பிரம்மதேவர் நாவையும், பொதிகை முனிவர் வாழும் கோவையும் மறந்து கவிஞர் நாவில் குடிகொள்கிறாள்.



பிரம்மாவின் நாவில் கலைமகள் இருக்கின்றாள் எனில், அவள் விருப்பப்படியே தான் பிரம்மா பேசுகிறார். பிரம்மாவின் நா வன்மையையே ஆட்டிவைக்கும் தேவியானவள் சிருஷ்டியின் மீது கலை ஆதிக்கம் செலுத்துகின்றாள். பிரம்மாவின் படைப்புக்கள் அத்தனையுமே கலைப்படைப்புக்கள்.

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக்கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பதம் அடைக்கலமே!

என்று கவிமணி பாடியிருக்கிறார். கலைமகள் நடமாடத் தகுந்த இடங்களைக் காண்டாள். நான்முகன் தேவியான கலைமகள் பூவுலகுக்கு வந்தாள். முதன்முதலில் கலை அன்னையின் கண்களில் வானை நோக்கி வாழ்கின்ற நிலத்திலே பயிரை வளர்த்து உயிரைக் காக்கும் உழைப்பாளிகள் மேழிக் கரங்கள் தென்பட்டன. பின்பு செஞ்சொற் கவி வாணர்கள் இன்னிசையுடன் பாடுவது புலனாயிற்று. அதன்பின்பு கலைஞானம் மலைபோல ஒளிரும் அறிவாளிகளின் நெஞ்சத் துடிப்புத் தென்பட்டது. உடனே நாம் நடமாடத் தகுந்த இடங்கள் இவைகளே என்று அறிந்துகொண்ட கலையன்னை அவ்வாறே அங்கு கோயில்கொண்டு வண்ணமயில்போல கலை நடனம்புரிய ஆரம்பித்துவிட்டாள். "பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை" என்பர். தெய்வங்களுக்கு உறைவிடமாகவும் தூய்மைக்கு உதாரணமாகவும் விளங்குவது தாமரைப் பூ ஒன்றே.

**சங்கம் வளர்த்த சரஸ்வதி**

தமிழ்நாட்டிலே முதல், இடை, கடை தமிழ்ச் சங்கங்கள் தமிழை வளம்படுத்தின. மதுரையில் இருந்த மூன்றாவது தமிழ்ச்சங்கத்தில்தான் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. முதலில் இருந்த சங்கம் சரஸ்வதிதேவியின் அம்சமே என்பது பலருக்குத் தெரிந்திராது. பிரம்மா கங்கையாடியும் காவிரி ஆடியும் திரும்புகிறார். என்னைவிட்டுவிட்டு இப்படி போய் வரலாமா? என்று சரஸ்வதி கோபிக்கிறாள். குற்றம் உன் மேல் இருக்க என்னை கோபிக்கிறயே என்று பிரம்மா சபிக்கத் தொடங்குகிறார்.

"பூமியில் 48 ஜென்மம் எடுக்க" என்று சாபம் கொடுக்கிறார். என்னவென்றாலும் கணவன் மனைவி சண்டைதானே. மனைவிக்கு சாபம் கொடுத்துவிட்டேனே என்று பிரம்மா கவலை கொண்டார். தன் சாபத்தை மாற்றி ஒரே சமயத்தில் 48 பிறவிகளையும் எடுக்கும்படி தன் சபதத்தை மாற்றுகிறார்.

அப்படியே மதுமாநகரில் இறங்கி 48 புலவர்களாக சரஸ்வதி தேவி பிறக்கின்றாள். இவர்களைக் கொண்டதுதான் முதல் தமிழ்சங்கம். இதற்குத் தலைவராக இருந்தவர் சிவப் பரம்பொருளே. ஆம், தமிழின் இனிமையில் உள்ளத்தைப் பறிகொடுத்த தேவி பல தமிழ்ப் புலவர்களாகத் தோன்றி இன்பத் தமிழ் பாடல்களைப் பாடிக்கொண்டிருக்க வேண்டும். இது சாபமா? தமிழ் உலகுக்கு பிரம்மன் கொடுத்த வரப்பிரசாதம். தூய்மையின் வடிவமாக விளங்கும் வாகீஸ்வரியை அலட்சியம் செய்யமுடியாது. அவள் அருள் இல்லையேல் வாழ்க்கையே சூன்யமாகிவிடும். 'வாக்' என்று மூலத்தில் படைத்தல் எனப் பொருள்படும். சரஸ்வதியை இந்திரனுடைய மறுவுயிர் என்று சொல்வதுண்டு. சிருஷ்டியே சக்தி. இதனால்தான் பிரம்மாவின் சக்தி எனப்படுகிறாள். நாமும் நலம் நிறைந்த வாக்கை அருளி, வசந்தமான அறிவும் பொலியும் வாழ்வும் அருளும் சரஸ்வதி தேவியை வழிபாடு இயற்றி வாழ்வாங்கு வாழ்வோமாக.

## பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

# ஈழத்தின் தனித்துவம் மிக்க பெண் ஆளுமை



ச.லலீசன்

உணர்வாகி உயிராகி விளங்கும் தமிழ்மொழியின் ஏற்றத்திற்காக உழைப்போர் பலர். எம் மண்ணில் பிறந்து எம்முடன் வாழ்ந்து உலகளாவிய தமிழ் வளர்ச்சிக்கெனப் பங்களிக்கும் தமிழ் இணையராகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் இணையரை அடையாளப்படுத்தமுடியும். இவர்களுள் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் 14.10.2018 இல் அகவை 75 இனைக் காண்பதையிட்டு .இக்கட்டுரை பிரசுரம்ாகின்றது.

**பிறப்பும் ஆளுமை உருவாக்கமும்**

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் 14.10.1943 இல் பருத்தித்துறை தும்பளை நெல்லண்டையில் பிறந்தவர். தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்,வடமராட்சி மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை என்பவற்றில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக்கலைக் கற்கையைப் பயின்றவர். பேராசிரியர் க.கைலாசபதியின் வழிகாட்டலில் சி.வை. தாமோதரம்பிள்ளையின் தமிழியற் பணிகளை ஆய்வு செய்து முதுமாணிப் பட்டத்தையும், பேராசிரியர்கா.சிவத்தம்பியின் வழிகாட்டலில் சங்ககால அகப்பாடல்களின் உரைப்பொருத்தம் குறித்து குறுந்தொகைப் பாடல்களை முன்னிறுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

பேராதனையில் தனது வாழ்க்கைத் துணைநலத்தைத் தீர்மானிக்கும் நல்லூழ் அவருக்கு வாய்த்திருந்தது. 1965 இல் சண்முகதாஸ் மனோன்மணி இணையரின் திருமணம் இடம்பெற்றது. இணையர் இயற்றிய இல்லறவாழ்வின் இனிய நன்கலங்களாக கலைச்செல்வி குகஸ்ரீ,திருநங்கை, ஞானசபேசன்,செந்தூரன் ஆகியோர் வாய்த்தனர். கனடா,ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் இவர்கள் வாழ்கின்றனர்.

சேந்தினி, இளநிலா,அபிதேவ், தியானா, றிக்கோ,அபிநயனி எனப் பேரப்பிள்ளைகளையும் கண்டுள்ளனர். புலம் பெயர் தேசத்தில் வாழும் தகைமையும் வசதியும் இருந்தும் யாழ். மண்ணில் தம் ஊழியைக் கழிக்கும் ஆர்வத்தினால் இன்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்வதைப் பெருமையாகக் கருதி இத்தமிழ் இணையர் வாழ்கின்றனர்.

**ஆசிரியப் பணி**

பேராசிரியரதும் அம்மையாரதும் தமிழாசிரியப் பணிகள் போற்றுதற்குரியன. யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவின் தமிழ்த்துறை விரிவுரையாளர்களாக இருவரும் 1965 தொடக்கம் மூன்றாண்டுகள் பணியாற்றியுள்ளனர்.

பேராசிரியர் சண்முகதாஸ் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனத் தனது பணிகளை விரித்துக்கொண்டார். முனைவர் மனோன்மணி அம்மையார் திரு நெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தின் தமிழாசிரியராகவும், நான்கு ஆண்டுகள் கொக்குவில் தொழிநுட்ப நிறுவனத்தின் விரிவுரையாளராகவும், இருபதாண்டுகள் யப்பான் தொக்கியோவில் உள்ள கக்சுயின் பல்கலைக் கழகத்தின் ஆய்வுப் பேராசிரியராகவும் பணியாற்றி பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வருகை விரிவுரையாளராகவும், வெளிவாரிப் பட்டக்கற்கை நெறியில் தமிழ்; பயில்வோருக்கான வழிகாட்டுநராகவும்; பணிமேற்கொண்டார்.

சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை ஆழ்ந்த புலமையும் பயிற்சியும் அம்மையாரிடத்தில் உண்டு. இதனால் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தமிழில் உயர்பட்டப் படிப்பை மேற்கொள்ளும் பலரை இன்றும் வழிப்படுத்திவருகின்றார்.

**செவிலித்தாய்**

திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லப் பிள்ளைகளின் செவிலித்தாயாகத் தன்னை அர்ப்பணித்தார். 14 ஆண்டுகள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் இல்லத்திட்டப்பணிப்பாளராகவும், நிதிச் செயலாளராகவும் பணியாற்றி சிறுவர்களை வழிப்படுத்தினார். இவர்களுள் பலர் வாழ்வின் உயர்நிலையில் மிளிர்வதற்கு வழிகாட்டியாகவும் ஒளியேற்றியாகவும் அமைந்தார்.

**அம்மையார் ஆக்கிய நூல்கள்**

அம்மையார் இதுவரை 52 நூல்களை ஆக்கியுள்ளார். இவை தமிழ்,ஆங்கிலம் மற்றும் யப்பானிய மொழிகளில் அமைந்தனவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் முக்கியபோக்குகள், சி.வை.தா. ஓர் ஆய்வு, இத்திமரத்தாள்,ஆற்றங்கரையான், மன்யோசு காதற் பாடற் காட்சிகள்,சாதியும் துடக்கும்,பைந்தமிழர் வாழ்வியற் கோலங்கள், தமிழ்மொழி அகராதி தந்த சதாவதானி,சங்ககாலத் திருமண நடைமுறைகள்,சென்ற காலத்தின் பழுதிலாத்திறம்,காலம் தந்த கைவிளக்கு,வாலிவதை - ஒருவழக்காடுகளம், செவிநுகர் கனிகள், பாரதியின் கன்னிக் குயிலின் இன்னிசைப் பாட்டு, இலங்கைத் தமிழியல் சிலபதிவுகள், பிஞ்சு முகத்தின் தேடல், ஜப்பானியக் காதற் பாடல்கள் முதலிய நூல்கள் இங்கு குறிப்பிட்டுக்காட்டத்தக்கன. நூல்களின் பட்டியல் இதை விடவும் நீண்டது. இடவிரிவஞ்சித் தவிர்க்கப்பட்டுள்ளன. தவிர நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார்.

**அம்மையாரின் ஆக்க இலக்கியங்கள்**

ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் மனோன்மணி அம்மையார் தன்னை இனங்காட்டியுள்ளார். ஐந்திற்கும் மேற்பட்ட சிறுகதைகள், பத்துக்கும் மேற்பட்ட நாடகங்களும் இசைச்சித்திரங்களும் இவற்றுள் அடங்கும். சொர்க்கத்தின் குரல், அம்மா வந்தாள்,நம்பிக்கை,புத்தம் புதிய துளிர், பொதுக்கிணறு முதலிய சிறுகதைகள் பிரபல ஊடகங்கள் வாயிலாகப் பிரசுரமாகியுள்ளன. குறிப்பாக உதயன் மற்றும் ஏனைய பிராந்திய அச்சு ஊடகங்கள், ஜேர்மனியின் வெற்றிமணி, இந்துசாதனம் முதலிய பத்திரிகைகளில் தொடர்ச்சியாக இலக்கியமற்றும் சமயச் செய்திகளின் பத்தியெழுத்தாளராகவும் செயற்பட்டுவருகின்றார்.

சிறந்தகுரல் ஆளுமையுடன் கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனைக் கொண்டிருப்பதால் இன்றைய யாழ்ப்பாணத்துப் பெண் பேச்சாளர்கள் வரிசையில் முதன்மையிடத்தில் வைத்தெண்ணப்படும்ஆளுமையாகத்திகழ்கின்றார்.

**தனித்துவச் சிந்தனைகள்**

இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்பைப் பல்வேறு அறிஞர்களும் வெவ்வேறு வகைகளில் குறிப்பர். அது அவர்களுக்கு உள்ள சுதந்திரம். இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்புக் குறித்துக் கட்டுரை ஆக்கிய முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் தனது நோக்கில் புதியதோர் அணுகுமுறையைப் பதிவு செய்கின்றார்.

"ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பினைப் பார்க்குமிடத்து 12 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேயே தமிழில் இலக்கியங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது. இப்பிற்பட்ட காலப்பகுதியைப் பாகுபாடு செய்யுமிடத்து பின்வருமாறு பாகுபாடு செய்துகொள்ளலாம்." என்கிறார் (இலங்கைத் தமிழியல் சில பதிவுகள் பக்கம்.07)

•ஆறுமுகநாவலருக்கு முற்பட்ட காலம் (1216 - 1822).

•ஆறுமுகநாவலர் காலம் (1872 - 1879)

•தன்னாட்டு உணர்வுக் காலம் (கனகிபுராணம் போன்ற இலக்கியங்கள் எழுந்த காலம்)

•தனித்துவம் பேணும் காலம் (1958 இற்குப் பின் இனக்கலவரத்தின் பின்னரான காலம்)

முதலாவது பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் தொடக்கம் ஆறுமுகநாவலர் வரையான காலப்பகுதியைக் குறிப்பிடுகின்றார். இதற்குள் தான் மிசனறிகளின் காலமும் அடங்குகின்றது. இக்காலப்பகுப்பு ஆறுமுகநாவலர் என்ற தனி ஆளுமையை மையப்படுத்தி அமைக்கப்பட்டமை மற்றும் தனித்துவம் பேணும் காலம் என்ற தொடர்ப்பிரயோகம் என்பன தமிழுலகோரால் எந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்பது ஆய்விற்குரியது.

யாழ்ப்பாணத்தவரின் வழிபாட்டு மரபுப் போக்குப் பற்றி அவர் குறிப்பிட்ட கருத்து ஒன்று நோக்கத்தக்கதாகும்.

"யாழ்ப்பாணத்தவர்கள் கிறிஸ்தவ மதத்தையும் மேலைநாட்டுப் பண்பாட்டம்சங்களையும் எதிர்கொண்டபோது அதன் செல்வாக்கைத் தடுப்பதற்கு

ஆரியவயப்பட்ட மதவழிபாட்டு நடைமுறைகளையே தமது கவசமாக அணிய முற்பட்டனர். இதனால் தொழில்நிலை சார்ந்த நிலத்தெய்வ வழிபாட்டு நடைமுறைகள் வழக்கொழியலாயின. சாதிநிலை வழிபாடுகளாக அவை சமூகக்கட்டமைப்பை அவிழ்க்க முயன்றன." (இலங்கைத் தமிழியல் சில பதிவுகள் பக்கம், 137) பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையின் நாடக உலகப் பிரவேசம் குறித்துக்கருத்துரைக்கும் போது அம்மையார் மேற்கண்ட கருத்தை முன் வைத்துள்ளார்.

அம்மையாருடைய எழுத்துநடை சிக்கனம் வாய்ந்ததாக இருக்கும். வெல்லும் சொல் இன்மை அறிந்து அவரது சொற்பிரயோகம் இருப்பதை ஆக்கங்களை வாசித்தவர்கள் அறிவர். கட்டுரைகளில் மேலைத்தேயப் பாணியில் அட்டவணைகளாக்கிக் காட்டுதல், வகைப்படுத்திக் காட்டுதல், குறித்த ஒரு கருத்து எவ்வெவ் இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது என்பதை நிரற்படுத்திக் காட்டுதல் என அவரது எழுத்துநடையில் ஒரு தனித்துவம் உள்ளது.

விஞ்ஞானத்தின் வலிமை மிகு செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கை அவரிடம் குறைவாகவே காணப்படுகின்றது. மின்னஞ்சல், முகப்புத்தகம் முதலிய தொடர்பாடல் சாதனங்களின்பால் நம்பிக்கையற்றவராக அவரைப் பலதடவைகள் தரிசித்திருக்கின்றேன். அவரது கையெழுத்தை ஒரு தனி எழுத்துருவாக அமைக்கலாம் எனப் பலரும் விதந்து பேசுவர்.

இளையோரிடையே இலக்கியப் பரிச்சயத்தை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வமும் அதற்கான செயலூருக்களும் அவரிடம் என்றைக்கும் இருந்து வருகின்றது. இதற்கு அவரது பின்வரும் கருத்துச் சான்றாக அமையும்.

"இன்றைய வேகமான வாழ்வியலில் சமூகவயப்பட்ட வழிகாட்டல் ஒன்று தேவைப்படுகின்றது. வாழ்வின் செல்நெறியைச் செம்மைப்படுத்த இலக்கியக் கற்கை நெறி ஒன்று இன்றியமையாதது. இளமையும் முதுமையும் ஒன்றுபட இது வழிவகுக்கும். ஆனால் இக்கற்கை நெறியைக் கல்விக் கூடங்கள் மட்டும் நிறைவாகச் செய்ய முடியாது. பொது அமைப்புக்களும் இப்பணியைத் தலைமேற்கொள்ள வேண்டும். ஊரக நிலையில் இலக்கியத்தின் சுவையை ஊட்டி மக்களை அதன்பால் ஈர்க்கும் பணியை இளைஞரும் முன்னெடுக்க வேண்டிய காலம் இது. முதுமை தளர்ச்சியாலும் முரண்பாட்டாலும் இப்பணிஂயக் கைநெகிழ விட்டுள்ளது. அதனால் சமூக நெறிப்படுத்தலில் ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளது. பிறமொழிச் செல்வாக்கும் பிற பண்பாட்டுத் தாக்கமும் சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைத்துள்ளன. இந்தநிலையில் ஆரியர் ஆடும் கயிற்று நடனம் போலப் பணிசெய்ய இளந்தலைமுறை முன்வரவேண்டும்." (ஜீவநதி - 01. பக்கம்,05)

**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கு மீளுயிர்ப்பு**

யாழ்ப்பாண அரசர் காலத்தில் நல்லூரில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஒன்று செயற்பட்டதாக வரலாறுஉண்டு. 1900 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதாயினும் சிலஆண்டுகளில் இதன் பணிகள் கைவிடப்பட்டுவிட்டன.

உலகிலேயே தமிழ்ச்சங்கம் கால்கோளிடப்பட்ட யாழ்ப்பாணத்திற்கெனத் தமிழ்ச் சங்கம் இல்லையே என்ற பெருங்குறையைக் களையும் வகையில் 2012 ஆம் ஆண்டில் துறைசார்ந்தோரை இணைத்து யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தை பேராசிரியர் அ.சண்முகதாஸ் மீள உருவாக்கினார்;. அவரே அதன் முதலாவது தலைவராகவும் செயற்பட்டார். தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியில் கலாநிதி மனோன்மணி அம்மையார் மூன்றாவது தலைவராக 2016 தொடக்கம் தலைமைப் பொறுப்பை ஏற்று இரண்டாண்டுகள் சங்கத்தை வழிநடத்தினார்.

நிறைவாக, பெண்மையின் ஆற்றலைப் பெரிதும் வலியுறுத்தக்கூடிய ஆளுமை மிக்கவராக முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களை அடையாளப்படுத்தலாம். பேராசிரியர் அ.சண்முகதாஸ் என்ற மிகப்பெரும் ஆளுமையின் வெற்றிகளுக்குப் பின்னால் நின்று இயங்குவதோடு அல்லாமல், தனித்துத் தன் தடத்தையும் நிலைநிறுத்தும் மனோன்மணி அம்மையாரின் வாழ்வியல் இன்றைய உலகோர் கற்க வேண்டிய பாடம். அவருக்கு இனிய பவளவிழா வாழ்த்துக்கள்.

*கட்டுரையாளர்:*
*தலைவர்,*
*யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்.*

## பேராசான் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

# அகவை எண்பது காணும் அமுத விழா நாயகன்

சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்

கல்வி என்பது தனிமனிதனையும் தேசத்தையும் விடுதலை பெறச் செய்யும் கருவியாகும். கல்வி மூலமே தனிமனிதனும் தேசமும் அபிவிருத்தி அடைய முடியும். கல்வியில் வரும் மாற்றங்களையும் கல்வியினூடே தேசத்தின் தேவைகளையும் உணர்ந்து கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும், ஈடுபடுத்தவும் யார் முனைகின்றாரோ அவரே நல்லாசான். நல்ல பேராசான்.

எங்கள் பேராசிரியர் இத்தகு மாற்றங்களையும் தேவைகளையும் நிறைவேற்றவும் நிறைவேற்றச் செய்யவும் பல்நிலை வடிவங்களை எடுத்து ஈழ தேசத்து தமிழ் மாணவர்களின்,ஆசிரியர்களின்,அதிபர்களின்,கல்வி உத்தியோகத்தர்களின்,கல்வியிலாளர்களின் உள்ளங்களில் இடம் பிடித்திருப்பவர். தேசத்தினதும் தனது சமூகத்தினதும் மாற்றுநிலை முகவராகச் செயற்பட்டுக் கொண்டிருப்பவர் எங்கள் தேசத்தின் கல்வியியற்றுறையில் மூத்த பேராசிரியர்.கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி.

**பேராசிரியர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் சிலரின் சிந்தனைகள்**

"கல்வி உளவியல்,கல்வி அளவீட்டியல் துறைகளில் அவர் கொண்ட ஞானம் பெரிது. ஆர்வமான அவரது கற்பித்தல் ஆற்றலும் தேடலும் அவரது மாணவர்களின் மேன்மைகளுடன் இரண்டறக் கலந்துள்ளது. எங்கள் பல்கலைக்கழகத்தின் சமுதாய மேம்பாட்டுக்காக கல்வித் திட்டங்களில் அவர் கொண்ட அக்கறை மேலானது. இந்தவகையில் தொழிலாளர் கல்விப் பிரிவின் தொடக்க கால இணைப்பாளராக அவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது."

பேராசிரியர்.நா.சண்முகலிங்கன்

"ஆசிரியர்களுக்கு கல்வியும் பயிற்சியும் வழங்குபவர் என்ற படியால் முதற்கண் பேராசிரியர் க.சி ஒரு சிறந்த ஆசிரியர் என்பது யாவருக்கும் தெரிந்ததே. எந்த விடயத்திற்கும் அடிமுடி' தேடி நுணுக்கமாகக் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பணிபுரிந்த அவர் அன்புடன் மட்டுமின்றி சற்று கண்டிப்புடனும் நடந்து, கடமையே கண்ணாக இருப்பவர். இக் கண்டிப்புப் பண்பு கூட அவருக்கு ஒரு விசேட மாணவர் வட்டத்தை ஏற்படுத்தி இருந்தது."

பேராசிரியர்.சோ.சந்திரசேகரன்

"பேராசிரியர்.க.சின்னத்தம்பி அவர்கள் ஆங்கிலம்,தமிழ்,சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லவர். விஞ்ஞான அறிவும், கலையறிவும் ஒன்றிணைக்கப் பெற்றவர். கல்வி உளவியல், கணிப்பீட்டியல், கல்வி முகாமைத்துவம், கற்பித்தலியல்,கல்விப் புள்ளிவிபரவியல், கல்வி நுட்பவியல் முதலான துறைகளிலே வல்லவர். விரிவுரைகளில் தனக்கென ஒரு தனித்துவத்தை உருவாக்கிக் கொண்டவர். தனது விரிவுரைகளை நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்து வழங்குவதிலே தனித்துவமானவர். இணக்கல் உபகரணங்களைப் பயன்படுத்தி ஒருபுறம் விரிவுரைகளை வளம்படுத்தியும் மறுபுறம் இணக்கல் உபகரணங்களை ஆசிரியர்கள் தாமே உருவாக்கிக்கொள்ளும் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய மறைநிலைச் செயற்பாட்டையும் திட்டமிட்டு மேற்கொள்பவர்."

பேராசிரியர்.சபா ஜெயராசா

"கல்வியியல் அளவீடும் மதிப்பிடும்' என்ற நூலை எழுதி ஆசிரியர்கள் மத்தியில் நன்மதிப்பும் புகழும் அடைந்துள்ளார்.இவ்விதமே பேராசிரியர் எல்லாக் கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களின் தேவை கருதியும் கல்வித்தரம் மேலோங்க வேண்டும் என்ற அவாவில் தான் ஆராய்ந்து அறிந்தவற்றை நூல்களாக எழுதியுள்ளார். அவற்றில் எல்லோராலும் விரும்பிப் படிக்கும் 'அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும்','கல்வியியல் அளவீடும் மதிப்பீடும்','கல்வி ஆய்வியல்' போன்ற நூல்களை எழுதி ஆசிரியர் சமூகத்திற்கு உதவியுள்ளார். மேற்கத்திய நாடுகளின் கல்வி முறைமை பற்றி அறிந்து இங்கு நவீன கல்வி முறைமை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி ஆய்வரங்குகளை நடத்தி பல்கலைக்கழகக் கல்வியில் வர வேண்டிய மாற்றங்கள் பற்றி நல்ல கருத்துக்களை முன் வைத்துள்ளார். இவரது கருத்துக்கள் சமகாலப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டதோடு கல்வி பற்றிய பன்முகப்பார்வை கொண்டதாகவுமுள்ளது."

பேராசிரியர்.பசுபதி சிவநாதன்


மேற்போந்தவர்களின் சொல்லாடல்களிலிருந்து பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி தனியாள் ஆளுமையும், கல்வியியல் புலமையும், தலைமைத்துவப் பாங்கும்,கற்பித்தலியலில் அவர் கொண்டிருந்த ஆசிரியத்துவமும் வெளிச்சமிடப்பட்டுள்ளன. பேராசிரியரின் மாணவன் என்ற தகுதிநிலையில் அவர் மாணவர்கள் மீது செழுமைப்பட்ட ஒரு செல்வாக்கை எவ்வாறு செலுத்தினார் என்பது இன்று நோக்க வேண்டிய ஒன்றாகும்.

**பேராசிரியர் கொண்ட நிறையாளுமைப் பண்புக்கூறுகள்**

அவரின் ஆளுமைக் கூறுகள் நிறையாளுமைக் கூறுகளாகும். நிறையாளுமை என்பது "ஒருவர் தனது தேவைகள்,விருப்பங்கள்,எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றைச் சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிறைவு செய்துகொள்ளும் திறமையே நிறையாளுமை ஆகும்."; அதாவது தன்னிடமுள்ள நிறைகளையும் குறைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலையாகும். இத்தகு இயல்புகளோடு நிறையாளுமைக்கான பண்புக்கூறுகள் பலவற்றை பேராசிரியரிடத்தில் காணலாம். குறிப்பாக,

- தன்னைப் பற்றிய உண்மையான இயல்பை மதிப்பீடு செய்யும் திறனை எப்போதும் கொண்டிருப்பவர்.
- பிரச்சினைகளை உண்மை நோக்கில் அணுகும் ஆற்றல் மிக்கவர்.
- தனதும் தன்னால் உருவாக்கப்பட்டவர்களின் வெற்றிகளையும் சரியாக மதிப்பீடு செய்பவர்.
- பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாதவர். (தனது தொழில் வாழ்விலும், குடும்ப வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் இதைக் கடைப்பிடிப்பவர்.)
- எதுவரினும் எவ்வாறு நிகழ்ந்தாலும் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்பவர்.
- தனக்கான சுதந்திரப் போக்கு உடையவர். மற்றவர்களின் சுதந்திரப் போக்குக்கும் வழிகளைத் திறந்து விடுபவர்.
- மனவெழுச்சியில் முறையான கட்டுப்பாடு உடையவர்.
- குறிக்கோள்களுடைய நடத்தைக் கோலங்களை கொண்டிருப்பவர்.
- பிறர் மேல் அக்கறையுடன் தனது செயற்பாடுகளை மேற்கொள்பவர்.
- சமூகத்தின் ஏற்பாளராக எப்போதும் இருப்பவர்.
- இலக்கு சார்ந்த வாழ்க்கையையும் வாழ்வியல் அம்சங்களையும் கொண்டிருப்பவர்.
- உச்சிமீது வானிடிந்து வீழினும் மகிழ்ச்சியானவராகச் செயற்படுபவர்.
- முகமறியாதவர்களுக்கு தனது முகமறிய வேண்டுமென்ற நோக்கில்லாது எதிர்கால சமூக விருத்தி நோக்கி உதவிகளை வழங்குபவர்.

**இத்தகு பன்முக நுண்மதியும், பன்முகப் பார்வையும், பன்முக ஆளுமையும்,பன்முக நோக்கும் இலக்கும் கொண்டவராக** ஐம்பத்தெட்டு ஆண்டுகள் இலங்கையின் கல்விப்புலத்தில் இந்தத் தேசத்தின் கல்வி மேம்பாட்டுக்கான ஓர் உள்ளார்த்தமான புலமையாளராகச் செயற்பட்டுக் கொண்டிருப்பவர் பேராசிரியர்.க.சின்னத்தம்பி.



**ஆற்றல்**

எந்தவோர் ஆசிரியர், மாணவர் சார்பாக அவநம்பிக்கையோ குற்றவுணர்வு சார்ந்த நோக்கோ இல்லாது எல்லோரும் 'மாணவர்கள்' என்ற 'ஆசிரியத்துவம்'மிகு பார்வையே அவரிடத்தில் காணப்படும். அவரின் ஆசிரியத்துவத்தில் 'பேசுதல்','ஏசுதல்'என்ற இருமைநிலையில் 'பேசுதல்' தான் உங்களுக்கு என்னால் தரப்படும் அன்பளிப்பு. 'ஏசுதல்' என்னிடத்தில் இல்லை என்ற துவைத நிலையில் செயற்பட்டு மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பக்குவநிலை கொண்டவர்.

இலங்கையின் கலைத்திட்ட வரலாற்றில் 1972,1981,1997 ஆகிய எல்லாக் கால கட்ட கலைத் திட்ட மாற்றங்களின் போதெல்லாம் அவற்றின் நடைமுறைகள் தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரை நிலை முதல் பாடசாலை வகுப்பறை மட்டம் வரையில் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை தெளிவாக்கியவர். பன்முக நுண்மதிக் கோட்பாட்டாளர்களின் மேற்குலகச் சிந்தனைகளை இலங்கையின் கல்விப் பின்புலத்தில் புலமைத் தொழிற்பாடாக ஆசிரியர் கல்வியில் நடைமுறைப் படுத்தியவர். புளுமின் பகுப்பியலில் ஆழமான புலமை கொண்டவர்.

**ஆசிரியப் பணி**

கொழும்பு பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கல்விப்புலத்தில் சேவையாற்றியவர். அதனால் இலங்கையின் முதுபெரும் கல்விப் பேராசிரியர்களுடன் புலமைத் தொழிற்பாடு சார்ந்த நல்லுறவுகளை இன்றும் பேணி வருபவர். சமூகம் சார்ந்த பல ஆய்வுகளை மேற்கொண்டு பல் நிறுவனாங்களில் ஆய்வாளராகவும் தொழிற்பட்டுள்ளார். அத்துடன் ஆய்வுலகத்தில் தெளிந்த அறிவார்ந்த மாணவர் பரம்பரை ஒன்றையும் உருவாக்கியுள்ளார்.

பேராசிரியர் தொகுத்துள்ள, 'அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும்', 'கல்வியில் அளவீடும் மதிப்பீடும்', 'கல்வி ஆய்வியல்'ஆகிய மூன்று நூல்களும் கல்வியியற்றுறையில் பல பதிப்புகளைக் கண்ட நூல்களாகும். அத்துடன் அவற்றின் காத்திரத்தன்மைக்கு தமிழ்ப்பேசும் ஆசிரியர் பரம்பரை சான்று பகரும்.

**தனித்துவம்**

பேராசிரியர் நேர முகாமைத்துவத்தின் ரிஷிமூலம் எனலாம். எண்பதாவது அகவையில் விரிவுரையாற்றும் சந்தர்ப்பத்தில் கூட சரியான நேரத்துக்கு விரிவுரைகளை ஆரம்பித்து சரியான நேரத்துக்கு நிறைவு செய்யும் நேர முகாமைத்துவ செயலொழுங்கு இன்றைய ஆசிரியர் தலைமுறையினருக்கு அவர் விடுக்கும் முதலாவது சவாலாகும்.

பேராசிரியர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கதிரையில் அமர்ந்து கற்பித்தல் செயன்முறையை மேற்கொள்வதில்லை. எண்பது அகவை காணும் எங்கள் பேராசிரியர் இன்றும் எழுந்து நின்ற வண்ணமே நாள் முழுதும் விரிவுரையாற்றுவார். இத்தகு ஆசிரியத்துவ விருப்பார்வமும் ஆற்றலும் இன்றைய ஆசிரியர் தலைமுறைக்கு விடுக்கும் இரண்டாவது சவாலாகும்.

மொழியாற்றல் சிறப்பு பேராசிரியரின் அற்புதக் கலையாகும். பௌதிகவியல் விஞ்ஞானப் பட்டதாரியாக இருக்கின்ற போதிலும் தாய்மொழி அறிவு (தமிழறிவு) பண்டிதரும் பட்டதாரியும் இணைந்த செழுங் கலவையாகும்.

எழுத்துப்பிழைகள்,சொற்பிழைகள்,வாக்கியப்பிழைகளை ஆழமாகக் கண்டறியும் ஆற்றல் மற்றும் வேகம் வியக்கத்தக்கது. இன்றைய ஆசிரியர் தலைமுறையினர் கூறுவார்கள் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் தான் மொழியை கவனிக்க வேண்டுமென்று. ஏனைய பாட ஆசிரியர்களின் வேலை இதுவல்லவென்று. பேராசிரியரின் இத்தகு மொழியாற்றல் ஆளுமை இன்றைய ஆசிரியருக்கு விடுக்கும் மூன்றாவது சவாலாகும்.

எனவே பேராசிரியரின் ஆளுமைத் திட்டமிடல்கள் இன்று எம் தேசத்துப் பாடசாலைகளில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்களிடத்தில் காணப்பட வேண்டிய நல்லாசிரியருக்குரிய பண்புகளாகும். அவரின் ஆளுமைகளின் தடத்தில் நாம் பயணிக்கும் போது எம்மினத்தின் எதிர்கால மனிதவளம் மகிழ்ச்சி பெறும்.

**ஆசிரியத்துவம் சார்ந்த ஆளுமை**

அகவை எண்பது காணும் ஈழத்து முதுபெரும் கல்விப் பேராசிரியர் கொண்டுள்ள தனியியலும், வாழ்வியலும்,தொழிலியலும் இன்றைய ஆசிரியர் சமூகத்திற்கு பல பாடங்களை கற்றுத் தந்துள்ளது எனலாம். குறிப்பாக,

- ஆசிரியத்துவத்தின் செயற்றிறன் மிகு ஆசிரியர்.
- கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் நடைமுறைப் பிரயோகத்துடன் தொடர்புபடுத்தும் ஆற்றலாளர்.
- எண்பது அகவையிலும் எண்மான நுட்பங்களை கற்பித்தலில் பயன்படுத்துபவர்.
- மாணவர்களின் தனியாள் ஆற்றல்களைப் புரிந்து அறிந்து தெரிந்து கற்பித்தலை மேற்கொள்பவர்.
- இன்றைய ஆசிரியத்துவ வகிபாகத்திற்கேற்ற பண்புகளைக் கொண்டிருப்பவர்.
- மிக எளிமையான ஆனால் மிகுந்த கவனத்துடன் விளைதிறனை வெளியிடுபவர்.
- மாணவர்கள் பாட அறிவு மாத்திரமல்லாது ஆசிரியத்துவத்தின் திறன்களையும் மனப்பாங்குகளையும் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்படுபவர்.
- சமூகத்தின் எல்லா நிலையினருடனும் மனித நிலையில் உறவு கொள்பவர்.
- எதையும் ஆய்வுச் சிந்தனையூடே வெளிப்படுத்துபவர்.

இத்தகு பண்புகள் இன்றைய ஆசிரியர்களுக்கு பேராசிரியர் கற்றுத்தரும் ஆசிரியத்துவம் சார்ந்த அனுபவப் பாடமாகும்.

நிறைவாக, பேராசிரியர்.கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் எண்பதாவது அகவை காணும் இக்காலமதில் நூற்றாண்டு அகவை காணவும் காலம் உள்ளவரை தமிழ்ப் பேசும் கல்வியியற்றுறைக்கும், தமிழ்ப்பேசும் ஆசிரியர் சமூகத்திற்கும் நல்லதொரு மேய்ப்பனாக இருந்து வழிநடத்தத்தக்க ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் எந்நிதியும் தரும் செல்வச்சந்நிதியான் அருள்பாலிக்க வேண்டுமென பேராசிரியர் வழிவந்த மாணவர்கள் சார்பாக வேண்டி நிற்கின்றேன்.

*கட்டுரையாளர்:*
*ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி நிலையம்,புளியங்குளம், வவுனியா.*

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



## LLB (Hons) in Law

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்றல் முறை மற்றும் சூழல்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
- இலகு தவணைக் கட்டணம்
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது

Pearson | UNIVERSITY OF WOLVERHAMPTON

MADHU 0777 102131
SANCHU 0777 692318

INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS | ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again



## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## தீபாவளி விசேட துள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500/=~~ | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000/=~~ | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

## 15% - 50% வரை விலைக்கழிவு

15000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய சுவர் கடிகாரம் இலவசம்

லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

15000/= பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றிற்கு 5000/= பெறுமதியான சாறி ஒன்று இலவசம்



கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

## காலம்: 16.10.2018 - 06.11.2018 வரை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

**நல்லூர் பிரதேசசபை நலன்புரிசங்கம்**

நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களான திரு.குலசேகரம் திலகேந்திரன், திருமதி ஜெசிந்தா ஜீவகாந்தன், திரு.நகுலராசா இராஜன் ஆகியோரின் பிள்ளைகளான



செல்வன் திலகேந்திரன் ஹரிபிரியன் 182 புள்ளிகள்



செல்வன் ஜீவகாந்தன் ஸயிலாஷ் 175 புள்ளிகள்



செல்வி ஜஸ்மியா இராசன் 164 புள்ளிகள்

2018 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைச் செல்வங்களை மனமார பாராட்டி வாழ்த்துவதுடன் இறையாசியுடன் அவர்களின் கல்வி எதிர்காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- நலன்புரி சங்கம் - நல்லூர் பிரதேச சபை

---



# YOGIS

INSTITUTE OF BEAUTY THERAPY
HAIR DRESSING & HOME SCIENCE (pvt)Ltd

- பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.
- 2018.10.20th, 21st மற்றும் 24th திகதிகளில் காலை 10 மணி முதல் ஆரம்பம்.
- இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யக் கூடிய 5 கேக் வகைகள், 5 பேஸ்ரி வகைகள் (Pastries), 5 Sweets வகைகள்



வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்

077 716 4923
021 222 2796

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

## யா/ மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை

## 2018 இல் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



செ.பிருதுவி– 176



கே.சப்திகா– 175



தே.தனிஸ்ரன்– 170



சு. அக்ஷயா– 166



பா. பவித்திரன்– 165

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்**

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம், பெற்றோர்

(IN/60777)(13,17)

---

MOBILE NET MCS COMPUTER SERVICES

# BIT

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்



## கொழும்பு பல்கலைக்கழகத்தின்

வெளிவாரிப் பட்டப்படிப்பு

# விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.
- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் ஏனையோர் **FIT** A/L கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும்.
- இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்க முடியும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் Diploma in Information Technology (NVQ5)சான்றிதழ் வழங்கப்படும்.
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- மேலும் முதுமாணிக்கற்கைநெறியை கொழும்பு, மொரட்டுவ, பேரதெனிய மற்றும் பிரித்தானிய அமெரிக்க கனடிய பல்கலைக்கழகங்களில் வேலை செய்துகொண்டே தொடர முடியும்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் **BIT** கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- மேலும் ***BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு **Higher Diploma in Information Techonology** சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.

*அரசவங்கிகளில் வெளிநாடுகளிலும் **System Engineer, System Administrators (CCNA, MTA,MCSA, MCSE-USA** தகைமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.
* உயர் வேலைவாய்பிற்கான உத்தரவாதம்.
*முதலாம் ஆண்டு கற்கும் போதே Diplom in Ms office, Web Desighing, Hardware, Networking, Photoshop ,English , Java Programming உள்ளிட்ட 7க்கு மேற்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.
* 2000 ம் ஆண்டு முதல் நூற்றுக்கணக்கான தகவல் தொழில் நுட்ப பட்டதாரிகளை உருவாக்கி உள்ளநாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்

**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS IT CAMPUS, யாழ். பல்கலைக்கழகம் அருகில்**

**சிறந்த பெறுபேற்றுக்கான சிறப்பு விருதினை கொழும்பு பல்கலைக்கழத்திடமிருந்து விருதினை வென்ற நிறுவனம்**

# CIMA

Chartered Institute of Management Accountants



- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி.
- 16வயதிற்கு மேற்பட்ட எவரும் பயிலலாம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி
- 2008 ஆம் ஆண்டு யாழில் இக்கற்கை நெறியை தொடர்ச்சியாக சிறப்பாக நடாத்தி வரும் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனம். பரீட்சை மையம்.
- பல் நூற்றுக்கணக்கான CIMA UKதகைமையாளர்களை உருவாக்கி உயர் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்.
- சிறந்த பேறுபேற்றுக்கான விருதினை CIMA _UK நிறுவனத்திடமிருந்து வென்ற நிறுவனம்.
- Diploma in Accounting Package, Diploma in English, Diploma in Msoffice Totally Free

புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரத்திற்கும்
**Type<Course>Name> send to 772 395 895**

---

British BUSINESS COLLEGE
Where Students Come First

# விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

BBC பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் விஜயதசமியன்று (19.10.2018 வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிமுதல் ஏடுதொடக்கி வைக்கப்படும்

BBC Early Learning Schools

**சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய பயுற்றுவிப்பாளர்களினால்பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்**

விஜயதசமி அன்று புதிய அனுமதிகள்

# NO ADMISSION FEES
# NO MONTHLY FEES

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ **2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3 வரை | 3+ முதல் 4 வரை | 4+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |





❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்.
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : **British Business College**
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா விநாசித்தம்பி



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா விநாசித்தம்பி நேற்று (16.10.2018 ) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பியின் பாசமிகு மனைவியும், சத்தியா, சத்தியசீலன், சுமத்திரா, குகசீலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனந்தன், கவிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், யஸ்மிகா, திலாணி, சிந்துஜா, ஜெயாறா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**
**077 271 9666**

(CS/20628)(11,17)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி சில்வேவியா டானியல்



8 ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவியும், எமது நண்பனின் அன்புச் சகோதரியுமான

**செல்வி சில்வேவியா டானியல்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து துயருறுவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**உடன் பிறவாச் சகோதரர்கள் மற்றும் நண்பர்கள்.**
**8 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.**

(CS/20623)(11,17)




**HNB தங்க வரத்திடமிருந்து மூன்று மாதங்கள் முழுதும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலிற்கும் புதுமை தந்திடும் பல பரிசுகள்!**



பெறுமதியானதோர் குடை | பெறுமதியானதோர் "அலாரம்" கடிகாரம் | சோலார் லெண்டர்ன் | அழகியதோர் ஆபரணப்பை | பெறுமதியானதோர் தண்ணீர் போத்தல் | பென்சில் பை | கீ டெக்

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்தினை நாடுங்கள் அல்லது 2 462 462 ற்கு அழையுங்கள்.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே. ஆகக் குறைந்த கடன்தொகை ரூ.10,000/- ஆக இருத்தல் வேண்டும்.

HNB | அடகு சேவை

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

பிச் ரேட்டிங் AA-(lka)
ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி.
Hatton National Bank PLC - PQ 82

---

வலி, வேதனைகளுக்கான சிறந்த நிவாரணி
இலங்கையின் தரம் 1
கொஸ்கந்தவல
**ஜீவக வாத தைலம்®**

- இடுப்பு வலி
- மூட்டு வலி
- முழங்கால் வலி
- தசைப் பிடிப்பு
- ஆத்தரைடீஸ்
- நரம்பு வலி
- சுளுக்குப் பிடிப்பு



உள்ளிட்ட நோய்களுக்கு நிவாரணி அளிக்கிறது...!

**Jeewaka Herbal Products (Pvt) Ltd**
**0777 322 574**

---

## கார் விற்பனைக்கு

**NP CAS XXXX இலக்கமுடைய**
**2016 Suzuki Celer 10 Model**
தனி நபரின் பாவனையிலுள்ள கார் உடன் விற்பனைக்கு.

**077 416 9026**

---

## விற்பனையாளர்/ தொழில்நுட்பவியலாளர் தேவை

கொழும்பில் உள்ள டிஷ் அன்டெனா மற்றும் கேபில் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் கடைக்கு மேற்படி பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள் மற்றும் டிஸ் அன்டெனா பொருத்துநர்கள் தேவை. அனுபவத்துக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும். தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்யலாம்.


**077 771 0785**

(cs. 14684) (13.17)

---

## இன்று முதல்

A Cinema Entertainments (Pvt) Ltd Release



**வடக்கு, கிழக்கு**

| | |
|---|---|
| Majestic Jaffna | 10.30/1.30/4.15/7.00 pm |
| Raja Jaffna | 10.30/2.30/6.30 |
| Saru Cinema Point Pedro | 10.30/2.30/6.30 |
| Vijaya Batticaloa | 10.30/2.30/6.30 |
| Vasanthi Vavunia | 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu | 10.30/2.30/6.30 |
| SARASWATHY Trinco | 10.30/2.30/6.30 |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## பெயர் மாற்றம்

உரும்பிராய் மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **ராமேஸ்வரன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **ரமேஸ்வரன்** எனப் பெயர் மாற்றி இனிவரும் காலங்களில் ச்கல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**ரமேஸ்வரன்.**

## வேலையாள்கள் தேவை

01) அலுமினிய பிற்றிங் வேலை தெரிந்தவர்கள்.


02) வயரிங் வேலை தெரிந்தவர்கள்.

**தொடர்பு - 077 813 9761**

**(திங்கள் முதல் சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.)**

## மரண அறிவித்தல்கள்

### சாமுவேல் தேவதாஸ்



பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், இல.5/3 ஈச்சமோட்டை முதலாம் ஒழுங்கை சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட சாமுவேல் தேவதாஸ் 14.10.2018 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,றோசம்மாவின் அன்புக் கணவரும், நேசராஜா (பிரான்ஸ்), நேசமலர், சதீஸ், செல்வா (பிரான்ஸ்), ஜெராட் (பிரான்ஸ்), ஜெசி, ஜெபதர்ஷன் (சூட்டி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தா (பிரான்ஸ்), இராஜன் (தொலைபேசி இயக்குநர் - யாழ்.போதனா வைத்திய சாலை), உதயா, பாஸ்கலா (பிரான்ஸ்), துஸ்யந்தி (பிரான்ஸ்), அச்சுனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான பரிமளம், சிவநாயகம் (பேரின்பம்), யோகமலர், அழகரட்ணம் (மில்றோய்) மற்றும் அலிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான யோசப், சிவக் கொழுந்து, செல்லத்துரை, சதாசிவம் மற்றும் நல்லம்மா (கிறேஸ் - பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், நத்தாஷா, நிதிஷா, நிருத்திகா கிறோண், கிறீபன், டியனி, டிசாரன், செரினா, அக்ஷயா, துஷிகாந், அபிஷேக், அகனியா, அஸ்வின், தானியா, வஷ்னியா, ஆரோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.10.2018) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/20609)(11.17) **தகவல் :- குடும்பத்தினர்.**

**077 032 4203, 021 222 9003, 077 139 8766, 076 343 4691**

---

தோற்றம் 17 . 02 . 1987



மறைவு 15 . 10 . 2018

### வசந்தகுமார் ரஜீவ்குமார்

(Refrigerator Operater - பொதுவைத்தியசாலை - கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தகுமார் ரஜீவ்குமார் (Refrigerator Operater - பொதுவைத்தியசாலை - கிளிநொச்சி) 15.10.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி வசந்தகுமார் - அற்புதமலர் தம்பதிகளின் அன்பு புதல்வரும், தமிழினியின் அன்புக் கணவரும், நிதுசனின் அன்புத் தந்தையும், புனிதராசா - சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரீதரன் (ஆசிரியர் - யாழ்/ மயிலிட்டி மகாவித்தியாலயம்), ஹேமகுமார் (கட்டட ஒப்பந்தகாரர் - திருகோணமலை), ஸ்ரீகுமார் (சமுதாய சீர்திருத்தப் பரிசோதகர் நீதிமன்றம் - மல்லாகம்), அமுதகுமார் (வைத்தியர் பொதுவைத்தியசாலை - வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகன் (பிரான்ஸ்), ஸ்ரீகாந், டர்சன், கௌரி, இந்துமதி, நிவேதிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனோஜா, அபிஷிகா, அபிஷேக், தர்மிகன், ஹம்சா, வினோதா, அனுஸ்ரா, நதுமிதன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அம்பாள்குளம் கிளிநொச்சியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் ஆனந்தநகர் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**


(AKN/5697(11,17)

**077 645 3009, 077 621 6086**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 03 . 03 . 1937



விண்ணில் 29 . 09 . 2017

### அமரர் இராசலிங்கம் நாகராஜா

ஈராறு மாதங்கள் ஆனாலும் – எம் விழியோர ஈரம் இன்னும் காயவில்லை
நடந்தது எல்லாம் கனவாகிப் போய் உங்கள் திருமுகம் கண்முன் தோன்றாதோ ?
பல பணிகள் புரிந்து பார்புகழ இவ்வுலகில் வாழ்ந்தீர்கள் – இன்று பாசமான மனைவியை
பாதியிலே பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ அப்பா ?
நீங்கள் இல்லாமல் உங்கள் திருமுகம் பாராமல் தவிக்கும் பிள்ளைகளை எப்போது
காணவருவீர்கள் எம் அப்பா ?

வீரபத்திரர் வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

**ஈர விழிகளுடன்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 11 . 1930



மறைவு 15 . 10 . 2018

### திருமதி பொன்மணி சண்முகராஜன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், 82/22 செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி சண்முகராஜன் (ஓய்வுபெற்ற ஆசிரியை - சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை) 15.10.2018 திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகராஜனின் அன்பு மனைவியும், திருமாவளவனின் (அஹிம்சா - சுவிஸ்) பாசமிகு தாயாரும், மதிச்செல்வியின் (சுவிஸ்) அன்பு மாமியும், ஆகாஷ், அக்ஷயா, அவுனேஸ் ஆகியோரின் பாசமான பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - மாரிமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, நகுலாம்பிகை, திருச்செல்வம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தங்கலெட்சுமி, சிந்தாமணி, மங்கையர்க்கரசி, கிருஷ்ணபாலா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் பராசக்தி (லண்டன்) சகுந்தலாதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், சண்முகம், சொக்கலிங்கம், சபாரெட்ணம், தம்பையா மற்றும் குமாரசாமி சிவகாமன் (ஓய்வுபெற்ற ஆசிரியை), ரூபாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாப்பா, மாலா (ஓய்வு-பெற்ற ஆசிரியர்கள்), சத்தி, ரஜனா, ஜெயந்தா, ஜீவா, சாந்தன், தீபன், றஞ்சனி, தாசன், தயாளன், சகிலா, சுமங்கலா, அனுஷலா, அகிலன், கபிலன், கவிதா, அமுதா, பவா செல்வன், காலஞ்சென்றவர்களான ஜெயா,ஸ்ரீ, குமரன், ராகினி ஆகியோரின் பாசமான பெரிய, சிறிய தாயாரும், சுகி, சுகிர்தா, றஜி, மயூரன், ரூபன், கீதா ஜாயினி ஆகியோரின் அன்பு அத்தையும், மதுசூதனன், வசந்தாதேவி ஆகியோரின் அன்பான சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் நல்லூர் செட்டித்தெரு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**82/22, செட்டித்தெரு,**
**நல்லூர்.**

தகவல்
**மகன் திருமாவளவன்**
**குடும்பம்**

**077 521 9310**

ராசி அதிர்ஷ்டம்

திகதி 16.10.2018 | வெற்றி வாரம் 2383 | வர்ணம் நீலம்

சிம்மம்

வெற்றி இலக்கங்கள் 10 30 37 43

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,469,728/=

2018.10.17 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 355

வர்ணம் : இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 2018.10.16

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூ. 98,342,608/-

D 10 15 65 68

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 405

வர்ணம் : நீலம்

சீட்டிழுப்பு திகதி: 2018.10.16

இன்றைய ஜக்பொட் பரிசு

ரூ. 60,647,385/-

வெற்றி இலக்கங்கள் 07 19 50 54 Q

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## பெயர் மாற்றம்

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த தேசிய அடையாளஅட்டை இலக்கம் 496560221V கொண்ட எனது பிறப்புச்சான்றிதழில் உள்ள **நாகேந்திரம்** என்னும் பெயரை 17.10.2018 திகதி இன்று முதல் **நாகேஸ்வரி** என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**17.10.2018** **நாகேஸ்வரி.**

## வீடு வாடகைக்குத் தேவை

காரைநகர் கிழவன் காடு கலாமன்ற யாழ்க்கிளையின் கலை வகுப்புகள் நடாத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவையாக உள்ளது.

**தொடர்பு - 077 640 8512**

(பதிவாளர்)

## தேவை

யாழ். நகருக்கு அருகில் இயங்கிவரும் பல் பொருள் விற்பனை நிலையத்திற்கு (Food City) விற்பனையில் அனுபவமுள்ள அல்லது அனுபவமற்ற நற்பண்புள்ள பெண் பணியாளர் உடன் தேவை.

**தொடர்பு - 076 985 9916**

## வவுனியா வடக்கு பிரதேச சபை

**2019.01.01 முதல் 2019.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான**

### கேள்வி அறிவித்தல் - 2019

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2018.10.17 தொடக்கம் 2018.11.07 ம் திகதி வரை

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2018.11.07 பிற்பகல் 02.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2018.11.07 பிற்பகல் 02.30 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ.இ | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கனகாரயன்குளம் கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 70,000.00 |
| 2. | கனகாரயன்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 42,000.00 |
| 3. | கனகாரயன்குளம் மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 130,000.00 |
| 4. | புளியங்குளம் கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 5. | புளியங்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 40,000.00 |
| 6. | புளியங்குளம் மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 7. | நெடுங்கேணி கோழிக்கடை இல 01 | 2,000.00 | 5,000.00 | 350,000.00 |
| 8. | நெடுங்கேணி கோழிக்கடை இல 02 | 2,000.00 | 5,000.00 | 350,000.00 |
| 9. | நெடுங்கேணி மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 88,000.00 |
| 10. | நெடுங்கேணி மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 150,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா"** என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராமஅலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் **"தவறுனராகக்"** கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பங்குத் தொகையை **2018.11.07** ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை **2019.07.31** இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. கேள்வித்தொகையிலும் குறைந்தகேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
7. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
8. மரக்கறிச்சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
9. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்
10. கடை, சந்தைகளின் துாய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
11. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திபொருட்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.
12. மரக்கறிச் சந்தைகள் குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்.

**திரு. சபாரத்தினம் தணிகாசலம்**
**தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை**
**நெடுங்கேணி.**

(விண்ணப்பபடிவங்களை 2018.10.17 தொடக்கம் 2018.11.07 ம் திகதிவரை அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரையும் 2018.11.07 ம் திகதியானது பிற்பகல் 1.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.)

## உலக வளநல தினத்தை முன்னிட்டு இலவச கருத்தரங்கு 2018

**தற்போது வவுனியாவைச் சுற்றி நடைபெறும் அசாதாரண நிகழ்வுகள் பற்றியும் அதனுடைய தாக்கம் பற்றியும் விழிப்புணர்வு உண்டாக்கும் கருத்தரங்கு.**

**தலைமை உரை :**

**பிரதேச செயலாளர் - வவுனியா**

**மன நல வைத்திய கலாநிதிகளும் மற்றும் மன நல ஆலோசகர்களும் பேச உள்ளார்கள்.**

**இடம் - கலாசார மண்டபம் வவுனியா**

**காலம் - நாளை 18.10.2018 (வியாழக் கிழமை)**

**நேரம் - காலை 9.30 தொடக்கம் 12 மணி வரை**

**இந் நிகழ்வில் கலந்து கொள்ள தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பிரதான அனுசரணை :**

**ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபை இறம்பைக்குளம் வவுனியா.**

T. P : 077 662 7545

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 24 . 02 . 1987



மறைவு 15 . 09 . 2018

கடந்த 15.09.2018 சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

**இரத்தினசிங்கம் பிரசாத்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.10.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஐயனார் கோயிலடி, மல்லாகம்.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**செல்வி டானியல் சில்வேவியா**

**(கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீட இறுதி வருட மாணவி)**

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி டானியல் சில்வேவியா 15.10.2018 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் டானியல் - மேரிறோஸ் தம்பதிகளின் அன்பு மகளும், எலன் யோமினி சதீஸ்பாவு, குயின்மேரி, பிரதீஸ்பாவு, டிறோக் நிர்மலபாவு சிந்துக்குமார், வுளோறாமேரி, டெனிஸ் ஜெகான் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றஜனி, யூட்ஸ்குமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மத்தி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8ஆம் வட்டாரம்,**
**நெடுந்தீவு.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**டானியல் சிந்துகுமார் - 077 541 4382**

## யாழ். விழிப்புலனற்றோர் சங்க சீட்டிழுப்பு முடிவுகள்

அன்பான உறவுகளே யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்சவகால அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு 15.10.2018 அன்று அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் இலங்கை வங்கியின் நல்லூர்க்கிளை முகாமையாளர் தங்கராஜா. சுதாகரன் விருந்தினராகக் கலந்து கொண்டார்.
வெற்றிபெற்ற அதிர்ஷ்ட இலக்கங்கள் பின்வருமாறு.

முதலாம் பரிசு - 64585. இரண்டாம் பரிசு - 10024.
மூன்றாம் பரிசு - 19165
ஆறுதல் பரிசுகள் - 01) 48417. 02) 48837 . 03) 23429. 04) 71844. 05) 54356

வெற்றி பெற்றோர் தங்களிடமுள்ள அதிர்ஷ்ட இலாபச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு 15.11.2018 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் தங்களது அதிஷ்ட இலாபச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
கடந்த வருடங்களிலும் இவ்வருடமும் எமது அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களைப் பெற்று எமக்கு நிதிப்பங்களிப்பை வழங்கிய அனைத்துநண்பர்களுக்கும் அனுசரணையாளர்களுக்கும் எமது நன்றிகளை உரித்தாக்குகின்றோம். செயலாளர்.

நாளை

## இலவச கருத்தரங்கு

வெளிநாடு ஒன்றில் உங்கள் உயர்கல்வி ஒன்றினைத் தொடர இருக்கிறீர்களா? STUDY ABROAD

திகதி : 18/10/2018 (நாளை)
இடம் : DMI COMPUTER EDUCATION
NO.113 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் : காலை 9.30 மணி
மற்றும் மாலை 3.00 மணி
Tel.: 021-222 4403, 0777 17 35 17



விசா நடைமுறைகள், பகுதிநேரவேலைவாய்ப்புக்கள் தொடர்பான விளக்கங்கள் . வதிவுரிமைக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் பல்கலைக்கழக கட்டணங்கள் பற்றிய உங்கள் சந்தேகத்திற்கு வெளிநாட்டு பல்கலைக்கழக பிரதிநிதிகள் மூலம் நேரடிபதில்களை பெற்றுக் கொள்ள முடியும்.

DMI COMPUTER EDUCATION

AUSTRALIA, NEW ZEALAND, CANADA, USA, UK

DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403

## மரண அறிவித்தல்

### Dr. பூலோகசுந்தரம் கயிலாயநாதன் DAMS (Cey)

(சஹஸ்ராபிஷேக வைத்தியசூரி தர்மகர்த்தாவும் நிர்வாகியும் சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் ஆலயம்)



யாழ். சுழிபுரம், சித்தர் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr. பூலோகசுந்தரம் கயிலாயநாதன் கடந்த (15.10.2018) திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. தம்பிப்பிள்ளை பூலோகசுந்தரம் - தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் கந்தையா (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), மகேஸ்வரி - கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கனகாம்பிகை (ADP) யின் ஆருயிர்க் கணவரும் Dr. திருமதி தவத்துரை மனோரஞ்சிதம் (முன்னாள் விரிவுரையாளர் ஆயுள்வேத கல்லூரி. முன்னாள் சிரேஷ்ட வைத்திய உத்தியோகத்தர் - பொரளை. ஆயுள்வேத போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற பூலோகசுந்தரம் குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் சண்முகநாதன்(தவம் JP), இராமநாதன் பத்மநாதன், நாகநாதன், வைத்தியநாதன், உலகநாதன் (ஓய்வுபெற்ற நீதவான் JP - UK) அன்புச் சகோதரனும் பிரியதர்சினி (BA பொருளியல் (Hon) கனடா), சுகந்தி (HNDA CIMA UK), பூலோகசுந்தரம் HNDA, MBA, UK), நிரஞ்சனி (BA (Hon), MA, பொருளியல் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாளன் (முகாமையாளர் - கனடா), தனேஷ்குமார் (பொறியியலாளர் - UK), அரிசூதனா (கணக்காளர் - UK), செந்தூரன் (பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வர்ஷனா, கிஷானா, கபிஷனா, கிரிஷாந், கோஷிகா, பிரணாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சேனாதிராஜா, தவத்துரை (பொறியியலாளர்), Dr. திருமதி ஏகாம்பரமூர்த்தி பத்மராணி, திருமதி மனோகரன் ஜெயராணி (கணக்காளர் - UK), திருமதி தனராஜ் ஞானாம்பிகை, திருமதி முருகதாசன் இந்திராணி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்தர் வளவு, சுழிபுரம்.
077 628 4439, 077 545 8938

தகவல்:
குடும்பத்தினர்.

## உண்மைகளை...

டுள்ளார்கள் என்பதை அரசு ஏற்றுக் கொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்புக்கூறலை அரசு செய்ய வேண்டும். சில முறைப்பாடுகள் சம்பந்தமாக சில நடவடிக்கை எடுத்துள்ளோம். அதைப் பகிரங்கமாகச் சொல்ல முடியாது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் இழப்பீடு, வாழ்வாதார உதவி எதுவும் காணாமல் ஆக்கப்பட்டவருக்கு ஈடாகாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தின் தலைவர் அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் தொடர்பாக விளக்கமளித்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின் தேவைகள் தொடர்பாக அறிந்து கொள்ளல் என்பவற்றுக்காக கொழும்பில் நேற்று மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே சாலிய பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

நாட்டில் காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெறவில்லை, அவ்வாறான சம்பவங்கள் நடக்கவில்லை என்று கூறுபவர்களைப் புறக்கணிக்க வேண்டும். நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெற்றுள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்கொண்டுள்ள துன்பத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்வாறான சம்பவங்கள் இனியும் நிகழாது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இழப்பீடு வழங்கப்படுவதால் அவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டு நீதியைக் கோரக் கூடாது என்பது பொருளல்ல. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மையை அறிந்து கொள்ளும் உரிமை இழப்பீடு வழங்குவததன் ஊடாக ஒருபோதும் மறுக்கப்படாது. உண்மையைத் தெரிந்து கொள்ளல், நீதியைப் பெற்றுக் கொடுத்தல், இழப்பீடு வழங்குதல் என்பன போன்ற எந்த நடவடிக்கையாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனுபவித்த துன்பத்தை நிவர்த்தி செய்ய முடியாது.

இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் நடக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அதன்மூலம் இழப்பீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

அரசால் அமைக்கப்படும் ஆணைக்குழுக்கள் மீது பரவலாக நம்பிக்கையீனம் காணப்படுகின்றது. குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் மீது வடக்கில் நம்பிக்கையற்ற நிலைமை வெகுவாகக் காணப்படுகின்றது. இந்தப் பணியகம் அரசால் அமைக்கப்பட்டுள்ளபோதும் சுயாதீன ஆணைக்குழுவாகவே செயற்படுகின்றோம்.

எதிர்வரும் மாதங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்காக 12 பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளன. 5 பிரதேச அலுவலகங்கள் வடக்கு மாகாணத்தின் முக்கிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

அரசால் நிறைவேற்றப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கை அரச தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைச் செயற்படுத்துவதன் ஊடாக மட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் திருப்தியடைய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்களின் உறவினர்கள் தொடர்பான உண்மை நிலைமை அறிந்து கொள்ளும் உரிமையை நாம் உறுதி செய்கின்றோம். அவர்களின் துன்பத்தை எதைக் கொண்டும் ஈடு செய்ய முடியாது என்பதையும் உணர்ந்துள்ளோம். என்றார். (ற-61)

## கூட்டமைப்பின்...

மனோ கணேசன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கைதிகள் சம்பந்தமான விசாரணைகள் சரியாக நடத்தப்பட வேண்டும், அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

கைதிகளுக்கு கட்டளை வழங்கியவர்கள் வெளியே உள்ளனர், அப்பாவிகள் சிறைச்சாலைகளில் உள்ளனர் என்றும் அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

## வீடு விற்பனைக்கு

ரெம்பிள் றோட் லேன் சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம் 2 பரப்புக்காணி
வீட்டுடன் விற்பனைக்குண்டு.
**தரகர் தேவையில்லை.**
**தொடர்பு - 071 8565 375 அல்லது 077 717 2039**

## தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இலத்திரனியல் காட்சி அறைக்கு முன் அனுபவம் உள்ள விற்பனை முகாமையாளர், உதவி முகாமையாளர், விற்பனையாளர்கள் மற்றும் கணினி அனுபவம் உடைய ஆண் / பெண் இருபாலாரும் தேவை. விருப்பம் உள்ளவர்கள் 17.10.2018 நேரில் சமூகம் தரவும்.
இல. 39 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
(BOC முன்பாக)
070 3043 636, 070 304 3633, 021 222 3530

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு.பூதத்தம்பி யோகநாதன்

( Director of Customs - சுங்கப்பணிப்பாளர் )

அன்னை மடியில் : 14.10.1953
இறைவனடியில் : 17.10.2011

அண்ணா ! எங்கிருந்து நீ பாடுகின்றாயோ
இன்ப கீதமே பாடுகின்றாயோ
இந்த நிலை என்று மாறுமோ அண்ணா
உனை காணும் இன்ப நாளுமே வந்து சேருமோ
அண்ணா உன்னையும் மறப்பதுண்டோ மறந்தால்
உள்ளத்தில் அமைதி உண்டோ
அண்ணா உன்னையும் மறப்பதுண்டோ
அன்னாரின் பிரிவால் துயருறும் தம்பிமார்.
பூ.மகேந்திரநாதன் - கொழும்பு - 03
பூ.இரகுநாதன் - கொழும்பு - 06.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 869
சீட்டிழுப்பு திகதி ▶ 2018.10.15 திங்கட்கிழமை
P 08 19 44 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,355,288/-
பச்சை நிற டிக்கட்டுகள் 2018.10.18ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண மாவட்ட செயலக மனிதவலு
வேலைவாய்ப்பு பிரிவில் மனிதவள
அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும்
திரு .க. கருணாகரன் அவர்களின் அன்புத்தந்தையார்

### வேலுப்பிள்ளை கந்தப்பு

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண மாவட்டம்.**

## முதலமைச்சரின்...

9.30மணிக்கு நல்லூர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. அதில் உள்ளதாவது:

தமிழ் மக்களின் தற்போதைய பிரதிநிதித்துவ அரசியலானது மக்கள் பங்களிப்புடன் கூடிய ஒரு அரசியல் பயணமாக மாற்றமடைய வேண்டிய கால கட்டத்திலுள்ளது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான வழித்தடம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும், அதில் தமிழ் மக்கள் பேரவையின் வகிபாகம் தொடர்பிலும் சில தீர்மானங்களை மேற்கொள்ளும் மாபெரும் மக்கள் ஒன்றுகூடல் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சிறப்பு உரையாற்றவுள்ளார். தனது எதிர்கால அரசியல் நிலைப்பாடு தொடர்பிலும் தமிழ் மக்களுக்கு அறிவிக்கவுள்ளார்.

இந்த ஒன்று கூடலுக்கு அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொதுமக்கள், பொது அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் கல்விச் சமுகத்தினர் மற்றும் இளையோர் கலந்துகொள்ள வேண்டும். என்றுள்ளது. (ற-5)

## காணிகளை...

என்றும், அதற்காக இரண்டு மாகாணங்களின் ஆளுநர்கள் தலைமையில் குழுவும் நியமிக்கப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை இடம் பெற்றது. முப்படையினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலி. வடக்கில், கட்டுவன் அச்சுவேலிப் பாதையைத் திறப்பதோடு, குரும்பசிட்டியில் எஞ்சியுள்ள காணிகளையும், பலாலி வீதியின் கிழக்குத் திசையில் உள்ள காணிகளையும் விடுவிக்க வேண்டும். மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் விடுவிக்கப்பட்டபோதும் மிக நெருக்கமாகவே இராணுவ வேலிகள் உள்ளன. அவற்றை மேலும் பின்நகர்த்த வேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேலும் 5 பாடசாலைகள் உள்ளன. அவற்றையும் விடுவிக்க வேண்டும், என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த இராணுவக் கட்டளைத் தளபதி ஹெட்டியாராச்சி, காணி விடுவிப்புத் தொடர்பில் ஆராயப்படுகின்றது. பாடசாலைகள் அனைத்தும் இந்த ஆண்டுக்குள் விடுவிக்கப்படவேண்டும் என்று அரச தலைவரும் தெரிவித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

வடமராட்சியில் 7 இராணுவ முகாம்கள் உள்ள நிலையில் அதில் 4 பெரிய முகாம்களுக்காகத் தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. தனியாருக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அவை விடுவிப்பதற்கு தாமதம் தேவையில்லை. அதில் உள்ள அரச காணியை மட்டும் வைத்திருந்தால் முகாமின் அளவு சிறிதாகுமே அன்றி உடனடியாக விலக வேண்டிய நிலமை இல்லை. தனியார் காணிகள் அனைத்தையும் உடன் விடுவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள தனியார் காணிகளை வழங்குவதில் அதிக நெருக்கடி இருக்காது. அந்தப் பகுதிகளில் பல அரச காணிகள் உண்டு. ஆனால் படை முகாம்களை இடம்மாற்றுவதற்காக அதிக செலவு ஏற்படுகின்றது. அதற்கான நிதி கிடைக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி கூறியுள்ளார். அடுத்த ஆண்டும் பாதுகாப்பு அமைச்சுக்குத் தானே அதிக நிதி ஒதுக்கியுள்ளனர். அந்த நிதியில் இதற்கும் பெற்றுக்கொண்டு நிலத்தை விடுவிக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பிரதேச சபையின் காணியையும் மற்றுமோர் இடத்தில் மக்கள் குடியிருப்பின் நடுவே உள்ள இராணுவ முகாமையும் அகற்ற வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை விடுத்தார்.

அரியாலைப் பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஓர் தாயாரின் 6 பரப்புக்காணி உள்ளது. அதனை விடுவிக்குமாறு அவர் நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கின்றார். அந்த 6 பரப்புக்காணி தொடர்பிலும் கரிசனை கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத்தினர் காணிகள் விடுவிப்பதற்கான சாதகமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

நெடுந்தீவு, வேலணை, மண்கும்பான் பகுதிகளில் கடற்படையினர் காணிகளை பிடித்து வைத்திருப்பதனால் அவற்றை விடுவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்தார். காரைநகரில் மட்டும் 8 இடங்களில் கடற்படையினர் கையப்படுத்தி வைத்துள்ளனர். காரைநகர் இந்துக் கல்லூரியின் 8 பரப்புக் காணி உள்பட அந்தப் பகுதிகளையும் மக்கள் பயன்பாட்டிற்கு விடுவிக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கைகளுக்கு கடற்படையினர் பதில் வழங்கவில்லை. மேலும், கடற்படையினர் தமது கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு காணியையும் விடுவிப்பதற்கு கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இதேவேளை நேற்றைய கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இராணுவத்தினர் அதிகமான நிலங்களை விடுத்துள்ளார்கள். கடற்படையினர் விடுவித்த நிலங்கள் மிகக் குறைவு. தரவுகளை கொடுத்துள்ளோம். காணிகளை எப்போது எவ்வளவு விடுவிப்பீர்கள் என்ற கால அட்டவணையைத் தருமாறு கோரியுள்ளோம். இராணுவத்தினர் காணிகளை விடுவித்தாலும் இன்னமும் பல ஏக்கர் காணிகள் விடுவிக்க வேண்டிய நிலை உள்ளது. அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு ஏற்கனவே முடிவெடுத்துள்ளதாக அவர்கள் சொல்கிறார்கள்.

புதிய பொலிஸ் நிலையங்கள் அமைப்பது பற்றிக் கதைத்தார்கள். அனலைதீவுப் பகுதியில் பொலிஸாரின் பிரசன்னம் இல்லை. நீதிமன்றத்தால் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டவர்கள் அங்கு போய் ஒளிந்து கொள்ளும் நிலை காணப்படுகிறது. பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கு காணிகள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். சில பொலிஸ் நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் 2020, 2022 ஆம் ஆண்டுகளில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகள் தொடர்பில் எதிர்வரும் 22ஆம் திகதி ஆளுநர் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது. நாம் கேட்ட கேள்விகளுக்கான பதில்கள் மற்றும் நேர அட்டவனைகளை 22ஆம் திகதி கூட்டத்துக்கு கொண்டு வருவதாகக் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் 8ஆம் திகதி மீண்டும் அரச தலைவர் செயலணி கூடுகின்ற போது முனேற்றங்களை ஆராய முடியும் - என்றார். (5,7,105)

## விக்கியின்...

ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தது. எந்த நிபந்தனையும் இல்லாமல் கடந்த 3 ஆண்டுகளாக வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள். இந்த ஆதரவு உங்களையும், உங்கள் கட்சிகளையும் பாதுகாப்பதற்காகவா?. மக்களுக்காக உங்களை அர்பணித்துச் செயற்படப் போகின்றீர்களா? என்ற கேள்வியை மக்கள் கூட்டமைப்பினரிடத்தில் கேட்கவேண்டும்.

மக்கள் விழிப்படையாதவரை ஏமாற்றும் ஒரு கூட்டம் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டே இருக்கும். எமது கிராமங்கள் அபிவிருத்தி அடைய வேண்டுமாக இருந்தால், அரசுடன் பேரம் பேசாது எதையும் செய்ய முடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த 16 ஆண்டுகளாக மக்களைப் புறந்தள்ளிவிட்டு சுயநலமாகச் சென்றுகொண்டிருக்கின்றனர். அடுத்து என்ன தெரிவு என்று மக்கள் கேட்கலாம். மாற்றுத் தெரிவொன்று உள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் அவரது கரங்களை பலப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவர் எமது மக்களின் தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காவும் உறுதியாக குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர். அவரது கரங்களைப் பலப்படுத்தி அடுத்த முக்கிய மாற்று அரசியல் அணியொன்றை உருவாக்குவோம்.

சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் அடிமைகளாக அல்லது அரசுக்கு முண்டு கொடுக்கும் ஆள்களாகப் போகின்றனர் என்பதற்காக நாம் இதில் இருந்து ஒதுங்க முடியாது. தமிழ் மக்களுக்கு மாற்று அரசியல் தலைமையொன்று தேவை. அதை நாம் வெகு விரைவில் உங்களது ஒத்துழைப்போடு உருவாக்குவோம். அதற்கான வேலைகளை நாம் செய்து கொண்டிருக்கின்றோம் - என்றார். (ற-5,110)

## ஆட்சேபனைகளின்...

களை கடந்த தவணையில் முன்வைத்திருந்தார். அமைச்சர்களான திருமதி அனந்தி சசிதரன் மற்றும் க.சிவநேசனின் சட்டத்தரணிகள் தமது ஆட்சேபனைகளை மன்றில் முன்வைத்தனர்.

அவர்களின் ஆட்சேபனைகளுக்கான பதில் வாதத்தை டெனீஸ்வரனின் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ முன்வைத்தார். இதன் பின்னர் முதலமைச்சரின் சட்டத்தரணி மீண்டும் தனது வாதத்தை முன்வைத்ததுடன் எழுத்துமூலசமர்பணத்துக்கும் கோரியுள்ளார். எதிர்வரும் 7ஆம் திகதிக்கு இடையில் இரு தரப்பினரையும் எழுத்துமூல சமர்பணத்தை முன்வைக்குமாறு நீதிமன்று பணித்துள்ளது. இந்த வழக்கில் எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபனைகள் மீதான கட்டளையை டிசெம்பர் 10ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என்று நீதியரசர்கள் தெரிவித்தனர். (ற-5)

## போத்தலெறிந்து...

துன்னாலை, முள்ளிச்சந்தியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் சாரதி ஆசனத்துக்கு முன் பக்கம் உள்ள கண்ணாடிகள் சேதமடைந்தன. சம்பவத்தில் சாரதிக்கோ ஏனைய பயணிகளுக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. (ற-5,173)

## அரசியல்...

வழங்குவார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் அரச தலைவருடனான பேச்சில் முடிவு கிடைக்குமா என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கும் நிலையில் கூட்டமைப்பின் தலைவர் தீர்வு கிடைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது

அரச தலைவருடன் பேச்சு நடத்திய போது, அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு இன்றைய கூட்டத்தில் ஒரு தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளித்தார். கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் அரச தலைவரைச் சந்தித்த போது, இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக நீதியமைச்சர் தலதா அத்துகோரளவுடன் கலந்துரையாடுவதாகவும், அதன் பின்னர் ஒரு தீர்வை வழங்குவதாகவும், அரச தலைவர் கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துடன் அரச தலைவருக்கு உடன்பாடு உள்ளது. தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான தமது கொள்கையை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கூறியுள்ளது. அந்த வாக்குறுதிகளை விட, அரச தலைவர் குறிப்பிட்ட நாளில் தீர்வை வழங்குவதாகக் கூறியுள்ளார். சாதகமான முடிவுகளை நாங்கள் எதிர் பார்க்க முடியும். என்று கூறியுள்ளார். (ற-5)

## பொருளாதாரத்தை...

அலுவலகத்தில் தேசிய பொருளாதார சபை கூடியபோதே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பன்னாட்டுச் சந்தையில் டொலரின் பெறுமதி அதிகரித்தன் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்குவதற்காக இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியை தற்காலிகமாக மட்டுப்படுத்தி உள்நாட்டிலேயே அவற்றின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகத் தேசிய பொருளாதார சபையில் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது இலங்கையில் இறக்குமதி செய்யும் பொருள்களில் அத்தியாவசிய பொருள்கள் அல்லாத பொருள்கள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளை இற்றைப்படுத்தி, சுற்றாடல் ரீதியிலும் தேசிய கைத்தொழிலுக்கும் தாக்கம் செலுத்தும் பொலித்தீன் இறக்குமதியை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்கள் அல்லாத பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் இறக்குமதிப் பொருள்களுக்கு உரியவாறு சுங்க வரியை அறவிடுவதன் ஊடாகவும் நாட்டின் விற்பனை மீதியின் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என்று அரச தலைவர் மைத்திரி தேசிய பொருளாதார சபையில் தெரிவித்தார்.

சீனி இறக்குமதியாளர்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், தற்போதைய கட்டுப்பாட்டு விலைக்கு சீனியை வழங்குவதால் அதிகளவு இழப்பு ஏற்படுகின்றது என்றும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-5)

## டெனிஸ்...

கட்டளை வழங்கப்பட்டது. டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்றும், அவர் அமைச்சராகத் தொடர்வதால் அமைச்சரவையில் 6 அமைச்சர்கள் தற்போது உள்ளார்கள் எனவும் அரசமைப்புக்கு அமைவாக அதைச் சீர் செய்யுங்கள் என்றும் கட்டளையில் கூறப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் தரப்பு ஆட்சேபனை தாக்கல் செய்யப் போவதாக பல தவணைகளில் நீதிமன்றில் தெரிவித்திருந்தது. கடந்த அமர்வில், இறுதித் திகதியை நீதிமன்றம் வழங்கியிருந்தது. இந்த நிலையில் முதலமைச்சர் தரப்புச் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளனர்.

டெனீஸ்வரனின் மூலவழக்கும் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், இந்த வழக்கு மீதான விசாரணை பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இடம்பெறும் என்று திகதியிட்டனர். அதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி நள்ளிரவுடன் வடக்கு மாகாணசபை கலையவுள்ளது. (ற-5)

## மின்சாரம்...

களின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் சுந்தரபுரம் மணிபுரம் பகுதியில் டிப்பரிலிருந்து மணல் இறக்கியுள்ளார். அப்போது டிப்பரின் பெட்டியை உயர்தப்பட்டுள்ளது. அருகில் இருந்த மின்கம்பத்தில் டிப்பரின் பெட்டி தொடுகையடைந்ததால் மின்சாரம் பாய்ந்து ஜெகதீஸ்வரன் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்தில் மின்சாரம் தாக்கியதில் வவுனியாவைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்துள்ளனர். (ற-5,110)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17

**கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)




# ரேஞ்சர்ஸ் அணி அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஒக். 17

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5:2 என்ற கோல் கணக்கில் கொற்றவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## இலங்கை, இங்கிலாந்து 3ஆவது ஆட்டம் இன்று

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த இரண்டு ஆட்டங்களில் ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. மற்றொரு ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்று 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. இதனால் மூன்றாவது ஆட்டத்தில் (இன்று) வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் இன்று இலங்கை களமிறங்குகிறது. (ம)



## வெற்றிபெற்றது ஐயனார்

யாழ்ப்பாணம், ஒக். 17

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஐயனார் அணி வெற்றி பெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 8:7 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# வென்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் 76:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)



## டோனியைக் கடந்தார் பன்ட்

இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் பன்ட், முன்னாள் இலக்குக் காப்பாளர் டோனியின் சாதனையொன்றை முறியடித்தார். டோனி தனது முதல் 5 ஆட்டங்களில் 297 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். ஆனால் பன்ட் தனது முதல் 5 ஆட்டங்களில் 346 ஓட்டங்களை எடுத்துள்ளார். (ம)

## போராடி வென்றது நண்பர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடையார்கட்டு நண்பர்கள் அணி வெற்றிபெற்றது.
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# சந்திரன் அணி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 17
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சந்திரன் அணி வெற்றிபெற்றது. சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் செல்வபுரம் சந்திரன்; விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



## யாழ். சுப்பர் லீக்கில் பன்னாட்டு வீரர்கள்

### மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ்ப்பாணம் சுப்பர் லீக் ரி20 தொடர் சிறப்பான முறையில் நாம் எதிர்பார்த்த பயன்களை அடைந்தால் எதிர்காலத்தில் பன்னாட்டு வீரர்களையும் இணைத்து இப்படியான தொடர்களை நடத்த எண்ணியுள்ளோம் என யாழ்ப்பாணத் துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் சுப்பர் லீக் துடுப்பாட்டத் தொடருக்கான வீரர்கள் ஏலம் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் மணிவண்ணன். (ம-23)



தேசியமட்ட கராத்தே தொடரில்

## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்துக்கு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17
இலங்கை காரத்தே சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கராத்தே தொடரில் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்துக்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்தன. மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மாணவர்களான ஜெ.கிருபாகரன், சு.பிறேமிலன் இருவரும் 13 வயதுப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றனர். (ம-23)

## அம்லா விலகல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள், ரி20 தொடர்களில் இருந்து விலகினார் தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரரான அம்லா.
கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அண்மையில் நடைபெற்ற சிம்பாவேக்கு எதிரான தொடரில் அம்லா பங்குபற்றவில்லை. இந்தத் தொடரை அடுத்து தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாட வுள்ளது. காயம் குணமடையாததை அடுத்து அந்தத் தொடரில் இருந்தும் அம்லா விலகினார்.
உலகக்கிண்ணத் தொடரின்போது அம்லா முழு உடற்தகுதியுடன் இருக்க வேண்டும். அதைக் கருத்தில்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை அறிவித்தது. (ம)



## 9 விளையாட்டுக் கழகங்களுக்கு குகதாஸால் உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக்.17
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 9 விளையாட்டுக் கழகங்களுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் விளையாட்டு உபகரணங்களை வழங்கிவைத்தார்.
இந்த நிகழ்வு சுழிபுரத்தில் அண்மையில் இடம்பெற்றது.
வடமாகாண சபை உறுப்பினர் சபா குகதாசனின் நிதி ஒதுக்கீட்டில் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
சண் ஸ்ரார் (சுழிபுரம்), வசந்தசிறி (சண்டிலிப்பாய்), காரை சலஞ்சர் (காரைநகர்), வின் ஸ்ரார் (சங்கானை), கலைவாணி (வடலியடைப்பு சண்டிலிப்பாய்), கிழவித்தோட்டம் விளையாட்டுக்கழகம் (கரவெட்டி), நியூ லக்கிஸ்ரார் (காரைநகர்), பறாளய் விளையாட்டுக்கழகம் (சுழிபுரம் மத்தி), காரை கலைத் தென்றல் (காரைநகர்) என்ற ஒன்பது கழகங்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ம-21)

## இராணுவ பொலிஸ் அணி இறுதிக்குத் தகுதிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 17
மஞ்சி வெற்றிக்ண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் மயிலிட்டி இராணுவப் பொலிஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
ஆவரங்கால் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் மயிலிட்டி இராணுவ பொலிஸ் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது.
முதல் இரண்டு செற்களையும் 28:26, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இராணுவ பொலிஸ் அணி. மூன்றாவது செற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்திய அணி 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றியது. நான்காவது செற் 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இராணுவ பொலிஸ் அணியின் வசமாக முடிவில் அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

**வீடு வாடகைக்கு**

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சுண்டுக்குழி பெண்கள் பாடசாலைக்கு அருகில் உள்ள வீடு Annex ஆக வாடகைக்கு கொடுக்கப்படும்.

077 935 2775 (CS/20620) (11,17)

**BOND**
INTERNATIONAL SCHOOL - JAFFNA
MYLANI, CHUNNAKAM.

021 224 2910 | 077 583 3939

வரும் வெள்ளிக்கிழமை **விஜயதசமி** அன்று எமது பாடசாலையில் **ஏடு** தொடக்கும் நிகழ்வு நடைபெறும்.
**முற்பதிவுகளை உடனே மேற்கொள்ளுங்கள்**
அனுமதி இலவசம்



**விஜயதசமி புதிய பிரிவுகள் ஆரம்பம்**
Admissions OPEN
**50%** விலைக்கழிவுடன்

PLAY GROUP 1½ YEARS - 2 YEARS | LKG 2 YEARS - 3 YEARS
UKG 3 YEARS - 4 YEARS | PRE GRADE4 YEARS - 5 YEARS

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்...

**MASSIVE VEHICLES AUCTION SALE**

All Types Of Vehicles Including Two Wheel Tractors, Four Wheel Tractors, Harvesters, Motor Bikes, Lorries, Trucks, Three Wheelers In Excellent Condition

**23rd of October**

LOLC Vehicle Facility Centre
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,
**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

On View - 20th, 21st & 22nd October
(Please refer the Udayan On 19th of October 2018 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer.* *Celebrating 126 Years of Service Excellence.*

D.ads

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax- 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408,
Tel/ Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

யாழ். C.T.B பஸ் தரிப்பிடத்துக்குப் பின்பாக இலக்கம் 175, மின்சார நிலைய வீதியில் HNB வங்கிக்கு அருகில் 12 அடி அகலம், 100 அடி நீளம் கொண்ட தனிக் கடையும், யாழ். சிவகுருநாதன் வீதியில் 3½ பரப்பு வெற்றுக்காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 723 2535



**100 ஆவது சமாதி ஆண்டை முன்னிட்டு ஈழத்து சீரடி சாயி நாதனுக்கு சஹஸ்ர (1008) திவ்ய அபிஷேகம் (18.10.2018)**

அன்பான அடியார்களே!
18.10.2018 வியாழக்கிழமை

காலை 7.00 மணிக்கு - யாக கும்ப உத்வாகன பூசை,
சஹஸ்ர நாம அர்ச்சனை,
மஹா யாகம், உபசார ஹோமம்,
மஹா பூர்ணாகுதி

காலை 10.00 மணிக்கு - சஹஸ்ர திரவ்ய அபிஷேகம்,
பிரதான கலச புறப்பாடு,
ஆலய பிரவேசம் அபிஷேகம்,
அலங்காரம், அன்னதானம்.

**சாவடி ஊர்வலம் (பல்லக்கு சேவை)**

மாலை 6.00 மணியளவில் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி பான்ட் வாத்தியங்களுடன் வட இந்தியா சீரடியில் இடம்பெறுவது போல இடம்பெறும்.

அனைவரும் வருக! சாயி நாதன் அருள் பெற.

"ஈழத்து சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உபயகாரர்
திரு. திருமதி கிருபாகரன் தனித்தா குடும்பம்
(கிருபா லேனர்ஸ்)

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்

0768226243
**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| தெல்லிப்பழை 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | அல்வெட்டித்துறை 0776697960 |

விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111
உதயன்

**அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வுடன் விசேட பரிசுகள்...**




தங்கப் பவுண் ஒன்றுக்கு
ரூ. 43,000/- வரை...

சந்தை நிலவரங்களின் அடிப்படையில் குறிப்பிடப்பட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

011 200 88 88 www.seylan.lk *நிபந்தனைகளுக்குட்பட்டது.

Brand Finance Rating "A +" Fitch Rating: "A"-(lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.